23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 23 | பாலம் 20 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2013

# கனடா மாநாட்டை ஏன் பகிஸ்கரிக்கிறது

பொதுநலவாய அமைப்பின் விழுமியங்களை வலியுறுத்துவதற்காக மட்டுமே கனேடிய பிரதமர் இலங்கையில் நடைபெற இருக்கும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கிறார். பொதுநலவாய அமைப்பு எவ்வாறு பொதுநலவாய அமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு உறுதுணையாக நிற்காமல் இலங்கை போன்ற மனித உரிமை மீறல்களை செய்த, செய்து வருகின்ற நாட்டில் மாநாட்டை வைக்க அனுமதித்தது? அதுமட்டுமல்லாமல் எவ்வாறு அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கையை அந்த அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்று நடத்த அனுமதிக்கிறது? இதனால் கனடா தனது அதிருப்தியை பொதுநலவாய அமைப்பிற்கு தெரிவிப்பதற்காகவே கனேடிய பிரதமர் இலங்கையில் நடைபெறவுள்ள இந்த தலைவர்களது மாநாட்டில் கலந்து கொள்ளாமல் பகிஸ்கரிக்கிறார்.



கனடாவின் வெளிவிவகார அமைச்சரான மதிப்பிற்குரிய யோன் ஃபியர்ட் (John Baird) ஒட்டாவாவில் இருந்து வெளிவரும் ‘iPolitics’ என்னும் இணையத்தள செய்தி நிறுவனத்திற்கு “நாங்கள் ஏன் இலங்கையில் நடைபெறும் மாநாட்டை பகிஸ்கரிக்கிறோம்” என எழுதியுள்ள கட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மனித உரிமைகளை மதிப்பளித்து நாட்டை ஜனநாயக முறையில் வழிநடத்தும் என முற்றுமுழுதாக நம்பினோம். ஆனால் அங்கிருந்து வரும் அறிக்கைகள் தற்போதும் நாடு முழுவதும் மனித உரிமைமீறல் நிகழ்வுகள் நடப்பதாகவும், எதிர்கட்சியினர் மற்றும் ஊடகவியலாளர்கள் சிறைப்படுத்தப்படுவ தாகவும், சிறுபான்மைமக்கள் துன்புறுத்தப் படுவதாகவும் மற்றும் சட்டவிரோத கொலைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கின்றன.

இவ்வருட முற்பகுதியில் பிரதம நீதியரசரின் பதவி பறிக்கப்பட்டது, சுதந்திரமாக நடைபெறும் நீதிபரிபாலனத்தின் மீதான தாக்குதலாகும். இது பொதுநலவாய அமைப்பின் ‘Latimer House’ கொள்கை மீதான மீறல் ஆகும். [பொதுநலவாய அமைப்பின் Latimer House கொள்கை என்பது நவம்பர் 2003 இல் நடந்த பொதுநலவாய தலைவர்களது மாநாட்டில் அமலுக்கு வந்த பொதுநலவாய அமைப்பினது சட்ட விதியாகும். இது ஒரு நாட்டில் உள்ள அரசாங்கத்தின் மூன்று முக்கிய கிளைகளான அரசசபை (Legislative), தலைமை அதிகாரி (Executive) மற்றும் நீதி நிர்வாகம் (Judicial) ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள தொடர்பும் அவர்களுடைய கடமைகள் பற்றிய விதியாகும்.]

முன்பு இந்த பொதுநலவாய அமைப்பின் கொள்கையை மீறிய நாடுகள் பொதுநல வாய அமைப்பால் தண்டிக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கை இவ்விதியை மீறியும் பொதுநலவாய அமைப்பு அமைதியாக இருக்கிறது. ஐ.நா சபையின் அறிக்கை களின்படி இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு சண்டையின் இறுதி ஐந்து மாதங்களிலும் நடைபெற்ற 40,000 பொது மக்களது மரணத்திற்கு இலங்கை அரசு காரணமாக இருந்துள்ளது. இது தொடர்பாக எந்த சுதந்திரமான விசாரணையையும் இதுவரை இலங்கை அரசு மேற்கொள்ள வில்லை என செப்ரெம்பரில் இலங்கை சென்றுவந்த ஐ.நா மனித உரிமை உயர் ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசு, தான் கூறியவாறு தான் அமைத்த LLRC குழுவின் அறிக்கையை அமல்படுத்தவில்லை. சர்வாதிகாரப் போக்கில் போகும் இலங்கை அரசுமீது பொதுநலவாய அமைப்பு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கத்தவறிவிட்டது. ஆனால் கனடிய அரசோ பலவிதத்தில் இலங்கை அரசினை மனித உரிமைகளை மதிப்பளிக்குமாறு வலியுறுத்தி வந்துள்ளது. இலங்கையில் அமைதியும் சமாதானமும் திரும்ப வேண்டும் என கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து கனடா முயற்சி செய்து வருகிறது. கனடா இலங்கையின் உண்மை நிலையை அறிந்துவர Chris Alexander, Rick Dykstra மற்றும் Senator Vern White கொண்ட ஒரு குழுவை முன்னர் அனுப்பியிருந்தது. கடந்த ஜனவரியில் அமைச்சர் Jason Kenney யும் இலங்கை சென்று வந்துள்ளார். கனடாவின் பொதுநலவாய அமைப்பின் விசேட தூதுவரான Hugh Segal உம் கடந்த மார்ச்சில் இலங்கை சென்றிருந்தார்.

கனடா இவ்வாறு பல முயச்சிகளை மேற்கொண்டும் இலங்கை அரசின்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# கனடா.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நடவடிக்கைகளில் எந்தவித முன்னேற்றமும் தெரியவில்லை. இதுவரை இலங்கைஅரசை பொதுநலவாய அமைப்பின் விதிகளை பின்பற்றுமாறு வலியுறுத்தி கனடா எடுத்த நடவடிக்கைகளில் சில பின்வருமாறு.

- 30 க்கும்மேற்பட்ட இலங்கை நிலவரம் தொடர்பான பொது அறிவித்தல்களை கனடிய அரசு வெளியிட்டுள்ளது.
- கனேடிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான 10 வெவ்வேறு விதமான தலையீடுகளுக்கு பதில் அளித்துள்ளது.
- பொதுநலவாய அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல பன்னாட்டு மன்றங்களில் 25 தடவைக்கு மேல் இலங்கை நிலவரம் பற்றி கனடா அறிக்கை சமர்ப்பித்துள்ளது.
- இலங்கை உட்பட பல பொதுநலவாய அமைப்பில் உள்ள நாடுகளுடன் இருதரப்பு தொடர்புகளை இலங்கை விவகாரம் சம்பந்தமாக கனடா 89 தரம் மேற்கொண்டுள்ளது.

மேற்கூறிய எந்த ஒரு நடவடிக்கையும் இலங்கை அரசில் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. கனடிய அரசியல் கட்சிகள் எல்லாமே இது விடயத்தில் ஒருமனதாகவே இருக்கின்றன. எமது நடவடிக்கை பொதுநலவாய அமைப்பின் கொள்கையை மதிப்பளிப்பதாகவும், பொது நலவாயநாடுகளுக்கு பிரித்தானியாவுக்கு அடுத்தபடியாக பெருமளவு நிதி உதவி வழங்கும் நாட்டின் குரலாகவும், பொதுநலவாய அமைப்பின் விழுமியங்களை வலியுறுத்துவதாயும் அமையும்.

எமது கொள்கையில் எந்தவித தார்மீக தெளிவின்மைக்கும் இடமில்லை. நாங்கள் எப்பொழுதும் குரல் கொடுக்க முடியாதவர்களுக்காக குரல் கொடுப்போம். நாம் தொடர்ந்தும் இலங்கை வாழ் மக்களுடன் தொடர்பில் இருப்போம். இலங்கை வாழ் மக்களுக்கு அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் உரிமைகள் கிடைப்பதற்காக செயற்படுவோம். உண்மையை தெளிவுபடுத்தவும் மற்றைய உறுப்புநாடுகளுக்கு எமது நிலையை தெரிவிக்கும் முகமாகவும் கனடாவின் சார்பில் வெளிவிவகார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளரான Deepak Obhrai ஐ இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய தலைவர்களது மாநாட்டில் பங்குபற்ற அனுப்புகிறோம். இலங்கை மக்களுக்கு ஒரு விடிவுகாலம் வரும்.

இவ்வாறு கடந்த ஒக்ரோபர் 11, 2013 இல் யோன் ஃபியர்ட் அவர்கள் iPolitics இற்கு எழுதியிருந்தார்.




# வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடையலாமா? - வீரகேசரி

தமிழ் சமுதாயம் பாரிய பின்னடைவு காண்பதற்கும், சொல்லொண்ணா துன்பங்களுக்கு முகம்கொடுத்து வருவதற்கும் பிரதான காரணம் தமிழ் மக்களிடையே காணப்படும் ஒற்றுமையீனங்களும் விட்டுக் கொடுக்காத தன்மையும் காட்டிக் கொடுப்புக்களுமேயாகும். இதன் காரணமாகவே எந்தவொரு இலக்கையோ, நோக்கத்தையோ அடைய முடியாதுள்ளது. இது இன்று நேற்றன்று, தொன்று தொட்டு தொடர்ந்து வருவதும் தெரிந்த விடயமாகும். குறைந்தபட்சம் தமிழ் மக்கள் கண்முன்னே எதிர்நோக்கிய பேரவலத்தின் பின்னராவது தமிழ் சமூகம் திருந்தியிருக்குமா? என்று பார்த்தால் அதற்கும் வழியில்லை என்பதைப் போன்றே அடுத்தடுத்து நடக்கும் சம்பவங்கள் அமைந்துள்ளன.



வட மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இந்த சத்தியப் பிரமாணம் இடம் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் உறுப்பினர்களும் அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். மாகாண சபையின் அமைச்சர்களை நியமிப்பதில் நீடித்த இழுபறியைத் தொடர்ந்து ஒருவாறாக வெள்ளிக்கிழமை இந்தப் பதவிப் பிரமாணம் இடம்பெற்றது.

வட மாகாண சபையின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 7ம் திகதி அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அதனையடுத்து கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள தனது புதிய அலுவலகத்தில் கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வட மாகாண சபையின் தவிசாளராக இலங்கை தமிழரசுக் கட்சியை (யாழ்ப்பாணம்) சேர்ந்த சி.வீ.கே. சிவஞானமும், பிரதி தவிசாளராக இலங்கை தமிழரசுக் கட்சியை (முல்லைத்தீவு) சேர்ந்த அன்ரன் ஜெயநாதனும், சுகாதார அமைச்சராக இலங்கை தமிழரசுக் கட்சியை (வவுனியா) சேர்ந்த வைத்திய கலாநிதி பி. சத்தியலிங்கம், கல்வி, கலாசார அமைச்சராக இலங்கை தமிழரசுக் கட்சியை (கிளிநொச்சி) சேர்ந்த தி. குருகுலராஜா, விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம், சூழல் அமைச்சராக ஈ.பி.ஆர்.எல்.எப். ஐ (யாழ்ப்பாணம்) சேர்ந்த பி. ஐங்கரநேசன், மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சராக ரெலோவை (மன்னார்) சேர்ந்த டெனீஸ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள் தெரிவு குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீண்ட விளக்கம் ஒன்றையும் அளித்துள்ளார். அதன்படி பலருக்குத் தகைமை இருந்தும் சிலருக்கே அமைச்சுப் பதவிகள் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும் பிரதேச பிரதிநிதித்துவம், கட்சி அடிப்படை, நிர்வாகப் பொறுப்புக்களின் அந்நியோன்யம், மக்களின் ஆதரவு என்பன கருத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மொத்தமாக 30 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சி 14 உறுப்பினர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எப். 6 உறுப்பினர்களையும், ரெலோ 5 உறுப்பினர்களையும், புளொட் இரண்டு உறுப்பினர்களையும், ரி.யு.எல்.எப். 1 உறுப்பினரையும், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் 1 உறுப்பினரையும் கொண்டுள்ள அதேவேளை, பொதுவேட்பாளர் உட்பட 30 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் சிலர் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஈ.பி.ஆர்.எல்.எப். இல் அங்கம் வகிக்கும் 5 உறுப்பினர்களும் புளொட்டில் அங்கம் வகிக்கும் 2 உறுப்பினர்களும் ரெலோவில் அங்கம் வகிக்கும் 2 உறுப்பினர்களுமாக ஒன்பது உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை எனத் தெரிய வருகிறது. வட மாகாண சபை அமைச்சரவையில் ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கு அமைச்சுப் பதவி வழங்கவில்லை. மாறாக தனிப்பட்ட நபர் ஒருவருக்கே வழங்கிவிட்டு அதனை கட்சிக்கு வழங்கியதாக கூறுவது தவறான செயற்பாடாகும் என அக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எவ்வாறிருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நெருக்கடியான நிலைமைகள் தோன்றியுள்ளமையையே இது வெளிச்சம் போட்டுக் காட்டும் விடயமாக உள்ளது என்பதில் சந்தேகமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாகச் செயற்படும் என்ற நம்பிக்கையிலும் எதிர்பார்ப்பிலுமே தமிழ் மக்கள் தமது வாக்குகளை வழங்கி அவர்களின் வரலாறு காணாத வெற்றிக்கு வழிவகுத்தார்கள். இந்நிலையில் கூட்டமைப்புக்குள் குத்து வெட்டுக்கள் உருவாகுமானாலோ, கருத்து வேற்றுமைகள் மேலோங்குமானாலோ அது

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com www.tamilvanakkam.com


Dr. Bhaminy Mohendran
Dentist
7595 Markham Rd, #4
(Markham & 14th Ave.)
905 201 8900
1200 Markham Rd, #119
(Markham & Ellesmere)
416 289 7187
Opened 7 days a week

# கனடா ஒரு கண்ணோட்டம்

## கடந்த இதழ் தொடர்ச்சி

### கூட்டாட்சி அரசாங்கம்

1. கனடாவின் அரசுத் தலைவர் யார்?
2. அரசியின் பிரதிநிதியாகக் கனடாவில் செயற்படுபவர் யார்
3. ஆளுநர் அதிபதியின் பெயர் என்ன?
4. அரசியின் பிரதிநிதியாக மாகாணங்களில் செயற்படுபவரின் பதவிப் பெயர் என்ன?
5. கனடாவின் ஆட்சி முறைமை எப்படிக் குறிப்பிடப்படுகிறது?
6. நாடாளுமன்றத்தின் மூன்று கூறுகளும் எவை?
7. ஆட்சிக் கூறுகள் வேறுபடும் விதத்தை விளக்குக.
8. ஒரு சட்டம் நிறைவேற்றப்பட முன்னர் எப்படிக் குறிப்பிடப்படுகிறது?
9. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படித் தெரிவு செய்யப்படுகிறார்கள்.
10. நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருடைய பிரதிநிதிகள்?
11. ஒரு முன்மொழிவு எப்படிச் சட்டமாகிறது?
12. கனடாவில் இயங்கும் ஆட்சிக் கூறுகள் மூன்றும் எவை?
13. ஒவ்வோர் ஆட்சிக் கூறினதும் பொறுப்புகள் இரண்டைக் குறிப்பிடவும்.
14. முழுக் கனடாவினதும் அரசாங்கம் எப்படிக் குறிப்பிடப்படுகிறது?

### கூட்டாட்சி அரசாங்கத் தேர்தல்கள்

1. கனடாவில் எத்தனை தேர்தல் தொகுதிகள் காணப்படுகின்றன?
2. நீங்கள் எந்தத் தேர்தல்தொகுதியில் வசிக்கிறீர்கள்?
3. கூட்டாட்சி அரசாங்கத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை உடையோர் யார்?
4. நீங்கள் ஒரு கூட்டாட்சி அரசாங்கத் தேர்தலில் வாக்களிப்பதற்குரிய தகுதிகள் மூன்றும் எவை?
5. ஒரு கூட்டாட்சி அரசாங்கத் தேர்தல் வாக்குச் சீட்டில் என்ன எழுதப்பட்டுள்ளது?
6. ஒரு கூட்டாட்சி அரசாங்கத் தேர்தல் வாக்குச் சீட்டில் நீங்கள் எதனை இடுகிறீர்கள்?
7. ஒரு தேர்தலின் பின்னர் அரசாங்கம் எவ்வாறு அமைக்கப்படுகிறது?
8. பிரதம அமைச்சர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்?
9. அரசியல் யாப்பின்படி ஒரு தேர்தல் எப்பொழுது நடத்தப்பட வேண்டும்?
10. மக்களவையில் இடம்பெற்றுள்ள கூட்டாட்சி அரசியல் கட்சிகள் அனைத்தையும், அவற்றின் தலைவர்கள் அனைவரையும் குறிப்பிடுக?
11. எந்தக் கட்சி நேரெதிர்க் கட்சி ஆகும்?
12. எதிர்க்கட்சிகள் வகிக்கும் பங்கு என்ன?
13. கூட்டாட்சி அரசில் எந்தக் கட்சி நேரெதிர்க் கட்சி ஆகும்?
14. கனடா பிரதம அமைச்சரின் பெயரையும் அவருடைய கட்சியையும் கூறுக.
15. உங்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரையும், அவர் சார்ந்துள்ள கட்சியின் பெயரையும் கூறுக.
16. வாக்காளர் தகவல் அட்டை என்றால் என்ன?
17. கூட்டாட்சி அரசாங்கத் தேர்தல்களில் ஒரு வேட்பாளராகப் போட்டியிடும் உரிமை யாருக்கு உண்டு?
18. ஒரு கூட்டாட்சி அரசாங்கத் தேர்தலில் கனடியர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள்?
19. அரசியல் கட்சிகளின் அலுவல்கள் எவை?
20. கூட்டாட்சி அரசியலில் எந்தக் கட்சி ஆளும் கட்சி?
21. முதவை உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்கள்?
22. நீங்கள் வாக்களிக்கும் திகதியையும் இடத்தையும் தெரிவிக்கும் வாக்காளர் தகவல் அட்டை ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ளா விட்டால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்?
23. ஒரு கூட்டாட்சி அரசாங்கத் தேர்தலை அடுத்து புதிய அரசாங்கத்தை அமைக்கும் கட்சி எது?

### பிரிவு II. உங்கள் புலம் பற்றிய வினாக்கள்

1. நீங்கள் வாழும் மாகாணத்தின் அல்லது ஆள்புலத்தின் தலைநகரம் எது?
2. உங்கள் புலத்தின் பொருள் வளத்துக்கு முக்கியமான இயற்கை வளங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3. உங்கள் மாநகர மன்றாளர் அல்லது நகர மன்றாளர் அல்லது ஊராட்சி மன்றாளர் அல்லது பிரதேச மன்றாளர் யார்?
4. உங்கள் மாநகராதிபதியின் பெயர் என்ன?
5. யார் உங்கள் மாகாணப் பிரதிநிதி (சட்டப் பேரவை உறுப்பினர் அல்லது மாகாண ஆட்சிமன்ற உறுப்பினர் அல்லது தேசிய பேரவை உறுப்பினர் அல்லது பேரவை உறுப்பினர்)?
6. உங்கள் மாகாணத்தின் அல்ல ஆள்புலத்தின் பிரதமருடைய பெயர் என்ன?
7. உங்கள் மாகாணத்தை அல்லது ஆள்புலத்தை ஆளும் அரசியல் கட்சி எது?
8. உங்கள் மாகாணத்து எதிர்க்கட்சித் தலைவரின் பெயர் என்ன?
9. உங்கள் உப ஆளுநரின் அல்லது ஆணையாளரின் பெயர் என்ன?

இவை கற்க வழிகாட்ட வகுத்த வினாக்கள். உங்கள் குடியுரிமைத் தேர்வில் இத்தகைய வினாக்கள் இடம்பெறும்.



### மாதிரி வினா

இவ்வினாவுக்கு விடை கூறுக. சரியான விடைக்கு அருகில் உள்ள எழுத்துக்கு வட்டமிடுக.

கனடியக் கொடியின் நிறம் என்ன?

அ) சிவப்பு, வெள்ளை, நீலம்
ஆ) சிவப்பு, வெள்ளை
இ) நீலம், வெள்ளை
ஈ) சிவப்பு, இளமஞ்சள், பச்சை

இவ்வினாவுக்குரிய விடை:
(ஆ). நீங்கள் பின்வருமாறு (ஆ)வுக்கு வட்டமிட்டிருக்க வேண்டும்:
ஒவ்வொரு வினாவுக்கும் ஒரேயொரு விடையே சரியானது. முற்றும்

- மணி வேலுப்பிள்ளை

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# எது முக்கியம் - செய்யும் செயலா? செய்யும் விதமா?

## சத்குருவுடன் சேகர் கபூர்



சத்குரு வாசுதேவ்

நாம் ஒரு கோவிலை கட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தச் செயலை மன அழுத்தத்தோடு செய்வதால் என்ன பயன் வந்துவிடப் போகிறது.

என்ன செய்கிறோம் என்பது முக்கியமா? எப்படிச் செய்கிறோம் என்பது முக்கியமா? சத்குரு என்ன சொல்கிறார். தொடர்ந்து படியுங்கள்.

**சேகர்:-** நீங்கள் இதுவரை இறந்த பின் என்ன நடக்கிறது என்று விளக்கிய விதம் மிகவும் எளிமையாக இருந்தது. ஆனால் உண்மையில் அது மிகவும் சிக்கல் நிறைந்தது என நினைக்கிறேன்.

**சத்குரு:-** ஆம். உங்களுக்காக எளிமைப்படுத்தி கூறுகிறேன்.

**சேகர்:-** சரி.

**சத்குரு:-** இந்தப் பிரபஞ்சம் ஒருமையின் அடிப்படையில் தான் இருக்கிறது. ஆனால் இப்போது நமது உரையாடல் கேள்வி, பதில் என்று இருமையின் அடிப்படையில்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

இருக்கிறது. ஆனால் அது உண்மை யில்லை. ஆனால் அப்படி இரண்டுவிதமாக இல்லையென்றால் பிறகு கேள்வி பதில் என்பதே கிடையாது. கால்பந்து விளையாட்டு என்பது கிடையாது. திருமணம் என்பது கிடையாது. ஒன்றும் இருக்காது. சரியா? எனவே இந்தப் பிரபஞ்சத்தின் ஒருமைதான் எப்போதும் அடிப்படை. ஆனால் விளையாட்டு என்பது எப்போதும் இருமை தான். இருமை எப்போதும் தவறு இல்லை. இது விளையாட்டு மட்டுமே என்று நீங்கள் அறிந்திருக்கும் வரை.

**சேகர்:-** நான் ஒரு படத்தில் பிரபஞ்சம் என்று ஒரு பாத்திரத்தை உருவாக்கினால் அந்த பாத்திரம் இப்படித் தான் பேசும் என்று நினைக்கிறேன். "நான் ஒன்று தான். ஆனால் நான் விளையாடுவதாக இருந்தால் இரண்டாக மாற வேண்டும். அடிப்படையாக பார்த்தால் நான் ஒன்று தான்."

**சத்குரு:-** ஆமாம்.



**சேகர்:-** கடைசியாக ஒரு கேள்வி. மனஅழுத்தம் பற்றியும் சொல்லி விடுங்களேன். ஏனெனில் அதைப்பற்றி சத்குருவுடம் ஏன் கேட்கவில்லை என்று மக்கள் என்னைக் குடைந்து விடுவார்கள்.

**சத்குரு:-** நான் முதலில் அமெரிக்காவிற்கு சென்றபோது ஒவ்வொருவரும் மனஅழுத்தம் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். எனக்கு முதலில் புரியவில்லை. அப்புறம் தான் புரிந்தது. அங்குள்ள மனஅழுத்தம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி என்பதாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று.

மனஅழுத்தம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி அல்ல. அது உங்கள் வேலையின் காரணமாக வருவதல்ல. அது உங்களை நீங்கள் நிர்வகிக்க தெரியாததால் வருகிறது. நாட்டின் பிரதமரிலிருந்து அடிப்படை ஊழியர் வரை அனைவருமே மன அழுத்தம் பற்றி பேசுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் வேலையில்லாமல் இருப்பவர்கள் கூட மனஅழுத்தம் குறித்து பேசுகிறார்கள். ஒருவருக்கு ஒரு வேலை மனஅழுத்தத்தை கொடுக்கிறது. அதே வேலையை இன்னொருவர் சுலபமாக செய்து விடுகிறார். எனவே மனஅழுத்தம் வேலையிலிருந்து வருவதில்லை. அது உங்களை நீங்கள் நிர்வகிக்க தெரியாததால் வருகிறது.

**சேகர்:-** சரியாக சொன்னீர்கள்.

**சத்குரு:-** அடிப்படையாக, வாழ்க்கையில் நாம் என்ன செயல் செய்கிறோம் என்பதை விட அந்த செயலை எப்படி செய்கிறோம் என்பதில் தான் நம் வாழ்க்கையின் தன்மை அமைகின்றது. ஒரு ஊரில் மூன்று பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த ஒரு வழிப்போக்கன் முதல் நபரிடம் "நீ இங்கே என்ன செய்து கொண்டு இருக்கின்றாய்?" என்று கேட்டார். அந்த நபர் நிமிர்ந்து பார்த்து "பார்த்தால் தெரியவில்லையா? நான் கல் கொத்திக் கொண்டு இருக்கிறேன். உனக்கு என்ன கண் குருடா?" என்று கேட்டார்.

உடனே அந்த நபர் அடுத்தவரிடம் சென்று "நீ இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டார். அவர் உடனே நிமிர்ந்து பார்த்து "ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக செய்கிறேன். அவர்கள் என்ன செய்ய சொல்கிறார்களோ அதை செய்வேன். அவ்வளவு தான்" என்று சொன்னார்.

அடுத்து அவர் மூன்றாவது நபரிடம் சென்று "நீ இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு அந்த மூன்றாவது நபர் ஆனந்தமாக எழுந்து நின்று "நான் இங்கே ஒரு அழகான கோவிலை உருவாக்கிக் கொண்டு இருக்கிறேன்." என்று சொன்னார். அவர்கள் எல்லோருமே ஒரு வேலையை தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்த ஒரே வேலையை மூன்று பேருமே மூன்று விதமாக உணர்கிறார்கள். அதற்கேற்றாற் போல் தான் அவர்கள் வாழ்க்கையின் தன்மையும் அமைகிறது. எனவே எளிமை யான செயல் செய்கிறீர்களா? அல்லது மிகவும் கடினமான செயல் செய்கிறீர்களா? என்பதை விட செய்யும் வேலையை எப்படி செய்கிறீர்கள் என்பது தான் முதல் தன்மை தன்மையை நிர்ணயிக்கிறது.

**சேகர்:-** மிகவும் சரி! சத்குரு. இது ஒரு துவக்கம் மட்டும் என்று நான் நினைக்கிறேன். இன்னமும் நிறைய கேள்விகளுடன் மீண்டும் வருவதற்கு நீங்கள் எனக்கு வாய்ப்பளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**சத்குரு:-** (சிரிக்கிறார்) நிச்சயமாக

**சேகர்:-** நன்றி மிக்க நன்றி.

**பௌர்ணமி தேவி பூஜை**

காலம்: *October 18, 2013*
நேரம்: *6:30 pm*
இடம்: *J & J Best Western Banquet Hall*
*1468 Victoria Park Ave.*
*Victoria Park & O'Connor*
*Toronto, ON - M4A 2M2*

Contact: 416.300.3010




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

# மோட்கேஜ் கிளினிக்

சாமத்திய வீடு, கலியாண வீடு , பேர்த்டே பார்ட்டி எண்டு சமர் கொண்டாட்டங்கள்..

அதோட பிள்ளைட யூனிவேர்சிட்டி கடன் ......

கழுத்துக்கு மேல கடன் ..
கழுத்தில இருந்ததும் அடைவில...
என்ன செய்றது??? இதை எப்பிடி கட்டி முடிக்கிறது ??

அதுக்குள்ள அரங்கேற்றகடன் வேற......

எதுக்கும் உந்த மோட்கேஜ் கிளினிக்கிக்கு ஒருக்கா போய் பார்ப்பம்.



இன்னும் என்ன தயக்கம்,
இலவச ஆலோசனைக்கு
அழையுங்கள்



தயா (PK) கந்தையா BAS ABR AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001093
Cell : 416-716-8707

ஜெ (Jey ) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# வெண்ணெய்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கும் பேரினவாதிகளுக்கும் கடும் போக்காளர்களுக்கும் கிடைத்த சிறந்த தீனியாகவே இருக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் நிதானமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். மறுபுறம் இவ்வாறான கருத்து மோதல்களும் சச்சரவுகளும் வட மாகாண சபையின் நோக்கத்தையே தவிடுபொடியாக்கிவிடும் என்பதையும் மறந்து போகக் கூடாது.

குறைந்தபட்சம் மாகாண சபை தனது செயற்பாடுகளை தங்கு தடையின்றி ஆரம்பிப்பதற்கேனும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவது அத்தியாவசியமாகும். மாறாக குழப்பத்திலேயே ஆரம்பிக்குமானால் அதன் செயற்பாடுகள் திருப்திகரமாக அமைவதற்கு வழிபிறக்காமலும் போகலாம். மொத்தத்தில் அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்துவது என்பது இயலாத காரியமாகும். வட மாகாண சபை சுமார் மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் உருவாகியுள்ளது. அதன் சீரான இயக்கத்திற்கு அதன் உறுப்பினர்கள் பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குவது அவர்களின் தார்மீகக் கடமையாகும். அதனையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனைவிடுத்து தங்களுக்குள்ளேயே முட்டி மோதி, அதன் செயற்பாட்டிற்கு அவர்களே தடைக்கல்லாக இருப்பார்களேயானால் அது தென்னிலங்கை சக்திகளின் எதிர்பார்ப்புக்கு களம் அமைத்துக் கொடுத்தார்கள் என்ற அவப் பெயரையே அவர்களுக்குத் தேடிக் கொடுப்பதாக அமையும். வட மாகாண தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைந்த வெற்றியைக் கண்டு உலகமே வியந்து நிற்கும் இன்றைய சூழ்நிலையில் மீண்டும் வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாக எவரும் செயற்படுவார்களேயானால் அதனை தமிழ் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்க மாட்டாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். வட மாகாண சபையை நிர்வகிப்பது மாத்திரமன்றி அதன் சீரான செயற்பாட்டை உறுதி செய்வதும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் முன்னால் எழுந்துள்ள பாரிய சவாலாகும். அவர் தனது அனுபவத்தையும் திறமையையும் பயன்படுத்தி எவ்வாறு கொண்டு செல்லப் போகின்றார் என்பதை சர்வதேசம் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இந்தக் கட்டத்தில் துயரங்களின் விளிம்பிற்கே சென்ற தமிழ் மக்களின் மீட்சிக்கேனும் நம்பி வாக்களித்த அந்த மக்களைக் கைவிடாது, மாகாண சபை உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்பதை மிகுந்த மனிதாபிமானத்துடன் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.



## விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைதான் ஒற்றுமையையும் தமிழர்களுக்கான உரிமையையும் தீர்வையும் பெற்றுத்தரும் - மன்னார் ஆயர்

அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒரு சிலர் கலந்து கொள்ளாமை கவலை தருவதும் கண்டிக்கத் தக்கதுமான விடயமாகும். மக்களின் நம்பிக்கைகளை வீணடிக்கும் முறையில் அவர்கள் நடந்து கொள்ளக்கூடாது என்று மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் தெரிவித்தார். வடக்கு மாகாண அமைச்சர்கள் பதவிப்பிரமாண வைபவம் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சம்பிரதாய பூர்வமாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களும் கலந்து கொள்ளாமை பற்றி தனது கவலையைத் தெரிவித்த போதே ஆயர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தனது கருத்தை தெரிவிக்கையில், வரலாற்றில் முதல் தடவையாக வடக்கின் அமைச்சர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பதவிப்பிரமாணத்தைக் கண்டு களிக்க ஏராளமான பொதுமக்கள் பிரசன்னமாயிருந்தமை கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்திருந்தோம்.

அதேவேளை, தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதற்காக ஒரு சில கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் கலந்து கொள்ளாமை கவலை தருகின்ற ஒரு விடயமாகும். அதேவேளை கண்டிக்கத்தக்க விடயமாகவும் உள்ளது. மக்கள் எந்தக் குறிகோளோடும் அபிலாசைகளோடும் இவர்களை தெரிவு செய்தார்களோ அதைப் பாழாக்கும் முறையில் இவர்கள் நடந்து கொண்டுள்ளனர். முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு முன்பாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டது பற்றி பல விதமான அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. முதலமைச்சர் தனது அனுபவத்தின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருக்கலாம். அரசாங்கத்துடன் பேசுவதன் மூலமே தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெறமுடியும் என்பதை சிந்தித்தே அந்த முடிவை மேற்கொண்டிருந்தார்.

அது மாத்திரமன்றி இலங்கை அரசுடன் பேச வேண்டும். சர்வதேச சமூகத்துடன் பேச வேண்டும். உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அப்போது தான் சம நிலையான ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும். அப்போது தான் தீர்வொன்றுக்கு வழிபிறக்க முடியும். அவர் அவ்வாறான ஒரு முடிவை எடுத்தது பற்றி நான் பெருமைப்படுகின்றேன். அவரின் தீர்க்கதரிசன முடிவை நாம் எல்லோரும் ஆதரிக்க வேண்டும். முதலமைச்சர் சத்தியப்பிரமாண வைபவத்துக்கும் கூட்டமைப்புக்குள் உள்ள பலர் சமூகமளிக்காமை கவலை தருகின்ற விடயமாகும். தேசியத் தன்மை வாய்ந்த சுயநிர்ணயத்துடன் கூடிய தீர்வொன்றை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். வடக்குக் கிழக்கை இணைத்த முறையில் காத்திரமான தீர்வொன்றை அடைய வேண்டு மென்பதற்காகவே அவரின் செயற்பாடுகள் அமைந்து காணப்படுகின்றன. வடக்கு கிழக்கு பிரிக்க முடியாத இணைவு கொண்டது. அந்தப் பிரதேசத்துக்கு தேசியத்தை ஏற்றுக்கொண்டு சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வொன்றை எங்களுக்குப் பெற்றுத் தருவார்கள் என்ற காரணமாகவே இந்த தேர்தலில் கூட்டமைப்புக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். எனவே இதற்காக உழைக்கின்ற, பாடுபடுகின்ற போக்கு அண்மையில் குறைந்து போனதாகவே காணப்படுகின்றது. மக்கள் அணிதிரண்டு தமிழ்த் தேசியத்துக்கு அளித்த ஆதரவும் நோக்கமும் தளர்ச்சி அடைந்து விடுமோ என நாம் இப்பொழுது அச்சம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே மக்களுடைய நம்பிக்கையை நாம் யாரும் வீணடிக்க கூடாது, பாழாக்கக் கூடாது. இதை மனதில் கொண்டே முதலமைச்சர் செயற்பட்டு வருகிறார் என நம்புகின்றோம். எனவே எமது கட்சிக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை, எனக்குக் கிடைக்கவில்லை என்பதனை மறந்து நாம் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். மொத்தத்தில் அமைச்சர் பதவி நான்கு மட்டுமேயுண்டு. இதை வெற்றி பெற்ற 30 பேருக்கும் பங்கிட முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தகைமையுள்ளவர்களுக்கும் திறமையுள்ளவர்களுக்கும் மட்டுமே அத்தகைய பதவிகளை வழங்க முடியும். அனுபவத்தின் அடிப்படையிலும் மக்களின் நம்பிக்கைக்கு உரிய முறையிலும் இப்பதவிகள் முதலமைச்சரினால் வழங்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும். எனவே கூட்டமைப்புக்குள் இருக்கின்றவர்கள் பதவிக்காகவோ அதிகாரத்துக்காகவோ போட்டி போடுவதையும் ஒருவரையொருவர் விமர்சிப்பதையும் விட்டொழித்து எமது இலக்கையும் மக்களின் அபிலாசைகளையும் நிறைவேற்ற ஒன்றுபட்டு நில்லுங்கள் என மக்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன். இவ்வாறானதொரு சூழ்நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்காக கூட்டமைப்புக்குள் அங்கம் பெறும் ஐந்து கட்சிகளையும் ஒன்று சேர்த்த முறையில் புதிய வேண்டுமென்ற கனவைக் கண்டு கொண்டிருக்கிறோம். அதற்கு எல்லோரும் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை தான் ஒற்றுமையையும் தமிழர்களுக்கான உரிமையையும் தீர்வையும் பெற்றுத் தரமுடியும். எனவே தனித்துவ சிந்தனைகளை மறந்து பொதுச் சிந்தனையை வளர்க்க தனி தன்மையை விட்டு பொது நன்மையை வென்றெடுக்க ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

# நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 400

“வெள்ளம் வரும் முன்பே அணை கட்டுதல் வேண்டும்” என்றொரு முதுமொழி உண்டு. எதற்கும் முன்னைய ஏற்பாடு, சிக்கல்களிலிருந்து தவிர்ப்பதற்கான வழிமுறை எனக் கொள்ளலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு விடயத்திற்கும் இது பொருந்தும். இளவேனிற் காலத்திலிருந்து குளிர்காலம் விரைவில் வர உள்ளது. இதனால் நமது கனடிய வாழ்வு முறையில் சில மாறுதல் ஏற்படும். அதற்கேற்ப எம்மை தயார்படுத்தல் வேண்டும். இதனால் சில ஏற்பாடுகள் நாம் வாழும் வீட்டிற்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக்கும் செய்வது சிறந்ததாகும். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம். முக்கியமாக எமது இல்லத்திற்கான முன்னேற்பாடுகள் சிலவற்றைப் பார்ப்போம்......

1. கூரை (Roof) - கூரையின் பகுதியில் ஏதாவது Shingles பழுதாகியுள்ளதா? அல்லது காற்றுடன் பறந்து விட்டதா? மரத்தின் இலைகள் கூரையின் பள்ளப் பகுதிகளில் சேர்ந்துள்ளதா? இவற்றை தேவைக்கேற்ப பழுதாகிய மற்றும் தவறிய Shingles ஐ பொருத்துதல், திருத்துதல், மற்றும் கூரையின் பள்ளமான பகுதிகளை சுத்தம் செய்தல் வேண்டும்.

2. மின் கேபிள் (Power cable) - இன்றைய காலத்தில் குறிப்பிட்ட சில வீடுகளில் மின் கேபிளானது மரத்தின் கிளைகளினூடாக வீட்டிற்கு வருவதனைக் காணலாம். அவ்வாறாயின் மரத்தின் கிளைகளை தகுந்தவாறு வெட்டிவிடுதல் சிறந்தது. இதனால் மின் கேபிளிற்கு தடங்கல்கள் ஏற்படாது.

3. சரளை றைவே (Gravel driveway) - வீட்டின் வெளிப்பகுதி Gravel ஆக இருந்தால் அதற்கு மேலதிக Gravel தேவைப்பட்டால், அவற்றை இப்பொழுதே நிவர்த்தி செய்தல் வேண்டும்.



4. கூரையின் ஓரத்தில் கிடையாக செல்லும் திறந்த குழாய் (Eaves Troughs) - இவை இலைகளால் நிரவி இருக்கலாம். நிச்சயம் துப்பரவு செய்தல் வேண்டும்.

5. ஜன்னல் ஓரங்களில் உள்ள Caulking ஐ சிறந்த முறையில் பராமரித்தல் வேண்டும். குளிர்காலத்தில் வெப்ப இழப்பை குறைக்கலாம்.

6. வீட்டின் வெளிப்பகுதியிலுள்ள மின் குமிழ்கள் (Bulbs), இயக்க உணரிகளை (motion sensors) ஐ சரிசெய்தல் வேண்டும்.

7. வீட்டில் கழிவுநீர் தொட்டி (Sump pump) இருந்தால் வேலை செய்யும் நிலையில் உள்ளதா என சரிபார்த்தல் வேண்டும்.

8. Snow ஐ துப்பரவு செய்தவற்கான பொருட்களை குறிப்பிட்ட பகுதியில் வைத்திருத்தல் நல்லது.

9. வாகனம் தரிக்கும் இடத்தில் (Drive way) ஏதாவது வெடிப்புகள் அல்லது சில பகுதி பாதிப்புக்குள்ளாகப்பட்டிருந்தால் அவற்றை சீர்செய்தல் வேண்டும்.



10. வெளியே இருக்கும் உதாரணமாக Air conditioner போன்றவற்றை தகுந்த முறையில் பராமரித்து மூடி வைத்தல் நல்லதாகலாம்.

11. சிறிய Evergreen போன்ற மரங்களை Burlap இனால் மூடிக்கட்டுதல் சிறந்தது.

12. வெளிப்பகுதியில் காணப்படும் தண்ணீர் வால்வு (water valve) ஐ திறந்து எதிராக வீட்டின் உள்ளே உள்ள valve ஐ மூடிவைத்தல் வேண்டும்.

### IDENTITY THEFT

தனிப்பட்டவர்களின் பிறந்ததிகதி, Social number, driving license, credit card போன்றவற்றை திருடும் சம்பவங்கள் இன்றைய காலத்தில் அதிகரித்திருப்பதால் இவற்றைப் பாதுகாப்பதில் மேலதிக கவனம் தேவை.

1. முக்கியமான Identification cardகளையும் ஒன்று அல்லது இரண்டு Credit card ஐயும் உங்களுடன் கொண்டு செல்லலாம். மீதியை வீட்டில் அல்லது பாதுகாப்பான இடத்தில் வைத்தல் நன்று.

2. காசோலைப்புத்தகம் (Cheque book) களவாடப்பட்டால் நிதி நிறுவனங்களிற்கு உடனே தெரியப்படுத்தல் வேண்டும்.

3. Credit card / Debit card போன்றவை கைகளிற்கு வந்ததும் அதன் மறுபகுதியில் உடனடியாக அழிக்கமுடியாத பேனாவால் ஒப்பமிட்டு வைத்திருத்தல் நல்லது.

4. பொருட்கள் வாங்கிய பின் Credit card / Debit card ஐ மறந்திடாமல் திருப்பி பெறுதல் வேண்டும். உங்களுடையதா என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.

5. எப்பொழுதும் வாங்கிய பொருட்களின்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

“கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது”



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto l.:416.321.6969

CONDO. FOR SALE
LAKESHORE & PARKLAWN
2 Bedroom condo. for sale.
2 Washroom. Balcony.
Close to all facilities.
Price $419,900



CONDO FOR SALE
MCCOWAN & ELLESMERE
2 Bedroom Condo for sale.
2 Washrooms.
Close to TTC, mall, school, bank.
Asking price $361,700



LESLIE & BLOOMINGTON
Over 5000 Sq.ft. 3 Parking.
Custom built home. Golfcourse + Natures area. Gated house. Only 74 neighbours. Avail. Summer 2014.

CONVENIENCE STORE FOR SALE
MIDDLEFIELD & FINCH
Well established store for sale.Grocery / Audio /CD/ video/ Lotto/Stamps.
Asking Price $89,000

CONDO. FOR SALE
NEILSON & MCLEVIN
1 Bedroom condo. for sale.
One Washroom.
Close to all facilities.
price$139,900



HOUSE FOR SALE
EGLINTON & MIDLAND
Free hold 2 storey town house for sale. Over 1600Sq.ft.
3 Bedroom finished bsmt.
Close to RH King School.
Asking Only 419,900



HOUSE FOR SALE
NEILSON & SHEPPARD
Semi detached 4 bedroom house for sale. 2 Storey.
Asking Only $299,900



# வாடகை தராதவர்களை எப்படி காலி செய்வது?

## கனடிய தகவல் தொடர் 206

**NOTICE TO END A TENANCY AGREEMENT EARLY FOR NON PAYMENT OF RENT**

**கடந்த செப்ரெம்பர் 25, 2013**

'ஆங்கில புலனாய்வு ஊடகவியலாளர்' (Investigative journalist) ஒருவர் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வாடகை குடியிருப்பில் நடந்த சம்பவம் தொடர்பான செய்திக் கட்டுரை ஒன்றினை வெளியிட்டிருந்தார். மோசமான வாடகை குடியிருப்பாளர் பொலிசாராலும், அதிகாரிகளினாலும் வெளியேற்றப்பட்டார். (Serial bad tenant evicted by sheriff & police) என்னும் தலைப்பில் படங்களுடன் இக்கட்டுரை வெளியிடப்பட்டிருந்து.

அந்த இரவு நேரம்,

- சட்டரீதியான உத்தரவில் குடியெழுப்பு வதனை அமல்படுத்தும் அதிகாரிகள் (The Sheriff)
- அவர்களுக்கு உதவியாக ஐந்து பொலிசார்
- உடனே கதவின் பூட்டினை மாற்றுவதற்கு அந்தத்துறை சார்ந்த தொழில் நுட்பவியலாளர் (Locksmith)
- வாடகை குடியிருப்பாளரின் வளர்ப்பு நாயை எடுத்து செல்ல ரொறொன்ரோ மிருக சேவை உத்தியோகத்தர் பிரிவு
- வீட்டு உரிமையாளர்

இப்படியொரு குழு அந்த வாடகை குடியிருப்பாளரை வெளியே அனுப்ப கடமையில் அன்று ஈடுபட்டனர்.

2011ஆம் ஆண்டு 'யூலை மாதம், நோர்த் யோர்க் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் குடியிருந்த அந்த பெண் வாடகைக்கு வழங்கிய முதல் மாத காசோலையினை தவிர மிகுதிக்காசோலைகள் யாவும் வங்கிக்கணக்கில் பணமின்றித்திரும்பி இருந்தது. மொத்தமாக $11,550 டொலர் இதுவரை செலுத்தப்படாத வாடகை பணமாகும்.

இவர் மோசடியான காசோலைகளை வழங்குவது, பொய்யான தொழில் செய்யும் இடங்கள் பற்றிய தகவல்களை (Employment history) வழங்குவது போன்ற குற்றங்களில் கை தேர்ந்தவர். 2005 ஆம் ஆண்டிலிருந்து சுமார் ஆறு வீடுகளில் வாடகைக்கு குடியிருந்து எழுப்பப்பட்டவர். இது போன்ற அவரைப்பற்றிய தகவல்கள் யாவும் புலனாய்வில் பெறப்பட்டிருந்தன. அத்துடன் வாடகைக்கு குடியிருந்த மனை சரியான பராமரிப்பின்றி உருக்குலைந்த நிலையிலேயே காணப்பட்டது.

அமைதியான முறையில் அவகாசங்கள் பல வழங்கப்பட்டும், இடத்தினை காலிசெய்யச் சொல்லி சட்டரீதியான எச்சரிக்கைகள் தொடர்ந்து வழங்கப்பட்டும், அது தொடர்பாக செவிசாய்க்காத இறுதி நிலைப்பாடே அன்றைய இரவு நடந்தது என்பதனை அந்த செய்திக் கட்டுரை யிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இந்த செய்திக் கட்டுரையினை அடிப்படையாக வைத்து இதே மாதிரியான பிரச்சினைகளை கனடாவில் எதிர்கொள்ளும் போது, அறிந்து கொள்ள வேண்டிய சட்டங்களையும் அணுகுமுறைகளையும் ஆராய்ந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் உருவானது. வீடுகளை வாடகைக்கு வழங்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு, வாடகை குடியிருப்பாளர்களினால் பிரச்சினைகள்,




தொல்லைகள் ஏற்படுகின்ற போது சட்டரீதியான வழிகாட்டலுக்காக ஒரு லாப-கரமற்ற நிறுவனம் ரொறொன்ரோவில் இயங்கி வருகின்றது. அதன் விபரங்களும், விலாசமும் பின்வருமாறு

***Landlord Help Center***
***425, Adelaide St. west, 4th floor***
***Toronto, Ontario M5V 3C1***
தொலைபேசி - ***(416) - 504.5190***
***1.800.730.3218***
தொலைநகல் - ***(416) 504.1932***
இணையதளம்- ***www.landlordselfhelp.com***

இந்த நிறுவனத்தின் வாடகை பணம் கொடுக்காமல் குடியிருக்கும் குடியிருப்பாளர் களுக்கு எதிராக எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகளின் படிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இது கனடாவில் இயங்கும் பின்வரும் நியாயமன்றத்திற்கு மனு செய்வதற்கு வழிகாட்டுகின்றது.

**வீட்டு உரிமையாளர் & வாடகை குடியிருப்போர் சபை**
(Landlord & Tenant board)

வீடுகள், காணிகள் உரிமையாளருக்கும், அங்கு வாடகைக்கு குடியிருப்போருக்கும் இடையில் உருவாக்கப்பட்ட கனடாவின் சட்டங்களையும், அதனை நடைமுறைப் படுத்தி, அவர்களுக்கிடையில் எழும் சச்சரவுகள், பிரச்சினைகள் தீர்த்து வைப்பதற்காக மாகாண அரசினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வரும் ஒரு நியாய சபையே இதுவாகும்.

வீட்டு உரிமையாளரும் தமது வாடகைக் குடியிருப்பாளருக்கு எதிரான முறைப் பாட்டினை இங்கு மனுச் செய்யலாம். வாடகைக்கு குடியிருப்போரும் வீட்டு உரிமையாளருக்கு எதிரான முறைப் பாட்டினை இங்கு மனுச் செய்யலாம். ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு போல நியாயம் இங்கிருந்து வழங்கப்படும். இந்நியாய சபையின் அலுவலகம் ரொறொன்ரோவில் மட்டும் பின்வரும் மூன்று இடங்களில் தற்போது இயங்குகின்றது.

Landlord & tenant board - East district office
2275, Midland Ave., unit #2
Toronto, Ontario M1P 3E7

Landlord & tenant board
North district office
47, Sheppard Ave., East, suti #700
Toronto, Ontario M2N 5X5

Landlord & Tenant board
South district office
79, St.Clair Ave. East, suit #212
Toronto, Ontario M4T 1M6

பொதுவாக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் பின்வருமாறு 1.888.332.3234 அல்லது (416)645.8080
இணையதளம் - www.ltb.gov.on.ca

**முதலாவது சட்ட நடவடிக்கை**
Forest stage legal action

வாடகைப்பணம் குறிப்பிட்ட தினத்தில் தரவில்லையானால் ஒரு சட்டரீதியான எச்சரிக்கையினை குடியிருப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்பதனையே மேல் குறிப்பிடப்பட்ட நிறுவனம் ஆலோசனையாக வழங்குகின்றது. வாடகை செலுத்தத் தவறியதால் வாடகை உடன்படிக்கை ரத்தாகும் அறிவிப்பு. இதனை ஆங்கிலத்தில் (Notice to end a tenancy early for non payment of rent). இதற்குரிய விண்ணப்பப்படிவத்தினை Form 4 'வீட்டு உரிமையாளர் & வாடகை குடியிருப்பாளர்' என்னும் இந்நியாய மன்றத்தின் இணையத்தினுள் இவ் எச்சரிக்கை உத்தரவின் விண்ணப்பப்படிவம் பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளவும். இவ் எச்சரிக்கை விண்ணப்பத்தில் 14 நாட்களுக்குள் வாடகை பணம் தரவேண்டும். இல்லையேல் இடம் காலி பண்ணப்படல் வேண்டும் என்ற சட்டத்தின் சாரத்துகள் யாவும் குறிப்பிடப்பட்டிருக்கும். முதலாவது அணுகுமுறையில் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அடுத்த கட்டமாக இரண்டாவது அணுகுமுறைக்கு செல்ல வேண்டும்.

**இரண்டாவது கட்ட நடவடிக்கை**
(2nd stage legal action)

14 நாட்களுக்குள் அனுப்பிய எச்சரிக்கை கடிதத்திற்கு மதிப்பு அளிக்கவில்லை யானால் மேற்குறிப்பிட்ட நியாய சபையின் விசாரணைக்கு $170 பணம் செலுத்தி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். விண்ணப்பம் அங்கீகரிக்க ஐந்து நாட்கள் எடுக்கும். தொடர்ந்து மூன்று, நான்கு கிழமைக்குள் இரு பகுதியினரையும் விசாரணைக்கு அழைப்பார்கள். இரு பக்க நியாயங்களையும் கேட்பார்கள். விசாரணையில் நியாயமாக வாடகைப்பணம் வழங்கவில்லையானால் 'உடனடியாக காலி செய்ய வேண்டும்' (Eviction order) என்ற உத்தரவினை வழங்குவார்கள். இந்த உத்தரவுக்கும் வாடகை குடியிருப்பாளர் பணிந்து போகவில்லையானால் போக வேண்டியதே அடுத்த கட்டமாகும்.

**மூன்றாவது கட்ட சட்ட நடவடிக்கை**
(3rd stage legal action)

இரண்டாவது கட்ட நடவடிக்கையில்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**
**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**

நந்தா ஐயாத்துரை
*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# லிபரல் கட்சி வேட்பாளருக்கான தேர்வு - ஸ்காபரோ வடக்கு *Scarborough-North*



எதிர்வரும் கனடா பாராளுமன்ற தேர்தலில் ஸ்காபரோ வடக்கு என்ற புதிய தொகுதியின லிபரல் கட்சி வேட்பாளருக்கான தேர்வில் லோகன் கணபதி ஆகிய நான் போட்டி யிடுகிறேன் என்பதை, என் உறவுகளான உங்களுக்கு இத்தால் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

மார்க்கம் மாநகரில், உங்கள் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் இரண்டு தடவைகள் கவுன்சிலராக தேர்வு செய்யப்பட்ட நான், எம் மண்வாசனையை அங்கு கொண்டு வந்து மாநகரசபை ஆட்சியில் ஓர் புதிய சகாப்தத்தை உண்டுபண்ணியதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எம் உறவுகளின் தேவைகளை நிறைவு செய்ய இந்தப் புதிய தொகுதி வாய்ப்பைத் தரும் என்ற நோக்குடன்தான் நான் இத்தேர்தலில், உங்கள் சார்பில், போட்டியிட முன்வந்துள்ளேன்.

கடந்த ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக ஸ்காபரோவிலும், மார்க்கத்திலும் வாழும் நான் கனடா அரசியலுக்கு புதியவனல்ல. 1997ல் கல்விச் சபை உறுப்பினருக்கான தேர்தலில் ஸ்காபரோ றூச்சில் போட்டியிட்ட நான் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மார்க்கம் நகரசபையில் கவுன்சிலராக இருந்து வருகிறேன் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த புதிய தொகுதி இன்னொரு சந்தப்பத்தை தமிழருக்கு தந்திருக்கின்றது. இந்த கனேடிய மண்ணில் எமது திறமையை வெளிப்படுத்த, எமது மனிதாபிமானக் கொள்கையை எடுத்துக்காட்ட ஓர் அரிய சந்தர்ப்பமாகத்தான் இதைப்பார்க்கிறேன்! அது மாத்திரமல்ல, மாநகரசபை ஆட்சியில் இரண்டு தடவைக-ளாக பணிபுரிந்து பல்லின மக்கள் வாழும் கனடாவில், மனித உரிமை, ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் பூமியில், அதை ஆட்சி புரியும் பாராளுமன்றத்தில் எனது பங்களிப்பு நிச்சயமாக பெருமை தரக் கூடியதாக அமையும் என்பதை நான் உங்களிடம் கூறுவதில் மகிழ்சியடைகிறேன். எனது வெற்றி தன்னலமின்றி மக்கள் நலன் பேண கடுமையாக உழைப்பவர்களின் வெற்றியாக அமையும்.

உங்கள் ஆதரவும், அன்பும் முன்பு போல் என்றும் இருக்கும் என நான் எண்ணுகிறேன். குறிப்பாக ஸ்காபரோ - வடக்கு (Scarborough - North) தொகுதியில் வாழ்பவர்கள் எனது இந்த முயற்சியை ஆதரித்து உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மாநகர ஆட்சியில் நான் பெற்ற அனுபவமும் தன்னால் பெற்ற அறிவும் என் புதிய பயணத்திற்கு உதவியாகவும் ஊக்க மளிப்பதாகவும் அமையும் என்பது திண்ணம்.

தங்கள் அன்புள்ள,
லோகன் கணபதி
ஒக்ரோபர் 07, 2013

# ஹரி ஆனந்தசங்கரி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடிவு! *Scarborough — Rouge Park*

ஸ்காபரோ ஒன்ராரியோ 'ஹரி ஆனந்தசங்கரி ஸ்காபரோ ரூஜ் பார்க் (Scarborough — Rouge Park) தொகுதியில் லிபரல் கட்சியின் வேட்பாளர் நியமனத்திற்கு வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார்.



'எனது முன்னைய அறிவிப்புக்குக் கிடைத்திருக்கும் அமோக ஆதரவு எனக்கு பெருமகிழ்வையளித்திருக்கிறது. ஸ்காபுரோ ரூஜ் பார்க் தொகுதியைச் சேர்ந்த மக்களின் பேராதரவை பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன். குறிப்பாக, இளையோர்களின் ஆதரவு எனக்கு மேலும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தந்திருக்கின்றது. அனைவரினதும் எதிர்பார்ப்பிற்கேற்ப ஒரு திறம்பட செயலாற்றக்கூடிய, பொறுப்புமிக்க ஒரு பிரதிநிதித்துவத்தை என்னால் வழங்க முடியும்' என்று மேலும் ஹரி தெரிவித்தார்.

'ரொரொன்ரோ பல்கலைக்கழகம், சென்ரான-ியல் கல்லூரி, அழகிய ரூஜ் தேசிய பூங்கா ஆகியவற்றை உள்ளடக்கிய ரூஜ் பார்க் தொகுதியில் பல ஆண்டுகள் வாழ்ந்து, பலசேவை அமைப்புக்களுடன் இணைந்து தொண்டாற்றியதுடன், இத்தொகுதி மக்களுடன் தொடர்ந்தும் இணைந்து செயல-ாற்றக் கிடைத்துள்ள இந்த மிக அரிய சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் உற்சாகம-டைந்துள்ளேன்' என்று அவர் மேலும் றினார்.

'எதிர்வரும் நாட்களில், இத் தொகுதியில் வாழும் மக்களின் நம்பிக்கையையும், நட்பையும் மேலும் பெற்று அவர்களுடன் வேலை செய்வதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்' என்றார் ஹரி.

'இந்தத் தேர்தல் எங்களுடைய சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்காலம் பற்றியது. இது கருத்துக்களைப் பரிமாற்றம் செய்யக்கூடிய ஓர் தேர்வாக இருக்கும்.' என்று நிறைவு செய்தார் ஹரி ஆனந்தசங்கரி.

மேலதிக தகவல்களுக்கும் நேர்காணல்களுக்கும்:
ஹரி ஆனந்தசங்கரி: 416-564-9991

# அன்னை திரேசாவுக்கு அகவை 103



ஆண்டவன் உலகுக்கு அளித்த அருள் மணி
அன்னை திரேசா என்ற பெண்மணி
தருமவழி ஓங்கி தலை நிமிர்ந்து நின்றிட
தன்நலம் கருதா தாயென திகழ்ந்த அம்மணி
அன்னியநாடாம் அயர்லாந்து சென்று
ஆங்கில மொழிதனை அறந்திரிபுற கற்று
தாராள மனதுடன் தன்நலம் பெற்று
தாய் நாட்டில் காலடி வைத்த நங்கை
நூல்கள் பல கற்று நுண் அறிவு பெற்று
நால்வகை ஆற்றலும் நலமாகப் பெற்று
சேவை மனப்பான்மை சிந்தையில் உதிக்க
சொல்வதற்கரிய சரித்திரம் படைத்தவர்
ஆசிரிய சேவையிலும் ஆர்வமாய் ஈடுபட்டு
அதிபராகவும் அவர் பதவி உயர்வு பெற்றவர்
தாதிப் பயிற்சியையும் தாமதமின்றிப் பயின்று
தாய்மை உணர்வினை தானாகவே பெற்றவர்
பயனுடையதாம் வைத்திய சேவை என உணர்ந்து
'பாட்டனா' நகர் சென்று பயிற்சியும் பெற்றவர்
தொழு நோயுற்று தொடுவார் அற்று கிடந்தோரை
தொட்டு அவர்கட்கு வைத்தியம் பார்த்தவர்
தன்நலம் கருதா தன்னருட் சேவையாய்
தாழ்பாழ் இல்லா தாயில்லம் அமைத்து
வறியோரை வரவேற்று வாழவைக்க இல்லம்
வடிவமைத்து கொடுத்த அன்னை
தேடுவார் அற்று தெருவோரம் கிடக்கும் அனாதை குழந்தைகளை
தேடிச் சென்று எடுத்து ஏந்திவந்து அவர்களை
தத்தெடுத்து தயைகாட்டி வளர்த்தெடுக்க
தகுந்ததோர் குழந்தைக் காப்பகம் அமைத்தவர்
நீலக் கரையிட்ட வெண்ணிற ஆடையை
நீள மாறுயார் மொட்டாக்கு அணிந்தெங்கும்
நாலாபுறமும் நற்பல சேவைக்காய்
நாடியே சென்று நல்கிய சேவகி அன்னை திரேசா
அன்னை போல் சேவையாற்ற அவனியில் யாருமில்லை
அவர் இருந்தால் இன்ற வந்த அகவை நூற்று மூன்று

- கவிநாதம் பரந்தாமன்


## LAW OFFICE
## STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

TBC Toronto Business College



DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
Duration: 35 Weeks (co-op available)

Business Administration
Duration: 26 Weeks

Computerized Accounting
Duration: 26 Weeks

Medical Office Admin.(MOA)
Duration: 32 Weeks

Personal Support Worker(PSW)
Duration: 26 Weeks (NACC Diploma)

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள்?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்
New Immigrants are also Welcome

FREE
Basic Computer Course
OCT. 26th 10:00 am

Career Colleges Ontario

416-291-5155

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# நாமும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பற்றுச்சீட்டினை (Receipts) ஐ பெற்றுக்கொள்ளல் வேண்டும்.



6. தொலைபேசியில் Credit card / ID number போன்றவற்றை நம்பிக்கையான நிறுவனங்களிற்கே கொடுத்தல் நல்லது.

(உதாரணமாக Credit card தந்த நிறுவனம் உங்களின் Credit card இலக்கத்தை கேட்காது. ஏற்கனவே அவர்களிடம் உங்கள் இலக்கம் உள்ளது. இதுபோன்ற கேள்விகள் கேட்கப்பட்டால், மறுபக்கத்தில் இருந்து வந்த தொலைபேசியில் மேலதிக கவனம் தேவை)

7. முகவரி மாற்றத்தை உடனடியாக தெரியப்படுத்த வேண்டிய நிறுவனங்களுக்கு



தெரியப்படுத்தல் வேண்டும்.

இவ்வாறான சிலவற்றில் ஆரம்பத்திலேயே கவனம் கொள்வதால் எதிர்கால சிக்கல்களிலிருந்து ஓரளவாவது தப்பித்துக்கொள்ளலாம்.

# வாடகை...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

நியாசபையின் உத்தரவினை வாடகை குடியிருப்பாளர் மதிக்கவில்லையானால் அடுத்த கட்டம் நியாய அமலாக்கல் பிரிவினரின் அலுவலகத்திற்கு (Justice Enforcement office) நியாய சபையின் தீர்ப்பினை வைத்து $330 டொலர் பணம் செலுத்தி மனு செய்ய வேண்டும். இந்த அமலாக்கல் பிரிவு உத்தியோகத்தினரை 'செரிவ்' (Sheriff) என ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள். இவ் அலுவலக பிரிவு முதல் எச்சரிக்கை கடிதம் அனுப்பும். பின்னர் 'எச்சரிக்கை நோட்டீஸ்' ஐ வீட்டு கதவில் வந்து ஒட்டுவார்கள். அதுவும் சரிப்பட்டு வரவில்லையானால் ரொறோன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளிவந்த மேலே குறிப்பட்ட செய்தி மாதிரியாக நடவடிக்கை தொடரலாம். வாடகை கொடுக்கப்படாத மனு நாளிலிருந்து துரிதமான சட்ட நடவடிக்கையில் இறங்கினால் வெற்றிகரமாக நியாய அமலாக்கல் பிரிவினரின் நேரடி தலையீட்டில் காலி செய்யப்பண்ண சுமார் 2-3 மாதங்கள் எடுக்கலாம்.

வீட்டு உரிமையாளர் இத்தகைய சந்தர்ப்பங்களில் வாடகை வருமானத்தினை இழக்க வேண்டி வரலாம் என்ற காரணத்தினாலேயே சட்டரீதியான உடன் படிக்கைகளுடன் வாடகைக்கு வழங்கும் போது ஒரு மாதம் அல்லது இருமாதம் முற்பணம் மணி ஓடராக அல்லது உறுதிப்படுத்தப்பட்ட காசோலையாக பெறுவது வழமையாகும்.




இழந்த வாடகை வருமானங்கள், சட்ட நடவடிக்கைக்களுக்கு செலவழித்த பணங்களை பின்னர் நீதிமன்ற வழக்கின் மூலம் (Small calim court) அறவிட முயற்சிக்கலாம். ஆனால் அறவிடப்படுபவர் வங்குரோத்து நிலைமையில் இருந்தால் அறவிடுபவரால் ஒன்றுமே செய்ய முடியாது.

### இறுதியாக ஒரு விடயம்

வாடகை குடியிருப்பாளருக்கும் தம்மை பாதுகாத்துக்கொள்ளவும், தப்பித்துக் கொள்ளவும் ஏராளமான சட்ட வழிகாட்டல்கள் உண்டு. ஆலோசனை மையங்களும் கனடாவில் செயல்பட்டு கொண்டே இருக்கின்றது.

# காலத்தோடு வளரும் கணினிகள் - 31

அன்பான வாசகர்களே!

கடந்த சில இதழ்களில் மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய செயன்முறைக் குறிப்புக்களை இந்தத் தொடர்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். கடந்த 30 தொடர்கட்டுரைகளை வாசகர்கள் வாசித்துக் கொள்வதோடு செயன்முறைக் குறிப்புக்களையும் கிரகித்துப் போதிய பயிற்சியும் செய்து கொண்டால் கணினியை நாளாந்தம் பயன்படுத்துவதற்கு அத்தியாவசியமான இணையப் பயன்பாடு, மின்அஞ்சல், சொற்பரிமாற்ற மென் பொருளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் போதியளவு அறிவைப் பெற்றுக் கொள்வதோடு கணினியின் வரலாறு, கணினி உலகில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் பற்றிய அறிவு, கணினியின் தொழிற்பாடு பற்றிய விடயங்களையும் அறிந்து கொள்ளலாம். விளம்பரம் இணையத் தளத்தின் ஆவணப்பகுதியில் எல்லா இதழ்களையும் பார்வையிடலாம். புரியாத விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு மீண்டும் மீண்டும் வாசித்துக் கொள்ளலாம்.

கணினி பற்றிய வாசகர்களின் அறிவை இதற்கு மேலாகவும் விரிவுபடுத்தும் நோக்கில் தொடர்ந்து மேலும் பல விடயங்களை இந்தத் தொடர்கட்டுரையில் எடுத்து வருவதற்கு விரும்புகின்றேன். எனவே இந்தத் தொடர் கட்டுரையைத் தொடர்ந்து வாசியுங்கள். மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற மென்பொருள் மைக்கிரோ சொவ்ற் ஆபீஸ் (Microsoft Office) இல் காணப்படும் பல மென்பொருட்களில் ஒன்றாக உள்ளது. இதில் உள்ள இன்னுமொரு மென்பொருள் பற்றிச் சுருக்கமாக இப்பொழுது ஆராய்வோம். மைக்கிரோ சொவ்ற் பவர்பொயின்ற் (Microsoft Power Point) என்ற மென் பொருள் மிகவும் பயனுள்ள ஒரு Presentation software ஆக உள்ளது. Start பட்டனை கிளிக் செய்து All programs இனை கிளிக் செய்து மைக்கிரோ சொவ்ற் மென்பொருளில் இருந்து விரியும் மென்பொருள் பட்டியலில் இருந்து மைக்கிரோசொவ்ற் பவர்பொயின்ற் மென் பொருளைத் தெரிவு செய்தால் மைக்கிரோ சொவ்ற் மென்பொருளின் Presentation Document தோன்றும். கோப்பின் பெயர் Presentation1 ஆகக் காணப்படும். திரையகத்தின் இடதுபுற மேல் மூலையில் காணப்படும் File menu க்குரிய ஆபீஸ் பட்டன் (Office Button) இல் கிளிக் செய்து Save As என்ற தெரிவில் விரும்பிய பெயரைக் கொடுத்துக்கொள்ள வேண்டும். கோப்பினை மீண்டும் சேமிப்பதற்கு ஆபீஸ் பட்டனுக்கு மேல் உள்ள Floppy Disk Symbol இனை கிளிக் செய்யலாம். இதற்கு அருகில் redo, undo போன்ற ஐகன்களும் இருக்கும்.




திரையகத்தின் மேற்பக்கத்தில் Home, Insert, Design, Animations, Slide Show, Review, View போன்ற menu tabs, அதற்குக்கீழ் ஒவ்வொரு menu இற்குரிய Tools Bar என்பன காணப்படும். Design menu இல் இடது புறத்தில் காணப்படும் Page Setup Tools Bar மூலம் Landscape அல்லது Portrait என்ற Orientation, slide இன் அளவு போன்றவற்றைத் தெரிவு செய்யலாம். Home menu இல் காணப்படும் பல Tools Bar தெரிவுகள் மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருள் போன்றே காணப்படும். இதில் காணப்படும் Drawing Tools Bar இனைப் பயன்படுத்தி slides க்குள் படங்களைக் வைத்துக்கொள்ளலாம். Home menu இல் உள்ள Layout button இனை கிளிக் செய்து விரும்பிய templates இனைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

Design menu இல் காணப்படும் Slides Backgrounds என்பவற்றையும் தெரிவு செய்யலாம். Home menu இல் காணப்படும் New Slide button இனை கிளிக் செய்வதன் மூலம் ஒவ்வொரு புதிய slides களையும் சேர்த்துக் கொள்ளலாம். Insert Menu இனை கிளிக் செய்தால் மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற மென்பொருளில் உள்ளது போன்றே படங்கள், clip arts, Shapes, Charts போன்றவற்றை slides களில் உட்புகுத்திக் கொள்ளலாம். இங்கே விசேடமாக sound, Video Files களையும் புகுத்திக் கொள்வதற்கான வசதிகளும் உள்ளன. slides களில் அசைவுகளைச் செய்வதற்கு animations menu வுக்குச் செல்ல வேண்டும். Slide Show menu இல் slide timings, Record narrations போன்ற வசதிகளும் உள்ளன. slides இனை ஓடவிட்டும் பார்க்க முடியும். Hide slide மூலம் சில slides களை மறைத்துக் கொள்ளவும் முடியும். ஒரு சில நிமிடங்களில் Slide show ஒன்றை இந்த மென்பொருள் மூலம் உருவாக்கிக் கொள்ளலாம். இந்த மென்பொருளும் மிகவும் இலகுவானதும், பயனுள்ளதும் ஆகும். View menu இல் உள்ள தெரிவுகள் மூலம் Slides களின் ஒழுங்குகளை மாற்றவும், slides களை Handout ஆகச் செய்தும் கொள்ள முடியும். கற்பித்தலுக்கு மிகவும் பயனுள்ள ஒரு மென்பொருளாக மைக்கிரோ சொவ்ற் பவர் பொயின்ற் மென்பொருள் விளங்குகிறது. இங்கே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான குறிப்புக்களின் துணையுடன் இந்த மென்பொருளைப் பயன்படுத்த வாசகர்களாகிய நீங்கள் இலகுவில் கற்றுக்கொள்ளலாம். மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டவர்களுக்கு இந்த மென்பொருளை இலகுவாகக் கற்றுக்கொள்ள முடியும். மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளில் தட்டச்சு செய்த விடயங்களை Copy, Paste மூலம் மைக்கிரோ சொவ்ற் பவர் பொயின்ற் மென்பொருளுக்குள் கொண்டு செல்ல முடியும். தொழில் புரியும் இடங்களில் கணினியைப் பயன்படுத்துபவர்கள் இந்த மென்பொருளை நிறையவே பயன்படுத்துகிறார்கள். கணினியில் ஓரளவு அறிவுடையவர்கள் தாமாகவே கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இலகுவான மென்பொருளாக இருப்பதால் இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை. முயற்சி எடுத்தால் இந்த மென்பொருளை யாரும் கற்று விடலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.






- அகணி -
authorakani@yahoo.com

## மொழிபெயர்ப்பு சேவை

- சகலவிதமான பத்திர மொழிபெயர்ப்புகளும் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும்.
- சகலவிதமான நிறுவனங்களுக்கும் உங்களுடன் வந்து, வாய்மொழி ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கும்.
- சகலவிதமான பத்திரங்களை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் பூர்த்தி செய்து கொள்வதற்கும்.
- வருமானவரிப்பபத்திரம் பூர்த்தி செய்தல், அது சார்ந்த திருத்தங்கள், மாற்றங்கள் செய்து கொள்வதற்கும்.
- ***IFTA*** (International Fuel Tax Agreement) பூர்த்தி செய்வதற்கும்.
- சகலவிதமான தேவைகளுக்கும், இலவச வழி காட்டலுக்கும்

**தொடர்புகளுக்கு: 647.956.1015**

# நோய் வருமுன் காக்க வழி இல்லையா?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

ஒரு மனிதன் உடல் மனநலத்துடன் மூன்று இலக்க வயது வரை வாழ்வதற்கு நோய்கள் ஏதேனும் வராது தடுக்கும் வழிமுறைகளை அறிந்திருக்க வேண்டும். மனிதனைத் தாக்கும் நோய்கள் அனைத்திற்கும் மூல காரணம் மனிதனே. அவனே தனது உடலில் நோய்களை வளர்க்கின்றான். தனது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளாமல் தனது இஷ்டப்படி வாழும் மனிதனின் உடலும் மனமும் நோய்களின் தொழிற்சாலையாகின்றது. பின் அதன் கோரப்பிடியிலிருந்து தப்ப முடியாது தன்னையே மாய்த்துக் கொள்கின்றான். அல்லது வாழ்நாள் முழுதும் அவதி யுறுகிறான். இந்த நிலமைக்குக் காரணம் நோய் வருமுன் காப்பதற்கான வழிமுறை களைக் கடைப்பிடிக்காதே.

நம் முன்னோர்கள் தினமும் காலையில் அதிக நீராகாரம் பருகி வியர்வை சிந்தி வேலை செய்தனர். அவர்களின் உணவு முறைகள் பழக்க வழக்கங்கள் சரிவர அமைந்ததால் நீண்டநாள் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம், ஆஸ்துமா என்பன வந்தததில்லை. ஆனால் இன்றோ நாம் சந்திக்கும் மனிதர்களில் 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் 70% பேர்களுக்கு மேற்குறிப்பிட்ட நோய்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நோய்களினாலோ அவதிப்படுகின்றனர். பெண்களின் நிலையோ இதைவிட அதிகம். அவர்கள் கை, கால், மூட்டு, இடுப்பு, கழுத்துவலி போன்ற பலவகை நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். மெனோபாஸ் காலத்தில் மிகவும் துன்பப்படுகின்றனர். பழைய காலத்து பாட்டிகளின் வேகம் கூட இக்காலத்து இளம் பெண்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

அறுபது வயதிலும் கண்ணாடி அணியாது பத்திரிகை படிக்கும் பெரியவரின் பேரக் குழந்தை இளவயதிலேயே கண்ணாடி அணிய வேண்டியதன் காரணம் தான் என்ன? அந்த பொறுப்பினை நாமே தான் ஏற்க வேண்டும்.

### நோய்கள் வருவதன் காரணங்கள்

1. தூய்மையான காற்றும் சூரிய ஒளியும் உட்புகாத இடங்களில் நீண்டநாள் வாழ்வது
2. காலத்திற்கேற்ப உடம்பின் தட்ப வெப்ப நிலையை மாற்றிக் கொள்ளாதது.
3. தலை குளிப்பதற்கும், நீர் அருந்துவதற்கும், பிறவேலைகளுக்கும் உபயோகப் படுத்தும் நீரின் தன்மைகளை சரிவர அறிந்து கொள்ளாது பயன்படுத்துவது.
4. வீட்டினை அழுக்காகவும், குப்பை நிறைந்ததாகவும் வைத்துக் கொள்வது, மற்றும் வீட்டைச்சுற்றி துர்நாற்றம் தரக்கூடிய கழிவு நீர் தேங்கியிருப்பது.
5. மாசடைந்த நீரிலுள்ள மீன்கள் பறவைகள் என்பனவற்றின் உணவுகளை உட் கொள்வது.
6. துருப்பிடித்த பாத்திரத்தில் சமைத்த உணவுகளை உட்கொள்வது.



7. உடம்பின் நிலையறியாது அடிக்கடி தலை குளிப்பது.
8. பலநாட்கள் குளிக்காமல் இருப்பது
9. ஒருமுறை அணிந்த ஆடைகளைத் துவைக்காமல் பல நாட்கள் அழுக்குடன் அணிவது
10. அளவுக்கு மிஞ்சிய கோபம், துயரம், கவலை, பயம் அடைதல்
11. உரத்த குரலில் தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பது
12. எப்போதும் யாருடனாவது ஏட்டிக்கு போட்டியாக பேசி சண்டையிடுவது
13. உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாமை
14. தொற்றுநோய் உள்ளவர்களுடன் நெருங்கி பழகுதல்
15. தொற்றுநோய் உள்ள காலங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யாது இருத்தல்
16. அதிக அளவு மருந்து மாத்திரைகள் உட்கொள்ளுதல்
17. பசியில்லாதிருக்கும் போது அடுத்தடுத்து உணவுகள் உட்கொள்ளுதல்
18. நன்கு பசி எடுக்கும் போதும் உணவு எதனையும் உட்கொள்ளாது பட்டினி இருப்பது
19. நீண்டநேரம் தூங்காமல் விழித்திருப்பது
20. எந்த நேரமும் உறங்கிக் கொண்டிருப்பது
21. அளவுக்கு மிஞ்சி எந்நேரமும் படித்த படி இருப்பது
22. அளவுக்கு அதிகமாக உடலுறவு கொள்வது
23. அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பது
24. ஏதேனும் ஒரு பொருளிலோ அல்லது மறுபால் மனிதரிடம் பேராசை கொண்டு பின் அதனை அடைய முடியாது தவிர்ப்பது ஏங்குவது
25. காலையில் மலச்சிக்கல் மாலையில் மலச்சிக்கல் போன்றவற்றால் அவதிப்படுவது

இவைதான் நோய்கள் வருவதற்கான காரணங்கள். ஆம். இவற்றை நன்கு அறிந்து சற்று நிதானத்துடன் செயல்பட்டால் நோயின்றி வாழ்வது உறுதி.

### யோகாவும் நோய் எதிர்ப்பு சக்தியும்

யோகாசனங்கள், பிராணாயாமம், தியானம் என்பன ஆரோக்கிய வாழ்வதற்கு வழி காட்டும் வல்லமையைக் கொண்டுள்ளன. இதனுள்ள ஒவ்வொரு பயிற்சியும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நோய்களின் தன்மையைக் கொண்டிருப்பதுடன் எந்த நோயும் நம்மை அணுகாதிருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை நமது உடலில் உருவாக்குகின்றன. அதாவது நரம்பு மண்டலங்களைப் புத்துணர்ச்சி பெறச் செய்வதுடன் எலும்புகளுக்கு உறுதியைத் தருகிறது. அதுமட்டுமன்றி உடலுக்கும் உயிருக்கும் அதன் அனைத்து இயக்கங்களுக்கும் ஆதாரச் சக்கரங்கள் (நாளமில்லா சுரப்பிகள் 7) செம்மைப்படுத்தி உடலுக்கு அழகையும் இளமைப் பொலிவையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது.

எனவே முறையான யோகாசனங்களைக் கற்று தினமும் குறைந்தது 20 நிமிடங்களா வது செய்து வந்தால் உடல் முதுமையை வென்று அதனுள்ளிருக்கும் உயிர் நீண்டநாள் வாழும்.






416.289.2033 after 7:00pm
416.617.5721



**FAMILY BUSINESS**
**Cleaners Wanted**



**Hamilton, Niagara falls, Burlington** ஆகிய பகுதிகளில் **Super Market** க்கு **Cleaners** தேவை.

நேரம்: **4:00am - 9:00am**

அவர்களுக்கு ஏற்றவாறு வேறுவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 647.707.5263**



**YOGA - MEDITATION CLASSESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# இரத்தத்தில் நோய்கள் குடிகொண்டுள்ளனவா? இதில் இருந்து எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நமது உடம்பில் இரத்தம் இரண்டறக் கலந்து நன்மைகளையும் தீமைகளையும் ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றன. எனவே நன்மை, தீமை நிலை எந்நிலையில் ஏற்படும் என்பதை அறிந்து கொள்வது முக்கியமாகும். இதனால் நாம் உரிய வேளையில் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

நமது உடம்பில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் நமக்குத் தேவையான செஞ்சீவ வெண்சீவ (R.E.C & W.B.C) அணுக்கள் செறிந்து காணப்படுகின்றன. இப்படி ஓடிக்கொண்டிருக்கும் செஞ்சீவ அணுவானது நமக்குத் தேவையான பிராணவாயுவை (Oxygen) வழங்கிக் கொண்டு இருக்கின்றன. வெண்சீவ அணுக்கள் எமக்கு ஏற்படும் நோயை எதிர்க்கும் சக்தி பொருந்திய அணுவாக இருந்து எம்மைக் காப்பாற்றுகின்றது. இரத்தத்தில் உள்ள தட்டுக்கள் (Platelets) இரத்தம் உறைவதற்காகவுள்ளது. இவை அனைத்தும் பிளாஸ்மா (Plasma) என்ற திரவத்தில் கலந்துள்ளன. இத்திரவத்தில் தாதுப்பொருட்கள், உப்பு, புரட்டீன், ஊட்டப்பொருட்கள், கோமோன்கள் போன்றவையும் இரத்தத்துடன் சேர்ந்து எம்மை இயக்கிக் கொண்டு இருக்கின்றன.

இரத்தம் நமது உடம்பில் உள்ள சகல உறுப்புக்களுக்கும் யாவற்றையும் விநியோகித்தவண்ணம் இருக்கின்றன. உடம்புக்குத் தேவையான வெப்பம் ஒழுங்காக இருக்க உதவியாகாவுள்ளது. செஞ்சீவ, வெண்சீவ அணுக்கள் எலும்பின் உட்பகுதியில் உள்ள மச்சை என்னும் மெதுமையான பகுதியில் இருந்து உருவாகின்றது.

இத்தன்மை பொருந்திய இரத்தம் உரிய இடத்திற்கு செல்லாது விட்டால் அல்லது தடை ஏற்பட்டால் அப்பகுதிகளின் செயல் இழக்க நேரிடும் என்பதை ஞாபகப்படுத்துகின்றன. இத்தன்மை பொருந்திய இரத்தத்தின் மூலம் எமது உடம்பில் நோய் தாவியுள்ளது என்பதை பரீட்சித்துப் பார்வையிடும் போது தெளிவாகக் கண்டு கொள்ள முடியும். இரத்தத்தில் உள்ள செஞ்சீவ அணுக்கள் தேவைக்கு குறைந்து காணப்படின் இரத்தசோகை அதிகரித்துக் காணப்பட்டால் 'Polycythaemia' என்ற வியாதி ஏற்பட ஏதுவாகும். இரத்தத்தில் வெண்சீவ அணு அளவு மீறி அதிகரிப்பின் புற்றுநோய் ஏற்படலாம் எனவும் அறிய முடிகின்றது. இரத்தம் உறையும் தன்மை குறைந்து காணப்படின் 'Hemophilia' என்ற ரோகம் ஏற்படும் நிலை தென்படும்.

நமது உடம்பில் பெரும்பாலும் 5 லீற்றர் இரத்தம் இருக்க வேண்டும். எலும்புக்குள் படிந்திருக்கும் மரோ என்னும் மெதுமை பொருந்திய பொருள் (மச்சை) ஒன்று உண்டு. இதில் இருந்துதான் செஞ்சீவ, வெண்சீவ அணுக்கள், பிளேட்லெட்ஸ் என்பதை உருவாகின்றன. இவை பல எண்ணில் அடங்காத தொகையில் புதிய அணுக்களை உருவாக்கிய வண்ணம் இருக்கும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இந்நிலைப்பட்ட இரத்தத்தில் அதிக இரத்த அமுத்தம் உடையோர் தங்களின் எடையை குறைத்துக் கொள்ள தகுந்த ஆகாரங்களை எடுத்து வர வேண்டும். பெரும்பாலும் உப்பு பண்டங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். காய், கறிவகை, கீரைவகை போன்றவற்றைப் பாவித்து வந்தால் நன்மை பெற முடியும். ஊறுகாய், கருவாடு போன்றவற்றை தவிர்ப்பது மிக நன்று. எனவே உணவுக்கட்டுப்பாடு முக்கியமாகும்.



நமது உடம்பில் இரத்தக்குறைபாடு இருந்தால் இரத்த சோகை எனக் கூறலாம். இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைந்து காணப்படும். அதாவது இரத்தத்தில் செஞ்சீவ அணுக்கள் குறைந்தோ அல்லது இவ்வணுவில் ஹீமோகுளோபின் குறைவாக காணப்பட்டாலும் இரத்த சோகை என கூற இடம் உண்டு. இச்சோகைநிலை உள்ளோருக்கு இரும்புச் சத்து உணவு முக்கியமாகும். அத்துடன் மீன், கோழி இறைச்சி, ஈரல், உழுந்து, பயறு, துவரை, பழவர்க்கம் பச்சைக்காய்கறிவகை போன்றவற்றில் பெரும்பாலும் இரும்புச்சத்து செறிந்து காணப்படுகின்றது. எனவே தவறாது இதனைக் கைகொள்வது மிக நன்மை பயக்கும்.

சிலருக்கு உடம்பில் காயம் ஏற்பட்டால் இரத்தம் கசியத் தொடங்கும். ஆனால் எளிதில் நிற்காமல் இருக்கும். இது பெரும்பாலும் பிறப்பிலே இரத்தத்தில் உள்ள Factor 8 என்ற பொருள் இல்லாதிருக்கலாம் அல்லது தங்கள் தாயாருக்கு இந்நிலமை இருந்திருக்கலாம். எனவே இது ஒரு பரம்பரையாகவும் வரும் என எண்ணமுடியும் என அறிய முடிகின்றது.

நமது உடம்பில் எந்த இடத்திலாவது வெட்டுக்காயம் ஏற்பட்டால் வெளிவரும் இரத்தத்தில் அதிகமான பிளேட்செல்கள் (அணுக்கள்) வெட்டுக்காயத்தின் முனைகளில் ஒட்டியவண்ணம் இருக்கும். இதில் இருந்து வரும் திரவம், தடிப்பாக சூழ்த் தன்மை நிலையில், இரத்தத்தில் இருந்து வரும் செஞ்சீவ, வெண்சீவ அணுக்களை ஒன்று சேர்த்து கெட்டியாக அதாவது திடப்பொருளாக ஆக்கி இரத்தத்தை தடை செய்கின்றது.

இரத்தம் உறையாமல் ஓடிக் கொண்டிருந்தால், அதனை ஹீமோபிலியா (Hemophilia) என அழைப்பதுண்டு. மேலும் நமது உடலில் காயம் ஏற்பட்டால் அல்லது புண் காயாதிருந்தால் அதற்குரிய சிகிச்சை செய்யத் தவறினால் நுண்கிருமிகள் விரைவாக இரத்தத்தில் கலந்து உடல் பூராகவும் பரவும் நிலை ஏற்படும். இதனால் நஞ்சுத்தன்மை இரத்ததில் உருவாகும். இதற்கு தகுந்த ஆன்ரிபயோரிக் (antibiotic) மருந்து கொடுத்து குணப்படுத்த தவறின் மரணமும் ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது.

அப்ளாஸ்டிக் அனிமியா (Aplastil Anaema). ஒருவரில் இரத்த அணுக்கள் குறைவாக இருந்தால் அல்லது ஏதாவது பக்ரீரியா, வைரஸ் அல்லது மருந்துகளின் பக்க விளைவு அல்லது புற்றுநோய் இருப்பின் உடல் வெழுத்து பலவீனமாக நோயுற்றிருப்பார். இந்நிலைப்பட்டவரின் இரத்தத்தை பரிசோதித்தால் இரத்த அணுக்களைத் தயார் செய்யும் திசுக்களின் இடத்தில் கொழுப்பு நிறைந்து காணப்படும் எனவும் பெரும்பாலும் மாற்றுமுறை கையாள வேண்டும் எனவும் முழுமையாகக் குணுப்படுத்துவது கடினம் எனவும் அறிய முடிகின்றது.

மேலும் இரத்தத்தில் செஞ்சீவ அணுக்கள் அதிகமாக இருப்பின் இரத்த வியாதி ஏற்படும். எலும்பில் உள்ள மரோ (மச்சை) குறைந்தாலும் அல்லது சிறுநீரகவியாதி ஏற்பட்டிருந்தாலும் இரத்தத்தில் வியாதிகள் ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது. இப்படியான நிலையை Polycythemia எனவும் கூறப்படுகின்றது. இந்நிலை கட்டிகள் உடம்பில் இருந்தாலும் வரலாம். இதற்குப் பெரும்பாலும் இரத்தத்தை வெளியெடுத்து குறைக்கும் நிலையை செய்கின்றார்கள். எனவே இரத்த அணுக்கள் கூடினாலும் குறைந்தாலும் வியாதிகள் உண்டாக இடம் உண்டு.

சிலரின் தேகத்தைப் பார்வையிடும் போது மெல்லிய சிவப்பு நிறம் கொண்ட புள்ளிகள் காணப்படுகின்றன. இது சாதாரணதடிப்பாக இருந்தால் நாளடைவில் மறைந்து விடும். ஆனால் ஒரு கிழமைக்கு மேற்பட இருக்குமானால் தாங்கள் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும். இது பெரும்பாலும், இரத்தத்தில் உள்ள பிளேட்டுக்கள் இரத்த உறைவிற்கு முக்கியமானது. இது குறைவாக இருப்பின் தோலில் உள்ள மெல்லிய இரத்தக் குழாய் சுரப்பிகள் வழியாக இரத்த கசிவு ஏற்படும். இதனால் தான் மெல்லிய சிவப்பு புள்ளிகள் காணப்படுகின்றன. எனவே வைத்தியர்களை நாடிச் சென்று சிகிச்சை பெற வேண்டும். சாதாரணம் எனக் கருத வேண்டாம்.

மேலும் அடுத்து இரத்த அழுத்தம் என்றால் என்ன? இரத்தக் கொதிப்பு என்றால் என்ன? என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இரத்த அழுத்தம் என்பது இரத்தக் குழாய்களில் இரத்தம் செல்லும் போது ஒருவித அழுத்தம் உண்டாகும். இதுவே இரத்த அழுத்தம் எனக் கூறப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் 'Blood Pressure 'என அழைப்பர்.

அடுத்து இரத்தக்கொதிப்பு என்றால் என்ன? அதாவது சாதாரணமாக இருதயம் ஒவ்வொருமுறையும் துடிக்கும் போதும் பெரிய இரத்தக் குழாய்களில் ஏற்படும் இரத்தத்தின் அதிகபட்ச அழுத்தம். Systolic பொதுவாக 120 என்றும் குறைந்தளவு அழுத்தம் 80 Diastolic என்றும் கூறப்படுகின்றது. இரத்தம் கொதிக்காது. ஆனால் அழுத்தம் அதிகமாவதை தான் இரத்தக் கொதிப்பு எனக் கூறப்படுகின்றது. இந்நிலையை 'சத்தம் போடாத கொலைகாரன்' என வர்ணிக்கலாம்.

ஒருவருக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு அதற்குரிய மருந்தை தங்கள் வைத்தியரிடம் பெற்று குணம் கிடைத்த பின் தொடர்ந்து அம்மருந்தை எடுக்க வேண்டுமா? என்பதை தங்கள் வைத்தியரிடம் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும். கேட்காமல் எம்மருந்தையும் தொடர்ந்து பாவிப்பது நல்லதல்ல. அவர்கள் என்ன கூறுகின்றார்களோ அதன்படி கைக்கொள்வது நன்று. இதனால்


வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.707.4378


தொடர்ச்சி 16ஆம் பக்கம்


BODY PAIN RELIEF CLINIC

- நாட்பட்ட நோ (Chronic Pain)
- இடுப்பு வலி (Hip Pain)
- தசைப் பிடிப்பு (Spasm)
- முழங்கால் வலி (Knee Pain)
- கால் வலி (Leg Pain)
- முதுகு வலி (Back Pain)
- தோள்மூட்டு வலி (Frozen Shoulder)
- கை வலி (Arm pain)
- கை மணிக்கட்டு வலி (Carpal Tunnel Syndrome)
- கழுத்து வலி (Neck Pain)

ஆகியவற்றுக்கு ஆயுள்வேத Massage அல்லது RMT Massage மூலம் தீர்வுகாண அழையுங்கள்

தொடர்புகளுக்கு: 416.486.2182



# பரதக்கலை

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

என்னும் அப்பர் சுவாமிகளின் தேவாரம் தில்லையம்பலத்து நடராசப் பெருமானின் தோற்றத்தை வருணிக்கின்றது. இறைவனின் வடிவங்களில் அவனது ஆடல் வடிவம் அழகானது. அதனைக் காணக் கண் ஆயிரம் வேண்டும். அதனைக் கண்டு, இறைவனின் திருவருளிலே திளைத்துப் பெற்ற மகிழ்ச்சிப் பெருக்கினாலே "நல்லகாலம் யான் மனிதனாகப் பிறந்தது, இல்லையென்றால் இறைவனின் இந்த எடுத்த பொற்பாதத் திருக்கோலத்தைக் காணும் பேற்றினை இழந்திருப்பேன்" என்பது போன்ற எண்ணத்தினாற்போலும் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று ஒரு துறவி பூரிப்படையும் நிலையைப் பார்க்கின்றோம்.

## நடனக் கலைக்கு அத்தனை சக்தியுண்டு!

### நடனக் கலையின் தோற்றம்

நடனக் கலையைத் தோற்றுவித்தவன் சிவபெருமானே என்பது இந்துக்களின் நம்பிக்கை. அவனது நடனத்தில் இருந்து பிறக்கும் சக்தி அண்டசராசரங்களை இயக்குகின்றது, உயிரினங்களுக்கு ஊக்கம் அளிக்கின்றது, அறியாமையை அழிக்கின்றது.

மேலும், இறைவனின் திருநடனம் அவன் இயற்றும் ஐந்தொழில்களைக் குறிக்கும் என்றும் கூறுவர். நான்கு திருக்கரங்களோடுகூடிய நடராசப் பெருமானின் பின்பக்க வலது கையில் இருக்கும் உடுக்கை ஆக்கலையும் இடது கையில் உள்ள அக்கினி அழித்தலையும் அபய-கரம் காத்தலையும் ஊன்றிய திருப்பாதம் மறைத்தலையும் எடுத்த பொற்பாதம் அருளலையும் குறிக்கும்.

சிவபெருமான் நடமாடும் இடம் சிதம்பரம். சிதம்பரம் அண்டசராசரங்களின் மையமாகக் கொள்ளப்படுகின்றது. அது இதயத்தைச் சுட்டுகின்றது என்ற ஒரு விளக்கமும் உண்டு. அந்தவகையில் அடியார்கள் உள்ளத்தில் இறைவன் நடமாடுகிறான் என்றும் பொருளாகின்றது.

இறைவனே நடனகர்த்தாவாதலால், நடனக் கலையும் இறைவனுக்குரிய கலையாக, இறைவனுக்கு அர்ப்பணிக்கும் கலையாக, இறைவன் முன்னிலையில், அதாவது கோயில்களில் ஆடப்படும் கலையாக வளரலாயிற்று. கோயில் நடனமாதர் 'தேவதாசிகள்' எனப்பட்டனர். அவர்களுக்கென்று தனியான அரங்கமும் கோயில்களில் அமைக்கப்பட்டன. தஞ்சைப் பெருங்கோயிலில் கல்லால் அமைக்கப்பெற்ற நடன அரங்கத்தை இன்றும் காணலாம்.



### தலைக்கோலி மாதவி

நடன அரங்க அமைப்பையும் அரங்கேற்ற முறையையும் சிலப்பதிகாரம் நுணுக்கமாக விளக்குகின்றது.

பொன்னியற் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டினள் ஆதலின் காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை இயல்பினின் வழா அமை
தலைக்கோல் எய்தித் தலையரங் கேறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண்கழஞ்சு
ஒருமுறையாகப் பெற்றனள்...

என்று இளங்கோ அடிகள் கூறுகின்றார். மாதவி நடனம் ஆடிக் காவல் மன்னனிடமிருந்து 'தலைக்கோலி' என்னும் பட்டத்தையும் ஆயிரத்தெட்டுக் களஞ்சுப் பொன்னை ஒருமுறையாகப் பெறுபவள் என்ற பெருமையையும் பெற்றாள். அவள் கடைப் பிடித்து ஆடிய 'நாட்டிய நன்னூல்' தமிழ்நூல். அது பிற்காலத்திற் மறைந்துபோயிற்று.

### பரதமுனிவர்

பலரும் பலவாறாக ஆடிவந்த நடனங்களை வகைப்படுத்தி அவற்றைச் சாத்திரப்படுத்திய பெருமை பரதமுனிவரைச்சாரும். அவர் வகுத்த முறையைப் பின்பற்றி ஆடும் நடனம் பரதக் கலை அல்லது பரத நாட்டியம் என வழக்கப்படலாயிற்று.

ஆகமங்கள் நூற்றெட்டுவகை நாட்டியங்களைக் குறிப்பிடுகின்றன. பரத நாட்டியத்திலும் நூற்றெட்டுவகை நாட்டியங்கள் கூறப்படுகின்றன. சிதம்பரத்தில் ஒரு கோபுரத்தில் நூற்றெட்டுவகை நடனங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நடனம் ஒரு கூட்டுக் கலை. அதனோடு சேர்ந்தது பாட்டு. பாட்டோடு பயில்வது இசை. இசையோடு இணைவது தாளம். நாட்டிய சாத்திரத்தில் இவை பற்றியும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆக, பரதத்தில் பாவமும் இராகமும் தாளமும் அடங்கியுள்ளன.

பாவம் என்பது அபிநயம். அபிநயம் என்பது நடிப்பு. நடிப்பில் மிகவும் முக்கியமான சங்கதி ஒன்பது சுவைகளையும் (நவரசங்களையும்) வெளிக்கொணர்தல். இவை மெய்ப்பாடுகள் என்ற பெயரில் தொன்றுதொட்டே தமிழ் நாடக அரங்கை அணிசெய்தன. தொல்காப்பியத்தில்,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப

என்று எட்டுவகைச் சுவைகள் கூறப்படுகின்றன. இவற்றுடன் 'சாந்தம்' (அமைதி) என்னும் சுவையையும் சேர்த்து நாட்டியசாத்திரம் சுவைகளை ஒன்பதாக்கியுள்ளது. பரதமுனிவரின் வடசொற்களுக்குப் பதிலாகத் தொல்காப்பியரின் நல்ல தமிழ்ச் சொற்களைத் தமிழ் நடன ஆசிரியர்கள் பயன்படுத்தி ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியருக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பரத நாட்டியத்தில் மற்றுமொரு சிறப்புத் தன்மை முத்திரைகள். முத்திரைகள் என்பன அபிநயக் குறியீடுகள் அல்லது அடையாளங்கள். பொருள்களையும் செய்திகளையும் குறியீட்டுமுறையால் காட்டும் கலை 'முத்திரை பிடித்துக் காட்டுதல்' எனப்படும்.

சுவைகளுக்கு முகபாவமும் முத்திரைகளுக்குக் கரங்களும் தாளத்துக்குப் பாதங்களும் சிறப்பான அவையவங்களானாலும் உடல் முழுவதும் மொழிபேசும் கலையே பரதக் கலை என்பதை உணர்தல் வேண்டும்.

### ஆன்மிகக் கலை

பரதநாட்டியம் ஒரு தெய்வீகக் கலை. உடலும் மனமும் ஆன்மாவும் ஒருங்கிணைந்து இறைவழிபாடு செய்யும் கலை.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# MATH WORLD

The Latest and Most Effective Math Program

For

# Grade 12 Advance Function

**By October, if your child does not have an average of:**

# 85%

Or more in Advanced Functions or Calculus
This program should seriously be considered,
Because all of Ontario's best Universities want
a high average in Math.

**With more than 23 Years of Experience in Teaching,**
**Our students are scoring averages of 90 and above.**
**We are so proud to be in this field.**

## For Details

**Sharma 416-666-5515**

*Location: Markham and Steeles*

***This program will be continued till the final exam review***



A Career for Success

**Automation Technology**
- Emerson (Control techniques) ladder logic, with CTnet communication and Modbus TCP/IP
- Allen Bradley RSLogix 5000 Ladder logic , With Ethernet IP communication
- HMI development , utilizing Modbus TCP/IP and Ethernet IP communication

Training with Real World Componant (Motors, Sensors, VFT, Encoder, PLC, Beckhoff, Conveyor, Analog I/O, Safety Switch)

**Diploma Courses**
- Office Administration - 24 weeks
- Accounting and payroll - 24 weeks
- Computerized Accounting - 42 weeks

**Special Certificate Programs CAD/CAM Technology with CNC SETUP**
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading

**Multimedia & Graphic Design**
- Basic Film Making & Camera
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

**Steel Detailing using TEKLA**

**Bank Teller Course**
**Cashier Course**

**Computer Technology**
- PC technician (A+)
- Programs - C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development - HTML, CSS, JAVASCRIPT
- LINUX systems

**Accounting Softwares**
- Quick Books
- Simply Accounting
- Accpac
- MS Office

2006க்குப்பின் EI அல்லது
Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக்
கற்பதற்கு தகுதி உடையவராகலாம்
நீங்கள் 42 வாரத்துக்கு 1. Living expenses,
2. Daycare fees 3. Transport expenses
பெறுவதற்கு தகுதியுடையவராகலாம்

COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000

beta College
of Business & Technology

Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere), Scarborough, ON, M1H 3C7

# பரதக்கலை

14ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த உண்மை பரதம் என்ற சொல்லுக்கு உள்ளேயே அடங்கிக் கிடக்கின்றது. பரதம் என்ற பதத்துள் நான்கு சொற்கள் ஒளிந்திருக்கின்றன. முதலாவது எழுத்தை நீக்கினால் ரதம் என்ற சொல்லும் இரண்டாவதை நீக்கினால் பதம் என்ற சொல்லும் மூன்றாவதை நீக்கினால் பரம் என்ற சொல்லும் தெரியும். இதனை,

(ப)ரதம் - ரதம்
ப(ர)தம் - பதம்
பர(த)ம் - பரம்
என்றும் எழுதிப் பார்க்கலாம்.

ரதம் - தேர், பதம் - பக்குவம்,
பரம் - பரம்பொருள் - பதி.

அதாவது, பரதநாட்டியம் என்கின்ற தேரிலே ஏறுகின்ற ஆன்மா பாசங்களைக் கடந்து பக்குவம் அடைந்து பதியினைச் சேரவல்லது என்கின்ற சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மை. உண்மையைப் பரதம் சூக்குமமாகக் கொண்டிருக்கின்றது.

இது தென்னாட்டுக் கலையாக வளர்ந்தமைக்கும் சைவசமயமே காரணமாக இருந்திருக்கின்றது. சைவ சமயம்



தென்னாட்டுச் சமயமாக வளர்ந்தமையாலும் சிவன் 'கூத்துகந்தான்' ஆதலாலும் நடனம் அவனுக்குப் பிடித்தமான ஒரு வழிபாட்டு முறையாக வளரலாயிற்று.

இன்றும் இக்கலை உலகெலாம் பரந்தோங்கி ஓர் உன்னத இடத்தை வகிப்பதற்கு இதன் தெய்வீகத் தன்மையே காரணமெனின் மிகையாகாது.

# இரத்தத்தில்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

எமது உடலை நாம் நன்நிலைப்படுத்தலாம்.

இம்மருந்துகளை எடுப்பதினால் தற்காலிக மாக குறையுமேயொழிய பூரணமாக மாறுவது அரிதாகும். இதனை ஆங்கில மருந்துகளில் அறிய முடிகின்றது. சாதாரண தலையிடி, சுரம் போன்ற நிலையில் குணம் கிடைத்தவிடும். உபத்திரவியாதியாக வரும் தலையிடி, சுரம் என்பன பகுத்தறிந்து ஆய்வுகள் செய்து குணப்படுத்த வேண்டும். உபத்திரவவியாதி என்பது ஒன்றைத் தொட்டு ஒன்று வருவது. அதாவது உறுப்புகளில் ஏதும் வியாதி இருக்கும் போது தலையிடி வரலாம். சுரம் வரலாம். தொற்றுநிலையாலும் வர இடம் உண்டு. எனவே எதற்கும் நோய் நிர்ணயம்
முக்கியமாகும்.

ஆனால் சித்த வைத்தியத்தில் ஒரு வைத்தியர் நன்கு நோயை நிர்ணயித்து தகுந்த மருந்தை, தகுந்த பத்தியபாகத்தில் கையாளச் சொல்வார். குறிக்கப்பட்ட காலத்திற்குத்தான் கொடுப்பர். அதாவது 40, 60 நாட்கள். பின் சுகநிலைகண்டு விடுபட்ட பத்தியத்தைக் கையாளுவர். அவர்கள் நோயை நிதானித்து அதற்கு தீங்கு விளைவிக்காத உணவுப் பதார்த்தங்களையும், குளிப்பு, முழுக்கு என்பவற்றிலும் கவனம் செலுத்தச் சொல்வர். வைத்தியர் என்ன சொல்லுகின்றாரோ? அதன்படி ஒரு கையாண்டு வந்தால் வருத்தம் குணமாகி நற்பிரஜையாக வாழமுடியும். எனவே ஒரு நோயை கவனிக்கும் போது கால, அர்த்த, கரும, மித்தியா போகத்தை பொறுத்து அமையும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கனடா போன்ற நாடுகளில் பத்தியபாகங்கள் கிடைப்பது மிகக் கடினம். கொடுக்கும் மருந்துகளில் மகிமையும் மங்கி விடும். தாய்நாடு போன்ற நாடுகளில் தக்க பயன் பெற்று வந்த வருத்தம் குணமாகி மீண்டும் சுகத்துடன் வாழ முடியும். இவை அனுபவரீதியாக கண்டவையாகும்.

நாம் நமது உடல்நிலைக்கும் ஏற்பட்டிருக்கும் நோய்க்கும் ஏற்ற யோகாசனத்தை செய்யும் போது ஆரோக்கியத்தை கொடுத்து மனதைக் கட்டுப்படுத்தி இரத்த அழுத்தத்தை ஒழுங்கான நிலையில் வைத்துக் கொள்ள



உதவியாக இருக்கும். இப்பயிற்சிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களிடம் சென்று அவர்களின் சொற்படி செய்வது மிக நன்று. நாம் நினைத்தபடி எந்த பயிற்சியையும் செய்ய முற்படுவது நன்று அல்ல என்பதையும் ஞாபகத்தில் கொள்க.

மேலும் இது சம்பந்தமான மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் 'விளம்பரம்' பத்திரிகை அலுவலகத்தில் மருத்துவ கைநூல் உண்டு. வாங்கிப் பார்வையிடலாம்.

# சிங்கப்பூரில் கல்யாண வீடுத் தேவாரம்! B




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். முன்னைய முடங்கலில் கல்யாண வீடுகளில் படிக்கக் கூடிய தேவாரம் எது? என்பது பற்றியும் எழுதுவதாகச் சொல்லியிருந்தேன். சிங்கப்பூர் மேடையிலே அந்தத் தேவாரம் பொன்னான நேரத்தில் நினைவுக்கு வந்தமை திருவருள் சித்தமே.

‘பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத் தணி
ஆரூரானை மறக்கலுமாமே!

மனித வாழ்க்கைக்கு சிறப்பாகப் புதிதாகப் புளகாங்கிதத்தோடு நிற்கும் மணமகனுக்கும் மணமகளுக்கும் அருள் பாலிக்க வேண்டி மங்கைபங்கனான வேயுறு தோழி பங்கனை, அர்த்த நாரீஸ்வரனை, சங்கரி மணாளனைக் கேட்கும் பாங்கிலே திருவாரூரிலே சுந்தர மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம் இது. இதிலே பொதிந்துள்ள பொருளும் அருளும் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்தினை ஆணும், பெண்ணும் ஒன்றாகிய பொழுதில் இல்லறத்துய்ப்புக்குத் தூண்டி வழிப்படுத்தும் வாழ்த்தாகவும் அமைவது எண்ணி எண்ணி மகிழத்தக்கது.



கல்யாணச் சூழலுக்கு ஏற்றவிதமாக பொன் என்ற மங்கலச் சொல்லை முதல் வைத்து சகல துய்ப்பனவும் உய்ப்பனவும் கிடைக்க அருள் செய்யும் அம்மை அப்பனான ஆரூரனை மறக்க முடியுமா? என்று நிறைவு செய்கிறார். பாடலின் கருத்தும் அதன் உள் பொருளும் உள்ளத்தை அள்ளி மகிழச் செய்கிறது. கல்யாண வீட்டிலே மகிழ்வும் மனம் கனிந்த வாழ்த்துமே பரவவேண்டும். கல்யாணத் தம்பதியினருக்கு பொன்னும் பொருளும் தேவை. இது மட்டும் இருந்து விட்டால் போதாது. போகம் என்னும் தாம்பத்திய உறவு முதல் முக்கியம்.

“மலரினும் மெல்லியது காமம். சில அதன் செவ்வி தலைப்படுவார்” என்ற திருக்குறளையும், “ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்” என்ற திருக்குறளையும் படித்துப் பார்த்து அவற்றின் கருத்தையும் திருக்குறள் உரை நூலில் கண்டு கொள்க. இது வயது வந்தவர்களுக்கு மட்டும் விளங்க வேண்டிய விடயம்.

மனிதர் பிழை விடுவது இயற்கை. இந்தப் பிழை வராமல் இறைவன் தடுத்தாட்கொள்ள வேண்டும். தவறிச் செய்தால் அதனை அவனே பொறுப்பேற்க வேண்டும். எந்தப் பிழையும் வாழ்க்கையில் ஏற்படாமல் இருக்க கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி நில்லாப் பிழையும், நினையாப் பிழையும், எல்லாப் பிழையும் தவிர்க்க பரம்பொருள் பணிக்க வேண்டும். எளிமையாக, எமக்கு கருணையாகத் திகழும் சிவசங்கரன் இப்படிப்பட்டவன் இன்ன தன்மையன் என்று அறியமுடியாத ஆற்றல் உடையவன். பேரருள் உடையவன். அன்னப்பறவைகள் அசைந்தாடும் வயல்கள் சூழப்பட்ட திருவாதவூரில் எழுந்தருளி உள்ளார். அவனை நாம் மறக்க முடியுமா?

நண்பா!
சுந்தரருடைய இந்தத் தேவாரத்தோடு பொருந்தமான சேக்கிழார் பாடிய ஒரு புராணத்தையும் குறிப்பிட்டுப் பேசினேன். ‘நன்மை பெருகு அருள் நெறியே வந்தணைந்து நல்லூரில்’ என்று மங்கலச் சொல்லோடு தொடங்கும் புராணம் அது. மணமக்களுடைய நல்ல, தேவையான நினைவுகளை முடித்து வைக்கிறோம் என்கிறார் சிவபெருமான். கல்யாண முடிச் சோடு மணமக்களின் நல்ல எண்ணங்களும் முடித்து வைக்கப்படுகின்றது. சிவபெருமான் தான் தனியே முடித்து



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 23ஆம் பக்கம்


Seeking freedom from DEBT?
We offer Total Debt Free Solutions

Instant relief with one easy monthly payment. SAVE thousands of dollars.

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
- We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
- We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
- We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பதிற்கு உரிய வழிமுறை செய்தல்
- We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

K.T. Keeran
Credit consultant
Debt Free Credit Solution Inc.
PHONE: 416.434.1522
MOBILE: 416.834.7227
FAX: 1.877.800.7899
Web: http://www.paycontrolled.ca
Email: keeran@paycontrolled.ca
ADDRESS:
SUITE #303, MILNER BUSINESS COURT,
TORONTO ONTARIO M1B 3C6






SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY.
CONTACT DEBT FREE CREDIT SOLUTION FOR A FREE INITIAL CONSULTATION

# தன்னைத் தான் அறியாதாம் தென்னை மரத்துத் தேவாங்கு

நீ அதிதீவிர கவனிப்புப் (ICU) பிரிவிலிருந்தது போதும். 7வது மாடியில் படுக்கை ஒதுக்கப்பட்டுள்ளது அங்கு கொண்டு செல்லவுள்ளோம் என்றார்கள். 702-2 உனது கட்டில், செல்வதற்கு ஆயத்தமா என அவர்கள் சொல்வதற்கும் காலை உணவு பரிமாறுபவர் தட்டில் உணவினைக் கொண்டு தருவதற்கும் சரியாக இருந்தது. அதனை உன் காலடியில் வைத்துக் கொள் நாங்கள் கட்டிலைத் தள்ளிக் கொண்டு போகவுள்ளோம் என்றனர். எனக்கோ காலையில் காப்பி குடித்தால் தான் நாள் விடியும். இதனைக் குடித்தபின் போகலாமே என்றேன். கவலைப் படாதே கோப்பியைச் சிந்தாமல் சிதறாமல் கொண்டு வந்து தருவோம் என்றனர். கட்டிலை நகர்த்தும் தொழிலர்கள் (Porter). சொன்னபடி கொண்டு வந்தும் சேர்த்தனர். ஜன்னல் பக்கத்துக் கட்டில் என்றால் நல்லது எனப் பிள்ளைகள் சொல்வார்கள். இது ஜன்னல் பக்கமாகத் தான் இருக்கும் என எண்ணிய எனக்கு ஏமாற்றம். அந்தப் பக்கத்தில் இன்னொரு நோயாளி படுத்திருந்தார். என்னை இட்டு வந்த கட்டிலிலிருந்து நிரந்தர படுக்கைக்குத் தொழிலர் இடம் மாற்றிக் கொண்டிருந்த போது அசரீரி ஒன்று, "welcome to the play park of St. Michaels' hospital" எனக் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். குள்ளமான மனிதர் ஒருவர் வைத்தியசாலை உடையுடன் நின்றார். சிவந்த மேனி, வெள்ளைத் தலைமயிர் அகன்ற நெற்றி. குவிந்த வாய், வாளிப்பான உயரத்திற்கு மீறிய பருமனுடைய உடல், சிரித்த படியே, "இங்கே பார் நீ உலகிலேயே மிகத் தரமான ஒரு வைத்தியசாலைக்கு வந்துள்ளாய், நிச்சயமாகச் சுகதேகியாகத்தான் வீடேகுவாய் என அருள்வாக்குக் கூறினார். வாய்ச் சவாடல் நிறையவே உள்ளவர் என்பது தெரிந்தது. தொடர்ந்தார். என்னைப் பார். எனக்கு ஐந்து முறை மூளைச் செயலிழப்பு (Stroke) ஏற்பட்டுள்ளது. இரண்டு முறை இதயமாற்றுவழி அறுவை வைத்தியம் செய்துள்ளேன், சலரோகம் நீண்டகாலமாக என்னுடனே உறவாடி வருகிறது. இப்போ சிறுநீரகப் பிரச்சினை. அதனால் நீர்ப்பாயத் தேக்கம் (Odema) உள்ளமையால் நான்கு வாரமாக இங்கே தங்கியுள்ளேன். என்னைச் சுகதேகியாக்கிய பின்னரே வீட்டிற்கு அனுப்புவார்கள். நான் இவ்வைத்தியசாலை யின் பெருமை பற்றி கட்டாயமாக ஒரு



புத்தகம் எழுதியே தீருவேன் என்று கூறி, சற்று நானும் வாய் திறக்க சிறிது அவகாசம் தந்தார்.

நான் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கலாம். தெரியாத் தனமாகக் கேட்டு விட்டேன். 'நீங்கள் எந்த நாட்டிலிருந்து இங்கு புலம் பெயர்ந்தீர்கள்' என்றேன். மடை திறந்தது. நான் அயர்லாந்தினைச் சேர்ந்தவன். எனது மனைவி ஸ்காத்லாந்தினைச் சேர்ந்தவள். எனது வாலிபப் பிராயத்திலேயே நான் இந்நாட்டிற்கு வந்து விட்டேன். நீ அயர்லாந்தினுக்குப் போயுள்ளாயா? என்றார். நான் போகவில்லை ஆனால் எனது பெண்பிள்ளைகள் இருவரும் அங்கு சென்றுள்ளார்கள் என்றேன். அருமையான நாடு, மிகவும் அழகான நாடு நீ பார்க்கத் தவறி விட்டாய் என்றவர் நாட்டின் வளம் பற்றியும் சுற்றுலாப் பிரதேசங்கள் பற்றியும் வருணிக்கத் தொடங்கிவிட்டார். எனக்கோ சங்கடமாக இருந்தது. எனது தந்தையார் முதலாவது உலகப் போரினில் பங்கு பற்றியவர் தெரியுமா என்றவர் திடீரென அவருக்கு எத்தனை பேரப் பிள்ளைகள் சொல்லு பார்க்கலாம் என்றார். ஏதோ ஒரு தொகையினைச் சொல்லலாம் என எண்ணியவனாக ஒரு இருபது இருக்குமா என்றேன். என்ன பகிடி விடுகிறாய். மொத்தமாக 105 பேரப்பிள்ளைகள். என்ன வாயைப் பிளக்கிறாய். அவருக்கு 22 பிள்ளைகள். உலகப்போர் முடிந்து வீடு திரும்பியவருக்கு வேறு பொழுது போக்கு இருக்கவில்லை. தொலைக்காட்சியில்லை. எனவே இதுவேதான் பொழுது போக்காக இருந்தது எனக்கூறியவர் எனது பேரப் பிள்ளைகளுக்கு நான் கூறும் ஆலோசனை முதலில் ஒரு தொலைக்காட்சியை வாங்கிக் கொள்ளுங்கள் என்பதே. தனது நகைச் சுவையினைத் தானே ரசித்தார். நான் சிறிது தூரம் நடந்து விட்டு வரப்போகிறேன், நீயும் அதனைப் பின்பற்று எனக்கூறியவர் கைத்தடியுடன் உலாவக் கிளம்பி விட்டார். சிறிது நேரத்தின் பின்னர் தனது கட்டிலுக்குத் திரும்பியவரைப் பரிசோதித்த தாதி, "உங்களை இன்னும் இரண்டு நாட்களில் வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள் போல் உள்ளது' என்றார். அப்படி என்றால் நான் உன்னை நாளை இரவு ஒரு பிரபலபலமான உணவு விடுத்திக்கு அழைத்துச் சென்று விருந்து தருவேன் என்றார். அப்போ என்னைக் கூட்டிச் செல்லவில்லையா என்றேன். உன்னை நான் அயர்லாந்தினுக்கு அழைத்தல்லவா போகப் போகிறேன். அங்கேயே உன்னைத் தங்க வைத்து விட்டு வந்து விடுவேன் என்றார். ஐயையோ பிள்ளை கள் பாவம் கஷ்டப்படுவார்கள் என்றேன். அவர்களுக்கு என்ன கஷ்டம். ஆஸ்பத்திரி - வீடு என அலையத் தேவையில்லை. இங்கே பார் எனது தாயார் 22 பிள்ளைகளைப் பெற்றார். புண்ணியவதி 45 வயதில் மறைந்து விட்டார். நாம் எல்லோரும் வாழவில்லையா? உனக்கு எத்தனை பிள்ளைகள் என்றார். நான்கு பிள்ளைகள். அவர்களில் ஒருவர் புற்றுநோயினால் உயிரிழந்து விட்டார் என்றேன். ஓ அந்தக் கொடிய நோய்தான் எனது தாயாரையும் அபகரித்தது. 250 றாத்தல் நிறையுடையவராயிருந்த அந்தப் பெண்மணி இறக்கும் பொழுது வெறும் 48 றாத்தல் நிறைக்குச் சுருங்கி விட்டார். மிகவும் அல்லல் பட்டார். அவரை நான் மிகவும் நேசித்தேன். அவரது இறுதி

தொடர்ச்சி 24ஆம் பக்கம்


## கண் போல உங்களை வளர்த்தவர்களை கண்ணீரில் விடலாமா?????

முதியோர் பராமரிப்புச் சேவை



அன்பு, பொறுமை, அரவணைப்புடன் கூடிய முதியோர் பராமரிப்புச்சேவை அனுபவம் உள்ளவரால் வழங்கப்படும்.

மருத்துவ தேவைகளுக்கு அழைத்துச் செல்லவும் ஒழுங்குகள் செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

***Babu: 416.522.3314***

***Jeyanthan: 647.891.5515***

# மூடர்கூடம் - திரை விமர்சனம்

'ஓரம்போ' தொடங்கி 'ஆரண்யகாண்டம்', 'நேரம்', 'சூதுகவ்வும்' எனத் தொடரும் தமிழ் புதிய அலை – குறும்பட இயக்குநர்கள் வரவு - வரிசையில் மற்றுமொரு நம்பிக்கை தரும் திரைப்படம். எளிமையான கதை, இயல்பான நகைச்சுவை, யதார்த்தமான பாத்திரச் சித்தரிப்பு, நேர்த்தியான ஒரு சிறுகதைக்குரிய இலக்கணங்கள், கச்சிதமான உரையாடல்கள் என சார்லி சாப்ளின் படங்களை நினைவுபடுத்துகிறது 'மூடர்கூடம்'. பாட்டாளிகள், அனாதைகள் போன்ற உதிரிகளின் அவலமும் அன்பும் கொண்ட உலகை ஆடம்பரமான மேல்தட்டு வர்க்கத்தினர் உலகோடு மோதவிட்டு, காலத்தால் மறையாத காட்சிகளாக்கியிருப்பார் சாப்ளின். 'மூடர்கூடம்' படமும் நகைச்சுவையின் ஊற்று மூலம் முதலாளித்துவத்தின் சிறப்புகளாகக் கூறப்படும் ஜனநாயகம், செல்வம், வாழ்க்கையை நக்கல் செய்கிறது.



**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

வாழ்க்கையோட பெரும்பாலான விடியல் வழக்கமானதாவே இருக்கு. முழிச்சோம், குளிச்சோம், சாப்பிட்டோம், உழைச்சோம், உறங்குனோம்ணு சக்கரம் சுத்திக்கிட்டே யிருக்கு. இந்த சுழற்சி நிக்கிற கடைசி நேரத்துல நாம திரும்பி பாத்து வந்ததோட பலன் என்ன, வாழ்ந்த வெறுமை என்ன அப்டீங்கிறத உணர்றோம். இந்த மரணம் நோக்கிய பயணத்தில முடிவ மட்டுமே - நம்ம ஒவ்வொரு செயலோட விளைவ மட்டுமே - எதிர்நோக்கி பயணிக்கிற நாம பயணந்தான் வாழ்க்கைங்கிறத மறக்கிறோம். நமக்கு ரொம்ப பக்கத்தில, நமக்குள்ளேயே இருக்கிற வாழ்க்கைய வெளில தேடி அலையிறோம். கடைசி வரைக்கும் அது கிடைக்காமயே சாகிறோம். என்னோட இந்த விடியல் என்னவா வேணா இருக்கலாம். ஆனா கண்டிப்பா வழக்கமானது இல்ல' என்ற வசனங்களோடு தொடங்குகிறது படம். இந்த வசனங்கள் இந்தப் படத்தில் நுழைவதற்கான ஒரு சாவியாகவும் நமக்கு தரப்படுகிறது. இந்தப் படம் நமக்கு தர இருப்பது முடிவை நோக்கிய ஒரு கதையை அல்ல, ஒரு செயல் தரக்கூடிய அனுபவம்தான் என்பதை சொல்கிறது.

வெள்ளை, சென்றாயன், குபேரன், நவீன் என்னும் நான்கு பேரும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு விளிம்புக்கு தள்ளப்பட்ட நான்கு இளைஞர்கள். நால்வரும் வெவ்வேறு காரணங்களுக்காக ஒரே காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிறார்கள். எதிர்பாராத விதமாக அவர்கள் நான்கு பேரையும் விடுவிக்கிறார் அந்த காவல்நிலைய அதிகாரி. போகும்போது நான்கு பேரும் சாப்பிட்டுக்கொள்ளும்படி கூறி ஐநூறு ரூபாய் கொடுக்கிறார். அந்த ரூபாயுடன் அவர்கள் நேராக வந்து கூடுமிடம் ஒரு டாஸ்மாக் பார். சமூகம் தமக்கிழைக்கும் அநீதியையும், தங்களது கேவலமான நிலையையும் எண்ணி நொந்துகொள்ளும் அவர்களின் பார் உரையாடல் சமூகத்தின் மீது கோபமான குற்றச்சாட்டுகளை வைக்கும் உரையாடலாக மாறுகிறது. அந்த கோபத்தின் விளைவாக, அந்த நால்வரில் ஒருவனான வெள்ளையன், தன் இரக்கமற்ற பணக்கார மாமா வீட்டை கொள்ளையடிக்கலாம் என ஒரு திட்டத்தை முன் வைக்கிறான். மற்றவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

வெள்ளையன் மாமா தனது குடும்பத்துடன் வெளியூர் சென்றிருக்கிறார் என்பதால்தான் அந்த வீட்டை கொள்ளையடிக்க தீர்மானிக்கின்றனர். மாமா வீட்டுக்கு சென்றால் அவர்கள் வெளியூர் செல்லாமல் வீட்டிலேயே இருக்கிறார்கள். அதன்பிறகுதான் தெரிகிறது, அவர்கள் தங்கள் திட்டத்தை மாற்றி, மறுநாள் மாலைதான் வெளியூர் செல்ல போகின்றனர் என்று. நால்வரின்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



# A NEW PROJECT BY TRIDEL

ALEXANDRA PARK Community Information

SQ

SPADINA & QUEEN

TRIDEL
BUILT FOR LIFE




For Further Information Please Call

HomeLife / GTA Realty Inc. Brokerage*

"Dream is Yours Obligation is ours"

5215 Finch Ave., E. #203 Toronto ON

Contact: 416.321.6969

*Independently owned & operated


முன்னொருபோதும்
இல்லாத மாதிரியான
பொழுதுபோக்கு
சிறப்பாக:
VIJAY
SPORTSNET
Treehouse
உங்களுக்கு என்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பிரமிக்க வைக்கும் டிஜிட்டல் ரிவியை அறிமுகம் செய்கிறோம். உங்களுக்கு விருப்பமான எல்லா நிகழ்ச்சிகளையும் ஒன்றாக பார்த்து மகிழலாம்.
முதல் வருடத்தில் $265 இற்கு மேல் சேமிக்கலாம்.
$38.67/மாதம்
7-12 மாதங்கள் வரை $49.73/மாதம்
அதன்பின்னர் $54.75/மாதம்
எல்லாவிதமான மாதாந்த கட்டணங்களும் இதற்குள் அடங்கும்.
3 வருடங்களுக்கான HD பெட்டியின் வாடகையும் அதை இணைக்கும் கட்டணமும் இதற்குள் அடங்கும்.
அழையுங்கள் 1 855 852-4344
rogers.com/MyTamilEntertainment
ROGERS
© 2013 Rogers Communications.

# ஓநாயும் ஆட்டுக்குட்டியும் திரைவிமர்சனம்

ஒரு கிரிமினலுக்கும் (ஓநாய்) ஒரு மருத்துவ கல்லூரி மாணவனுக்கும் (ஆட்டுக்குட்டி) இடையே நடக்கும் கதை. மருத்துவக் கல்லூரி மாணவனான சந்துரு, வீடு திரும்பும் போது வழியில் சாலையில் துப்பாக்கிக் குண்டு காயத்துடன் கிடக்கும் எட்வர்டை பார்க்கிறான். அவரது உயிரைக் காப்பாற்ற அவரை அருகில் உள்ள தனியார் மருத்துவ மனைக்குத் தூக்கிச் செல்கிறான். துப்பாக்கிக் குண்டு என்பதால் கிரைம் என்று சொல்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போகச் சொல்கிறார்கள். அவ்வளவு தூரம் போவதற்குள் உயிர் போய்விடும் என்பதால் தன் வீட்டிற்கு கொண்டு வந்து தனது கல்லூரி பேராசிரியரான மருத்துவரிடம் ஆலோசனை கேட்டு அறுவை சிகிச்சை செய்து எட்வர்டின் உயிரைக் காப்பாற்றுகிறான்.

கும்பல்... காட்சிக்கு காட்சி இப்படி துரத்தல் விறுவிறுப்பாக செல்கிறது. கடைசியில் துரத்தல் நிற்கிறது. இறுதிக்காட்சியில் சுடுகாட்டில் ஒரு பார்வையில்லாத சிறுமி, 'எட்வர்ட் அண்ணா ஒரு கதை சொல்லு' என்று கேட்கிறாள். எட்வர்ட் குழந்தைக்கு கதை சொல்லத் தொடங்குகிறார். முடிச்சு அவிழ்க்கப்படுகிறது. படம் நிற்கிறது. அந்த முடிச்சு என்ன? சொன்னால், படம் பார்க்கும் போது சுவாரஸ்யம் இல்லாமல் ஆகிவிடும். எனவே, திரையில் பாருங்கள். தான் காப்பாற்றியவனையே கொன்றால்தான் தனக்கும் தன் குடும்பத்துக்கு விடுதலை என்ற நிலையில் இருதலை கொள்ளி எறும்பாய் தவிக்கும் பாத்திரத்தில் (சந்துரு) நடித்திருக்கிறார். ('வழக்கு எண் 18/9). படம் முழுக்க மாறிமாறி வரும் எத்தனை



- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

காலையில் எட்வர்ட் அந்த வீட்டிலிருந்து காணாமல் போய்விடுகிறார். இதில் இருந்து சந்துருவுக்கு வில்லங்கம் துவங்குகிறது. எட்வர்ட் காவல்துறையால் துரத்தப்பட்ட பயங்கர குற்றவாளி என்று கூறி சந்துருவை சுற்றி வளைக்கிறது வீட்டுக்கு வரும் காவல்துறை. எட்வர்டை சுட்டுபிடிக்க காவல் துறை திட்டமிட்டுள்ளது தெரியவருகிறது. இன்னொரு பக்கம் எட்வர்டின் எதிர் தரப்பும் அவரைத் தேடுகிறது. அடுத்த நாள் இரவில் சந்துருவை பிடித்துவைத்துக்கொள்ளும் எட்வர்ட், காவல்துறையிடம் இருந்து தப்ப சென்னைக்குள்ளேயே இடம் மாறி இடம் மாறி செல்கிறான். சந்துருவும் அவனுடன் கைதியாக ஓடுகிறான். இப்படி இருவரும் ஓடுவது கண் தெரியாத ஒரு குடும்பத்தை காப்பாற்ற. ஏன்? ஏதற்கு? அதே சமயத்தில் எட்வர்டை வேட்டையாட தேடும் கும்பல் அதே மயிலாப்பூர் மஞ்சள் இரவில் மண்டையைப் பியித்துக்கொண்டு துரத்துகிறது. இதில் நிறைய பேர் சாகிறார்கள், அடிபடுகிறார்கள். இதற்கிடையே சந்துருவும் தப்பிக்கிறான். அவனும் இப்போது எட்வர்டை வேட்டையாட துரத்துகிறான். தனது குடும்பத்திற்கு ஆபத்து என்றவுடன் எட்வர்டை கொல்ல நினைக்கிறான் சந்துரு. பிறகு, எட்வர்ட் சொல்லும் ஓநாய் - கரடி - ஆட்டுக்குட்டி கதையைக் கேட்டு மனசு மாறுகிறான்.

காவல்துறை – எட்வர்ட் - சந்துரு - விதமான முகபாவனைகள். எல்லாவற்றிலும் மனதில் நிற்கிறார். கல்லறையில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு காவலர்களை மிரட்டும் காட்சியில் உச்சம் தொடுகிறார். எட்வர்ட்டாக மிஷ்கின் நடித்திருக்கிறார். இரண்டு மெழுகுவர்த்திகளுக்கு முன்னால் அமர்ந்தபடி தன்னுடைய முன்கதையை கண்களில் கண்ணீரை தேக்கிவைத்தபடி சொல்லும் காட்சியில் மிஷ்கினில் ஒரு அற்புதமான நடிகன் வெளிப்படுகிறார். உடல் கொஞ்சம் பெரிய அளவாக இருந்தாலும் உடல் மொழியால் அதனை ஈடுசெய்கிறார், மிரட்டுகிறார்.

இசை விமர்சகர் ஷாஜி சிபிசிஐடி காவல் அதிகாரியாக நடித்திருக்கிறார். அவரது குரல் இந்தப் பாத்திரத்துக்கு அவ்வளவு அருமையாக பொருந்துகிறது. மருத்துவரை வைத்துக்கொண்டு தனது உயரதிகாரியிடம் அவர் பேசும்முறையும் ஆக்சனும் ஒரு படபடப்பான அதிகாரியை காட்டுகிறது. குறிப்பாக கமிஷனர் அலுவலகத்தில் அவர் பேசுகிற மிகநீண்ட வசனம்... தியேட்டரில் விசில் பறக்கிறது. திருநங்கை கிளாடி, பார்வையற்ற பெண்ணாக வருபவர், காவல் ஆய்வாளர் பிச்சையாக வருகிற ரகு என அனைவரும் அவ்வளவு இயல்பாக நடித்துள்ளனர். இளையராஜாவின் பின்னணி இசை கண்களில் நீர்க்கோர்க்க வைக்கிறது. முதல் காட்சியில் சாலையோரம் கிடக்கும் எட்வர்ட் உடலை வண்டியில் வைத்துக்

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

# நடிகை காஞ்சனா சில நினைவுகள்

நினைவுப் பாதையில்தான் எவ்வளவு முகங்கள்.

இரவுப் பொழுது ரயில் பயணமொன்றில் நம்முடனேயே மூங்கில் காடு, ஆறு, மலை, சமவெளி என எல்லா இடங்களும் தொடர்ந்து வந்து, இருள் கலைகையில் சொல்லாமல், கொள்ளாமல் சென்று விட்ட நிலாக்களும் அங்கே இருக்கின்றன. ஆயுள் பூராவும் நம் நிழல் போல் தொடர்பவையும் உண்டு. ஒரு வானவில் என்பது மறைந்து கொண்டிருக்கும் கணங்களிலுங் கூடத் தன் வர்ணங்களையெல்லாம் என் மனதில் நிரந்தரமாக வாரியிறைத்து விட்டுத்தான் சென்றிருக்கின்றது. ஒரு பறவை வந்தமர்ந்து தன் மொழியால் ஏதோ பேசி விட்டுப் பறந்த இடம் என் பார்வையில் ஒரு போதும் வெற்றிடமில்லை. அது எப்போதும் என் மன விருட்சத்தின் கிளையொன்றில் உட்கார்ந்து கொண்டு தன் அலகினை உரசிய படியேதான் இருக்கின்றது.



அவளுடைய அப்பாவுக்கு வெளியூர் ஒன்றுக்கு மாற்றம் கிடைத்து, குடும்பமாக இடம் பெயர்ந்து விட்டார்கள் என்ற தகவல் கிடைத்தது. அதன்பின் அவள் பற்றிய எந்த செய்தியும் என்னை வந்தடைந்ததில்லை. இப்படி நம் வாழ்வில் எவ்வளவோ வானவில்கள், மாயமான்கள். நடிகை காஞ்சனா என் வாழ்வின் இன்னொரு வானவில். திரை வானவில்! ஓராயிரம் முகங்களிடையே ஒரு முகம் மாத்திரம் கல் வெட்டாய்ப் பதிவது

> சென்னையில் அண்மையில் நடைபெற்ற இந்திய சினிமா நூற்றாண்டு விழாவில் எடுக்கப்பட்ட ஒரு படத்தை நடிகையும், இயக்குனருமான ரோகினி அவர்கள் தன் வலைத்தளத்தில் வெளியிட்டிருந்தார். ரோகினி அவர்களும், காஞ்சனா அவர்களும் சேர்ந்து எடுத்துக் கொண்ட அந்தப் படம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. கூடவே சில நினைவுகளையும் கிளறி விட்டன.
>
> அன்றிரவே ரோகினி அவர்களுடன் முகநூல் வழியாகத் தொடர்பு கொண்டு காஞ்சனா பற்றி சில குறிப்புகள் எழுதும் என் விருப்பத்தையும் கூடவே குறிப்பிட்ட அந்தப் படத்தை எனது பக்கத்தில் பதிவிடுவதற்கான அனுமதியையும் கோரியிருந்தேன்.
>
> அவர் மகிழ்ச்சியுடன் தன் சம்மதத்தை எனக்குத் தெரியப்படுத்தியிருந்தார், அவருக்கு என் நன்றிகள்

கேலிப் பேச்சுகளும், குதூகலமும், கும்மாளமும் எங்கள் வகுப்பறையில் பொங்கி வழிந்து கொண்டிருந்த கல்லூரிக் காலம் அது. மூன்று பாடங்களுக்கும் வந்தமரும் ஒரே ஆசிரியரின் முகத்தைப் பார்த்துச் சலித்துப் போயிருந்த எங்களுக்கு இறைவனின் ஆறுதல் பரிசாக ஒரு மாணவி வந்து சேர்ந்திருந்தாள். அதிகமாக அவள் பேசிய தில்லை. ஒரு மழைத் தூறலாக முகத்தில் எப்போதாவது தோன்றுகின்ற அந்தப் புன்னகை கூட விழுந்த சுவடு தெரியாமல் மறு கணம் மறைந்து விடும். ஆனாலும் செஞ் சொண்டுடன் எங்கள் வகுப்பில் வந்தமர்ந்த பச்சைக் கிளி அவள். எங்கள் மரமும், அதன் கிளைகளும், இலைகளும், பூக்களும், பிஞ்சுகளும் அந்தக் கிளியால் பொலிவுற்றன.

அழகுகள் எல்லாம் ஒரே சீருடையில் தோன்றுபவை அல்ல.! வைத்த கண்ணை நகர்த்த முடியாமல் திணற வைக்கும் காந்த ரகம்,.....மோனத் தவமியற்றும் ஆழமான ஆறு ....கிறக்கத்துள் அமிழ்த்தும் மது....., கையெடுத்துக் கும்பிடத் தோன்றும் கோயிற் கருஞ் சிலைகள்.....திமிறும் வெண் குதிரை.... மஞ்சள் வெயில்.....காலை மல்லிகை... இப்படி அழகின் ரகங்கள்தான் எவ்வளவு? எங்கள் ஊரில் மாரியின் எல்லை ஆகக் கூடினால் மூன்று மாதங்கள். எங்கள் சந்தோஷமும் ஒரு முடிவுக்கு வந்து விட்டது. கோடை மறுபடியும் எங்களையும் பசும் புற்களையும் பற்றிக் கொண்டது. வகுப்பறையில் அவளுடைய இருக்கை காலியாகி விட்டது. விசாரித்துப் பார்த்ததில் அரசுப் பணியாளரான

## உமா வரதராஜன்

மனதின் விசித்திரமன்றி வேறென்ன?

இவ்வளவுக்கும் காஞ்சனா பெரியதொரு நடிகையாகத் தமிழ் சினிமாவில் முத்திரை பதித்தவரல்ல. அவர் நடித்த தமிழ்ப் படங்களின் மொத்த எண்ணிக்கை இருபதைத் தாண்டியிருக்காது என்பது என் அனுமானம். நட்சத்திர நடிகர்களுடன் முடிந்தவரை ஒட்டி உரசி, இடுப்பை நெளித்து, ஆடிப் பாடி ஒத்துழைத்த போதும் அவருடைய சமகாலத்து நட்சத்திரங்களான ஜெயலலிதா, கே.ஆர். விஜயா, வாணிஸ்ரீயை அவரால் முந்த முடியவில்லை.

விமானப் பயணங்களை மேற்கொள்ளும் ஒவ்வொரு தடவையும் அங்கே சந்திக்க நேரிடும் உபசரிப்புப் பெண்களில் [Air Hostess] காஞ்சனாவின் முகத்தைத் தேடும் கிறுக்குத் தனம் இன்றுவரை எனக்கு ஒரு வழக்கமாகி விட்டது. வசுந்தரா என்ற இயற் பெயரையுடைய நடிகை காஞ்சனா ஆரம்பத்தில் விமான உபசரிப்புப் பெண்ணாகப் பணியாற்றிப், பின்னர் நடிகையானவர் என்ற தகவல் விதைத்த அசட்டுத் தனமான ஆர்வம் அது...

1964 இல் வெளியான 'காதலிக்க நேரமில்லை' படத்தின் மூலமாக நடிகை

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

# சிங்கப்பூரில்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

வைக்கிறேன் என்று சொல்லவில்லை. தன்னுடைய சக்தியான மனையாள் பார்வதி தேவியோடு சேர்ந்து முடிக்கிறோம் என்கிறார். இத்தோடு மணமக்களின் தலையில் பாதங்களைப் பதித்து அருளுகின்றார். இப்புராணத்தைப் பாடிய சேக்கிழாரை தெய்வச் சேக்கிழார் என்று அழைப்பார்கள்.

கல்யாண வீடுகளில் நேரம் போதாமை என்னும் நிலைமையும் தோன்றுவதுண்டு. இதனால் ஒரு தேவாரம் ஒரு புராணம் போதுமானது. பஞ்சபுராணம் என்னும் ஐந்து தோத்திரங்களையும் அமைதியாக ஆறுதலாகப் பொருள் உணர்ந்து பாடக் கூடிய நேரம் இருக்குமானால் திருவாசக மாக 'உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்பதையும் திருவிசைப்பாவாக 'ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே' என்பதனையும் திருப்பல்லாண்டாக 'சீருஞ் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கே' என்பதையும் வைத்துக் கொள்ளலாம் என்றும் கூறினேன். ஐந்து தோத்திரங்களை யும் படிப்பதற்கு நேரம் இருக்குமானால் தேவாரம் புராணத்தோடு அளவாக நிறைவு செய்வதே சமயோசிதமாக அமையும் என்றும் குறிப்பிட்டேன். சிவாச்சாரியார்களும் கல்யாணத்திருமுறைகளுக்கு மதிப்பளித்து தமது நேரத்தை சுருக்குவதும் வேண்டப்படும் என்று பேசி என் உரையை நிறைவு செய்தேன்.



நளனைப் பற்றிய சனி நீங்கிய தலம் திருநள்ளாறு. சப்தவிடங்கத் தியாகத் தலங்களில் இதுவும் ஒன்று. நகவிடங்கபுரம், நலேசுரம் இதன் வேறு பெயர்களாகும். இங்குள்ள இறைவனின் பெயர் தர்ப்பணேஸ்வரர். இறைவி போகமார்த்த பூண்முலையாள். தலமரம் தர்ப்பை. இங்கு 13 தீர்த்தங்கள் இருந்ததாக கூறப்படுகின்றது. நளதீர்த்தம், பிரம்ம தீர்த்தம், வாணி தீர்த்தம், அன்ன தீர்த்தம், அகத்திய தீர்த்தம், நள கூபம் என்பன இத்தலத்தின் விசேட தீர்த்தங்களாகும்.

நள தீர்த்தத்தில் மூழ்கினால் பாவங்கள் தொலைந்து நன்மை ஏற்படும். ஐந்து நிலைக் கோபுரத்துடன் கூடிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஈசனும் ஈஸ்வரியும் தம்மை வழிபடுவோர்க்கு பேரருள் புரிகிறார்கள். கோவிலுள் நுழைந்ததும் அம்மன் சன்னதிக்கு முன்னால் சனிபகவான் அருட்காட்சி தருகின்றார். மூலவராக தர்ப்பணேஸ்வரரை சனிபகவான் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்று தலபுராணம் கூறுகின்றது. இங்கு கோயில் கொண்டிருக்கும் லிங்கம் தர்ப்பைப் புற்களை ஒன்றாகச் சேர்த்து அமைத்தாற் போன்ற திருமேனியைப் பெற்றுள்ளது. தர்ப்பணேஸ்வரர் இத்தலத்தில் இரண்டாவது விடங்கராகத் திகழ்கின்றார். இங்கு நடக்கும் சனிப் பெயர்ச்சிக்கு பக்தர்கள் இலட்சக்கணக்கில் வருகை தருவர். சம்பந்தர் நான்கு பதிகங்களும் அப்பர் இரண்டு பதிகங்களும் சம்பந்தர், சுந்தரர் ஒரு பதிகமும் இத்தலத்தின் மீது பாடியுள்ளனர். காரைக்காலில் இருந்து எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது. சனிபகவானுக்கு மாத்திரம் இங்கு சன்னிதி உள்ளது.



சனி பகவானைப் போல் கொடுப்பாருமில்லை அவரைப் போல் கெடுப்பாருமில்லை என கூறப்படுகின்றது. சனியன் பிடித்தவனுக்கு சந்தையிலும் கந்தல் கிடையாது, நமக்கு பிடிக்காத ஒருவரை 'சனியனே' என்று திட்டுவதிலிருந்து அவரின் கொடுமை விளங்கும். விநாயகரையும், ஆஞ்சநேயரையும் சனீஸ்வரனால் பிடிக்க முடியவில்லை. ஆனால் இராமர், இராவணன், அரிச்சந்திரன், இந்திரன் போன்றோர் சனீஸ்வரனால் துன்பமுற்றனர்.

ஏழரை நாட்டுச்சனி, அஷ்டமத்துச்சனி, கண்டத்துச்சனி மிகவும் துன்பம் தரவல்லது. ஆனால் சந்திரன் உச்சனாகவோ, சனியனது வீட்டில் அமர்ந்திருந்தலோ துன்பம் செய்வதற்கு மாறாக யோகத்தை தருவது உறுதி.

காக த்வஜாய வித்மஹே
கட்க ஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்த ப்ரசோதயாத்

இது சனிபகவான் காயத்திரி மந்திரம். சனிபகவான் தோத்திரப்பிரியர். சனியால் பாதிப்புக்குள்ளாவனர்கள் சனிக்கிழமைகளில் விரதம் இருந்து நவக்கிரகங்களை ஒன்பது முறை வலம் வந்து எள், நெய், தீபம் ஏற்றி வழிபட்டு எள் சாதம் நெய்வேத்தியம் செய்து ஏழைகட்கு வழங்குதல் சிறந்தது. கறுப்பு உடை தானம் செய்வதும் நலமாகும். எனவே சனிபகவானை தோத்திரம் பாடி துதி செய்வோம்.

முனிவர்கள் தேவரேழு
மூர்த்திகள் முதலினோர்கள்
மனிதர்களை வாழ்வும் உன்றன்
மகிமையது அல்லால் உண்டோ
கனிவுள தெய்வம் நீயே
கதிர் சேயே காகம் ஏறும்
சனியனே உன்னைத் துதிப்பேன்
தமியனேற்கு அருள் செய்வாயே!

தோடுடைய காதுடையன், தோலுடையன் தொலையாப் பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடேல் கடலுஞ் சூழந்த நாடுடைய நம் பெருமான் மேயது நள்ளாறே
- ஞானசம்பந்தர் தேவாரம்.



நா. க. சிவராமலிங்கம்

# நவராத்திரி பூசை



துர்க்கா லச்சுமி சரசுவதி
துணை வேண்டி துதிப்போருக்கு
துயர்கள் போக்கும் தேவியர்
சிவனுக்கு உமையவளாக
சிவசக்தி வடிவம் கொண்டு
சிம்மவாசனத்தில் அமர்ந்தவளும்
வீரத்துக்கு அதிபதியானவளும்
வீரம் வேண்டி துதிப்போர்க்கு
வீரம் வழங்கும் துர்க்கை அவள்
செந்தூர திலகம் உடையவள்
செந்தாமரையில் வீற்றிருக்கும்
செல்வத்துக்கு அதிபதியானவள்
லச்சுமி நாமம் கொண்டவள்
லட்சா லச்சம் செல்வம் கொடுத்து
லட்சாதிபதி ஆக்குபவள்
வெள்ளை உள்ளம் கொண்டவள்
வெண்தாமரையில் வீற்று இருப்பள்
வெண்ணிற ஆடை உடுத்தவள்
சரசுவதி நாமம் கொண்டவள்
சகல கலைகளையும் நல்குபவள்
சகலகலாவல்லி அவள்
மூத்தவளான துர்க்கைக்கு முதல்
மூன்று நாட்கள் பூசைகள்
நாலாம் ஐந்தாம், ஆறாம் நாள்
நாயகி லச்சுமிக்கு பூசைகள்
ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நாள்
எழிலரசி சரசுவதிக்குப் பூசைகள்
நவசக்தி நாயகிகள் மூவற்கும் ஒன்பது இரவுகள்
நடத்தப்படும் பூசையே
நவராத்திரி பூசை

- கவிநாதம் - பரந்தாமன்


## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at **Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228**

## AMBIHA SILK (Fancy Jewellery)

**FINCH & MIDDLEFIELD**



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



அழையுங்கள்: **416.297.5261**

# நடிகை...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

காஞ்சனா விமானத்திலிருந்து சினிமாவுக்கு வந்து சேர்ந்தார். கோடீஸ்வரர் ஒருவரின் இரண்டு புதல்விகளில் மூத்தவள் பாத்திரத்தில் அறிமுகமானார். கோடீஸ்வரரின் புதல்விகள் என்பதால் அவசியம் காதல் வந்திருக்கும் என்பதைத் தனியாகச் சொல்லத் தேவை இல்லை. படத்தின் தலைப்பு 'காதலிக்க நேரமில்லை' என்றிருந்தாலும் புத்திரிகளுக்குப் படம் முழுக்கக் காதலிப்பதும், ஆடிப் பாடுவதுந்தான் வேலை.

ஈஸ்ட்மன் வர்ணத்தின் குளுமையின் விகிதத்தை அதிகரித்ததில் காஞ்சனாவுக்கும் முக்கிய பங்கிருந்தது. ராஜஸ்ரீ தன் எண் சாண் உடம்பை இறுகக் கவ்விய ஆடை அலங்காரம் மூலம் இந்தப் படத்தில் மயக்கு வித்தைகள் புரிய முயன்ற போதும் காஞ்சனாவிடம் வெளிப்பட்ட எளிமையின் அழகு இறுதியில் மனதில் பதிந்தது. அவருடைய பலம் உதடுகளுக்குப் பின்னால் எப்போதும் ததும்பிக் கொண்டிருக்கும் அந்த வசீகரமான புன்னகை. படம் ஆரம்பமாவதே காஞ்சனா தோன்றும் ஒரு பாடல் காட்சியுடன்தான். அந்தப் பாடலின் முதல் வரி கூட மிகவும் சிரத்தையுடன் காஞ்சனாவை நோக்கிப் புனையப் பட்டதாகவே இன்று தோன்றுகின்றது.

"என்ன பார்வை... உந்தன் பார்வை?.." அவருடைய காதலனாக வந்த முத்துராமன் திரு திருவென்று முழித்தபடி பாடல் காட்சி களில் காட்டிய அபத்தமான முக பாவனைகளிலிருந்து ரசிகர்களின் கவனத்தைத் திருப்பியதில் காஞ்சனாவுக்கு பெரும் பங்கிருந்தது.

பின்னர் வீர அபிமன்யுவில் (1965) ஏ.வி.எம். ராஜனின் ஜோடி. அபிமன்யு எதிரியைத் துரத்திச் செல்லுகின்றான். காட்டின் நடுவே அந்தப் பேரழகி குறுக்கிடுகின்றாள். 'வேலும் வில்லும் விளையாட' என்று அபிமன்யு வியப்புடன் வர்ணித்துப் பாடும் அளவு தகுதி காஞ்சனாவுக்கு இருந்தது என்பதை மஹா பாரதத்தைப் படிக்காதவர்களும் ஒத்துக் கொள்வார்கள். 1966 இல் எம்.ஜி.ஆர். 'உடன் பறக்கும் பாவை'யில் காஞ்சனா நடித்தார். ஆனால் அதில் பறக்கும் பாவை சரோஜாதேவிதான். துரதிர்ஷ்டவசமாக காஞ்சனாவை "இறக்கும் பாவை"யாக்கி இருந்தார்கள். எம்.ஜி.ஆரும், ராமண்ணாவும் ஓர வஞ்சனை செய்யாமல் காஞ்சனாவுக்கும் "முத்தமா, மோகமா" என்றொரு பாடலை வழங்கி இருந்தார்கள். எம்.ஜி.ஆர். மீது ஒரு தலைக்காதல் வைத்து, ஏமாந்து வில்லியாக, கொலை காரியாக மாறுவதாக இதில் காஞ்சனாவுக்குப் பாத்திரம்.

பாவம், காஞ்சனாவின் தோற்றம் அவர் ஒரு கேக்கை வெட்டுவதற்குக் கூடக் கத்தியைத் தூக்கக் கூடியவராகத் தோன்றவில்லை. ஒருதலைக் காதலுக்காக அவர் ஒரு கொலைகாரியாக மாறினார் என்ற திருப்பம் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு காஞ்சனாவின் வெள்ளந்தித் தோற்றம் முக்கிய காரணம். 'இத்தனை சிறிய தலையின் மீது எத்தனை சுமைகளடா' என்று பாட வேண்டி ஆகி விட்டது. ஒரு ரெவெரெண்ட் சிஸ்டரின் (அருட் சகோதரியின்) கையில் பிஸ்டலைப் பார்த்தது போன்ற வரலாற்றுக் கொடுமை.

1966 இல் கலைஞரின் 'மறக்க முடியுமா?'விலும் காஞ்சனாவுக்கு இரண்டாம் நிலைப் பாத்திரந்தான். முதலாளியின் மகளாகப் பாத்திரமேற்ற காஞ்சனாவை அசடு வழிய, வழிய எஸ்.எஸ்.ஆர். காதலிக்கின்றார்.

அவசர அவசரமாக, அளவு குறைவாகத் தைக்கப்பட்ட ஆடையை காஞ்சனாவுக்கு இதில் ஏனோ வழங்கியிருந்தார்கள். எஸ்.எஸ்.ஆர் உடன் "எட்டி எட்டி ஓடும் போது" "என்றொரு பாடலை மாடிப் படிகளின் கைப்பிடியில் வழுக்கியபடி அவர் பாடுவது போல் பாவனை காட்டுவார். கைப்பிடியில் உராய்ந்தும், படிகளில் உருண்டு புரண்டும் அழுக்கை ஒரு வழியாக அவர் சுத்தம் செய்தது நல்ல காரியந்தான். ஆனால் இந்தக் காட்சி அவருக்குக் கண்ணியம் சேர்த்ததாகக் கூற முடியவில்லை.

1966 இல் அவர் நடித்து வெளிவந்த இன்னொரு திரைப்படம் 'மோட்டார் சுந்தரம்பிள்ளை'. சிவாஜி-சௌகாரின் ஒன்பது பிள்ளைகளில் ஆக மூத்தவர் இவர். ஆனாலும் காட்சியமைப்புகள் இளைய பெண்ணாக நடித்த ஜெயலலிதாவையே அதிக வசனங்கள் பேச வைத்தன. கணவனின் பட்டப்படிப்பு குழம்பி விடக் கூடாதே என்பதற்காக அவனைப் பிரிந்து அப்பா வீட்டில் தங்கியிருந்து கடிதங்கள் மூலம் பேசிக் கொள்ளும் மூத்த மகள் பாத்திரம் காஞ்சனாவுக்கு. கணவனாக நடித்தவர் சிவகுமார். உடம்பில் சதை போடாத, ஒழுங்காகத் தலைவார, சீப்புக் கிடைக்காத காலத்தில் அவர் நடித்த இரண்டாவது தமிழ்த் திரைப்படம் இது.

காஞ்சனா நாயகியாக நடித்த 'அதே கண்கள்' திரைப்படம் 1967 இல் வந்தது. நாயகியின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ச்சியாக மர்மமான முறையில் கொல்லப் படுகின்றார்கள். நாயகியும் இலக்கு வைக்கப்படுகின்றாள். கொலையாளி மட்டுந்தான் படத்தில் இறுதியாக மிஞ்சுவானோ என ரசிகர்கள் அஞ்சிக் கொண்டிருக்கும் வேளையில் நல்ல வேளையாக கொலையாளி மடக்கப் பட்டு விடுகின்றான். நாயகன் கொலையாளியுடன் போராடி அவளை மீட்டு விடுகிறான். 14 நாட்கள் விடுமுறையில் வரும் நாயகி தன் தோழிகளுடன் "பூம் பூம் பூம்...மாட்டுக் காரன்" பாடலைப் பாடிக் கொண்டே சமூக சேவை செய்கிறாள். தோழியர்களின் ஆடை அலங்காரங்களைக் கண்டு மாடு கடைசி வரை




மிரளவில்லை என்பது இங்கே அவசி யம் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம்.

1967 இல் வந்த 'தங்கை' திரைப்படத்தில் காஞ்சனா இரவு விடுதி நடனக்காரி. தங்கையைக் குணப்படுத்த வேறு வழியில்லாமல் சூதாடியாகி விட்ட ஒருவனை (நல்ல வேளையாக அவன் டாக்டர் ஆகும் வரை தங்கை காத்திருக்கவில்லை) ஒருதலையாக நேசிக்கும் பாத்திரம். கடைசியில் நாயகனைக் காப்பாற்றுவதற்காக வில்லனின் துப்பாக்கிக் குண்டுகளை மார்பினில் தாங்கி தியாகச் சாவைப் புன்னகையுடன் ஏற்றுக் கொள்ளுகிறாள். காஞ்சனாவின் நடனத்தில், எல்.ஆர்.ஈஸ்வரியின் கிறக்கமூட்டும் குரலில் ஒலிக்கும் 'நினைத்தேன் உன்னை...' யும்
தத்தித்... தத்தி .." யும் உற்சாகம் தந்தாலும் அவற்றுக்கு நடனமாடும் காஞ்சனா வழி தப்பிச் செல்லும் ஆட்டுக் குட்டி போல்தான் அங்கே தோன்றினார். விஜயலலிதாவும், ஜோதிலட்சுமியும் வெளியூர் சென்று விட்ட ஒரு விடுமுறை காலமாகக் கூட அது இருந்திருக்கலாம்.

டி. எஸ். பாலையாவின் மூன்று மருமகள்களில் ஒருத்தியாக காஞ்சனா பாத்திரமேற்ற பாமா விஜயம் 1967 இல் வந்தது. "பக்கத்து பங்களாவுக்குப் புதிதாகக் குடி வந்திருக்கும் பாமா என்ற சினிமா நடிகையால் மூன்று மருமகள்களின் குடும்பங்களிலும் உண்டாகும் அதிரடி மாற்றங்கள்தான் இந்தத் திரை நாடகத்தின் உள்ளடக்கம்.. முகங்களைச் சொடுக்குவதிலும், உதடுகளைச் சுளிப்பதிலும், வக்கணை பேசுவதிலும் கே.பாலசந்தர் படங்களில் சிறந்து விளங்கிய சௌகார் ஜானகி, ஜெயந்தி ஆகியோருக்கு மத்தியில் கண்ணாடி அணிந்த காஞ்சனாவும் தன் முகத்தைக் காட்ட வேண்டியிருந்தது. அவர்களின் அழுக்குப் பிடியை மீறி, ஜோடியாக வழமைபோல் திரு திருவென்று முழித்தபடி நடித்துக் கொண்டிருக்கும் முத்துராமனுக்கும் முட்டுக் கொடுத்துக் கொண்டு, அதேவேளை சௌகார் ஜானகி, ஜெயந்தி ஆகியோரின் அழுக்குப் பிடியையும் மீறி, தன்னை நிரூபிக்க வேண்டிய கஷ்டமான நிலைமை காஞ்சனாவுக்கு. காஞ்சனாவின் வசீகரம் இந்தப் படத்தின் இரண்டு பாடல் காட்சிகளில் மிகச் சிறப்பாக வெளிப்பட்டன. மூன்று மருமக்களும் சேர்ந்து பாடும் "ஆணி முத்து வாங்கி வந்தேன் ஆவணி வீதியிலே" என்ற பாடல் காட்சி அவற்றில் ஒன்று.. மற்றையது படுக்கையறையில் கணவனுடன் சரசமாடிக் கொண்டு பாடும் "நினைத்தால் சிரிப்பு வரும், நினைவில் மயக்கம் வரும்" என்ற பாடல் காட்சி. அவர் சரிந்து சரிந்து கணவன் மேல் சாயும் பாவனையில் காமத்தின் உள்ளடக்கம் ஒளிந்திருந்தது.

1969 இல் பெரும் பணச் செலவில், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று படமாக்கப்பட்ட ஒரு படத்தின் நாயகியாகவும் காஞ்சனா இருந்திருக்கிறார். படத்தின் பெயர் 'சிவந்த மண்'. இந்தியாவின் சமஸ்தானம் ஒன்றின் மஹாராஜாவின் மகளான நாயகி லண்டனில் கல்வி பயில்கிறாள். அதே சமஸ்தானத்தின் உயர் பொலீஸ் அதிகாரியின் மகனும் அங்கே கல்வி பயில்பவன். குடும்ப பின் புலங்களை பரஸ்பரம் அறிந்து கொள்ளாமலேயே காதல் மலர்கின்றது. ஏனைய தமிழ்க் கதாநாயக நாயகிகளுக்கு கிட்டாத அதிர்ஷ்டம் 1969 இலேயே இவர்களுக்குக் கிட்டியதென்பது வரலாற்றில் குறிப்பிட வேண்டிய முக்கிய விஷயம். கிடைத்த வாய்ப்பை வீணாக்காமல் பாடலொன்றின் தொகையறாவை லண்டனிலும், சரணத்தை பிரான்சிலும், பல்லவியை ஸ்விட்சர்லாந்திலும் பாடினார்கள். ஆல்ப்ஸ் மலையின் சிகரத்தையும், அழகிய ரைன் நதிக்கரை ஓரத்தையும் ஒரே பாடலில் 1969 இலேயே பார்த்த தமிழ் ரசிகர்களும் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! மூன்று காதல் பாடல்களுக்குப் பின் ஒரு கட்டத்தில் இருவருக்கும் முழிப்பு நிலை ஏற்பட்டு விடுகின்றது. தங்கள் சொந்த பூமியில் தன் கைகளுக்குள் ஆட்சியதிகாரத்தைக் கபடத் தனமாகக் கொண்டு வந்து விட்ட திவான் நிகழ்த்தும் அராஜகங்களுக்கு முடிவு கட்டப் புரட்சிப்படை அமைக்கின்றனர். திவானைத் தீர்த்துக் கட்டக்கூட காஞ்சனா அரை குறை ஆடையுடன், 15 தடவைகள் சாட்டையடி பட்டு "பட்டத்து ராணி பார்க்கும் பார்வையை" மேடையில் ஆடிப், பாட வேண்டி இருக்கிறது.

மனோகரா பாணியும், ஹொலிவூட் பாணியும் பின்னிப் பிணைந்த சிவந்த மண்ணின் அழகில் காஞ்சனாவுக்கும், வெளிநாட்டுக் காட்சிகளுக்கும் முக்கிய பங்கு இருந்தன. ஆனாலும் வீர சாகசங்களின் திருவுருவாகக் காட்டப்படும் நாயகனின் சிம்மக்குரலின் முன்னே காஞ்சனா ஒரு மருண்ட முயலாக ஆனதுதான் வரலாறு. என்னுடைய கணிப்பில் காஞ்சனாவின் திரையுலகப் பயணத்தில் அவருக்குப் பெருமை சேர்த்த படங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று ஒன்று 1969 இல் வெளியான சாந்தி நிலையம். மற்றையது 1971 இல் வெளியான "அவளுக்கென்று ஓர் மனம்".

'SOUND OF MUSIC' ஐத் தழுவி வந்த சாந்தி நிலையத்தில் காஞ்சனாவுக்குக் கச்சிதமான வேடப் பொருத்தம். SOUND OF MUSIC திரைப் படத்தின் ஜீவநாடி ஜூலி ஆண்ட்ரூஸ் [JULIE ANDREWS ] என்ற நடிகை. கிட்டத்தட்ட அந்தத் துடிப்பையும், தாய்மையின் பரிவையும், இளவயதின் கனவுகளையும், மென் சோகத்தையும் காஞ்சனா இதில் மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தினார் என்றே சொல்ல வேண்டும். அந்தக் காலகட்டத்தில் புகழில் காஞ்சனாவை விட மிகவும் ஸ்திரமாக இருந்த ஜெயலலிதா, கே.ஆர். விஜயா, வாணிஸ்ரீ போன்றவர்களுக்கு ஒரு போதும் சித்திக்காத வரம் அது.

சிற்றன்னையின் கொடுமை தாளாமல் அனாதைக் கோலத்தில் பள்ளிக் கூடமொன்றில் சேரும் அந்தச் சிறுமி அதே பாடசாலையில் ஆசிரியையாக மாறுகின்றாள். தன் ஆசிரியை தனக்குச் சொல்லித் தந்த "இறைவன் வருவான்.. அவன் என்றும் நல் வழி தருவான்" பாடலை தன் மாணவிகளுக்குச் சொல்லித் தருகின்றாள். காஞ்சனாவின் தோற்றத்துக்கு மிகவும் கச்சிதமாகப் பொருந்திய பாத்திரம் அது. காஞ்சனாவின் அழகைப் பயன்படுத்திய பல படங்களின் மத்தியில் அவருடைய ஆற்றலை அடையாளம் காட்டிய முக்கிய படம் இது. "அவளுக்கு என்று ஓர் மனம்" வெளி வந்த ஆண்டு 1971. தன்னை உருக்கி, பிறருக்கு ஒளி வழங்கும் மெழுகுவர்த்தியைப் போன்ற தியாகப் பாத்திரம். இதில் நடிகை பாரதிக்குப் போய் விட்டது. ஆனாலும் காஞ்சனாவுக்கும் இந்தப் படத்தில் முக்கியத்துவம் கிடைத்திருந்தது. தன் மனதுக்குள் வைத்துப் பூசித்து நேசித்தவனை தோழி திருமணம் செய்து கொள்ளுகின்றாள். தோழியுடன் ஒருகாலத்தில் தனக்கு இருந்த காதல்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# 16வயது மாணவனின் சாதனை

கருப்பை, கணையம் மற்றும் நுரையீரல்களில் வரும் புற்றுநோய் உயிருக்கு ஆபத்தை தருபவை. கணைய (Pancreatic) புற்றுநோய் அமெரிக்காவில் மரணத்தை விளைவிக்கும் காரணங்களில் நாலாவதாக இருக்கிறது. இவற்றை எவ்வளவு வேளைக்கு கண்டுபிடிக்க முடியுமோ அவ்வளவு கெதியாக மாற்றலாம். கணைய புற்றுநோய் வளர முன்னம் கண்டுபிடிக்கும் ஒரு வழியை மாணவன் ஒருவர் கண்டுபிடித்து இருக்கிறார். இது இப்பொழுது இருக்கும் முறைகளை விட அதிகூடிய அளவு சரியானதும் குறைய நேரம் எடுப்பதும், குறைந்த செலவு உடையதுமான முறை ஆகும்.



அதாவது இந்த பரிசோதனைமுறை 168 மடங்கு கெதியாகவும் 26,000 மடங்கு குறைந்த செலவுடனும், 400 மடங்கு கூடிய அளவிற்கு சரியானதாகவும் இருக்கிறது. இந்த முறைக்கு 3 சதம்தான் செலவாகிறது. 5 நிமிடம் தான் எடுக்கிறது, 90% சரியான மறுமொழியும் கிடைக்கிறது. இப்போதைய பரிசோதனை முறைக்கு $800 செலவும், 30%ஆனவர்களில் மட்டுமே புற்று நோயை கண்டுபிடிக்கிறது.

புதிய முறையை கண்டுபிடித்தவர் அமெரிக்காவில் உயர்தர பாடசாலைக்கு செல்லும் 16 வயது மாணவன் Jack Andraka. இதை அவர் கண்டுபிடித்த போது, 200 விஞ்ஞானிகளிடம் உதவி கேட்டார். 199 பேர் இல்லை என்றார்கள். ஒருவர் மட்டுமே இவரை நம்பினார். இவர்கள் இருவருமாக சேர்ந்து Jack இன் யோசனையை பரிசோதித்து பார்த்தபோது அது மிகவும் நன்றாக வேலை செய்யும் என்று கண்டு பிடித்தார்கள்.

இனி Jack இன் யோசனையைப் பற்றியும் ஏன் இதை அவர் செய்ய விரும்பினார் என்றும் பார்ப்போம். கணையப்புற்று நோயினால் Jack இன் குடும்ப நண்பர் ஒருவர் இறந்து போனதால் தான் அவர் இதற்கு ஒரு தீர்வு கண்டுபிடிக்க வேண்டும் என்று யோசித்தார். பின்னர் அவர் Google ஐயும், Wikipedia ஐயும் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்தார். முதலாவதாக அவர் இப்போதைய பரிசோதனை முறையை பற்றி பாடித்தார்.

இப்போது நாங்கள் Mesothelin என்ற புரதத்தை இரத்தத்தில் தேடுவோம். இது எல்லோரிடமும் இருக்கும். ஆனால் கணைய, கருப்பை மற்றும் நுரையீரல்களில் புற்றுநோயுடையவர்களில் இது கூடுதலாக



ஞா. ஆரணி
அகவை 15

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# வாழ்வு என்பது அதுதான்

## *That's life*

ஏற்றத் தாழ்வும், நல்ல நாள் மற்றும் கூடாத நாட்கள் எல்லோருடைய வாழ்விலும் ஏற்படும். மக்கள் சில நாட்கள் நன்றாக உள்ள தென்றும் சில நாட்கள் நன்றாக இல்லை யென்றும் இதுதான் வாழ்க்கை என்று கூறுகின்றார்கள். அமைதிக்காகக் குரல் கொடுப்பவரும், நிலையான நிறைவை கண்டு கொள்வதற்கு மக்களுக்கு பல வருடங்களாக உதவிவருபவருமான மகராஜி அது அப்படி இருக்கத் தேவையில்லை எனக் கூறுகின்றார். உண்மையிலேயே இது மிகவும் எளிமையானதொன்றாகும். உங்கள் ஆணவம் திருப்திப்படும் போது நீங்கள் உலகின் உச்சியில் இருப்பதுபோல் தோன்றும். அதைத் தொடர்ந்து உடனடியாக நீங்கள் அதன் பாதாளத்தில் இருப்பதுபோல் உணர்வீர்கள். அதள பாதாளத்தில் இருக்கும்போது மீண்டும் ஆணவம் ஏற்படுகின்றது.

ஒரு புதிய காரை நீங்கள் வாங்கி அது தொடர்ந்து பழுதடைந்து கொண்டிருந்ததால் நீங்கள் அதை வாங்கியவரின் கடைக்குக் கொண்டுபோய் இந்தக் காரில் ஏதோ பிழை இருக்கின்றது சில நேரம் இது வேலை செய்கின்றது சில நேரங்களில் வேலை செய்வதில்லை எனக் கூறும்போது, அதற்கு காரை விற்பனை செய்தவர் இதுவும் வாழ்க்கையைப் போன்றதுதான். சில நேரம் அது வேலை செய்யும் சில நேரங்களில் வேலை செய்யாது. நீங்கள் எதற்காக இதைக் கொண்டு வந்தீர்கள் என்று கேட்டால் எப்படி யிருக்கும்?. எனினும் மக்கள் சிலநேரம் நாம் வேலை செய்வோம் சில நேரங்களில் நாம் வேலை செய்வதில்லை என்று கூறினால் எல்லாம் சரியென்பதா அதன் கருத்து.

அது அப்படி இருக்கக் கூடாது என நான் கூறுகின்றேன். இது எப்படி இருக்கவேண்டும் என்றால் ஆனந்தத்திற்கான ஊற்று உங்களுக்குள்ளேயே உள்ளது என்பதை நீங்கள் தெரிந்துகொண்டு எப்பொழுதும், நாள் முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதில் நேரத்தைச் செலவு செய்வதாக இருக்க வேண்டும். மற்ற விடயங்களைச் செய்வதிலும் நீங்கள் நேரத்தைச் செலவு செய்கின்றீர்கள். உங்கள் வேலை உள்ளது. உங்கள் பிள்ளைகளை பாடசாலை செல்வதற்காக ஆயத்தம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் முன்னுரிமை நிறைவை அனுபவிப்பதற்கே வழங்கப்பட வேண்டும். இதைத் தெரிந்திருந்தும் மக்கள் தொடந்தும் வேதனை, துன்பம் மற்றும் நிலையாமையில் மீண்டும் மீண்டும் அகப்படுகின்றார்கள். வேதனையென்பது ஒரு பக்கவிளைவே அல்லாமல் வேறு எதுவும் அல்ல. நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு வீடு திரும்புகின்றீர்கள், உங்கள் கால்கள் வலிக்கின்றன. நீங்கள் என்ன செய்வீர்கள்?. நீங்கள் வேதனையில் இருந்து விடுபட அஸ்பிரின் சாப்பிடலாம் அல்லது வைத்தியரை அழைப்பீர்கள். அல்லது அம்பியூலன்ஸை அழைத்து எனது கால்கள் வலிக்கின்றன என்னை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள் எனக் கூறுவீர்கள். இல்லை: மக்கள் என்ன செய்கின்றார்கள் எனில் தமது காலணிகளை கழற்றிவிட்டு அப்பாடா என்பார்கள். வாழ்வில் உள்ள வேதனைகளையும் நிச்சயமற்ற தன்மையையும் அப்புறப்படுத்த முயற்சிக்கும்போது திருப்தியின் வெளிப்பாடு என்ன? என்று மகராஜி கேட்கின்றார். ஆரம்பகாலம் தொட்டு மக்கள் கேட்கும் நான் யார் என்ற ஒரு எளிமையான கேள்விக்கான விடையை அறிந்துகொள்வதாகும்.

பொறாமை, பயம், கோபம், நம்பிக்கையற்ற தன்மை, வேதனை, நிலையற்ற தன்மை இவற்றை அனுபவிக்கக் கூடியவர்கள் தான் நாம். அவையெல்லாம் எமது வாழ்வில் அதிகளவில் சேர்ந்தால் அவற்றால் எமக்கு அதிகுறைந்தது பிரச்சினைகளாவது ஏற்படும். நாம் இந்த அழகிய உலகில் உள்ளுணர்வு, சிந்திக்கும் ஆற்றல், உணரும் ஆற்றல், உடன் விடப்பட்டு இருந்தும் எதற்காக இந்த முட்டாள்தனமான விடயங்களைத்தான் உணருகின்றோம். அதுவா நீங்கள்? அல்லது தெய்வீகம் உள்ளத்தில் குடிகொண்ட ஒருவரா நீங்கள்? அமைதி நடனமாட விரும்பும், ஆனந்தத்தின் தாளம் பலமாக ஒலித்துக் கொண்டிருக்கும், ஒவ்வொரு நாளும் அழகான உண்மை நடனமாடும் ஒருவரா நீங்கள்?. நான் கேள்வி கேட்கின்றேனே ஒளிய எனக்குப் பதில் தேவையில்லை. என்னுடைய முயற்சி யெல்லாம் இந்தச் சாத்தியத்தை ஒவ்வொரு நாளும் அடையாளம் கண்டு கொள்வதுதான். அதைச் செய்வதற்கு ஒரே ஒரு வழி இருப்பது எனக்குத் தெரியும். உள்ளுணர்வுடன் இருப்பதுதான் அது. ஒரே ஒரு விடயத்தால் மட்டும்தான் என்னை அந்த இடத்தில் வைத்திருக்க முடியும். அதுதான் உள்ளுணர்வுடன் இருப்பது. ஒவ்வொரு நாளும் இந்த உள்ளத்தை நன்றியுணர்வால் நிரம்பியிருக்க விடுவதும், உயிரோடு இருப்பதற்கு நன்றி செலுத்துவதும், அதை மெச்சுவதும்தான்.

இதைக் கேட்டு மக்கள் எப்போதும் உள்ளுணர்வுடன் இருப்பதென்பது சாத்திய மற்றதொன்று என்று நினைக்கின்றார்கள். அது மிகவும் சாத்தியமானது. ஏனெனில் அவரின் செய்தி சொற்களுக்கு அப்பாற்பட்டது. வாழ்வில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு என்னும் சுழற்சியில் இருந்து விலகி, அவர்களின் உள்ளத்தில் இருக்கும் அமைதியை அடைய விரும்பும் எவருக்கும் அவர் உதவி செய்ய தயாராக உள்ளார். பாட்டொன்று உள்ளது அதைப் பாட வேண்டும். மேளம் ஒன்றுள்ளது அதைத் தட்டவேண்டும். உண்மை நிலையொன்று உள்ளது அது உணரப்பட வேண்டும். உண்மை உள்ளது அதை அரவணைக்க வேண்டும். வாழ்வு இப்படித்தான் இருக்க வேண்டும் என மகராஜி கூறுகின்றார்.

***Words of Peace***
மகராஜி பற்றி மேலும் அறிந்து கொள்ள:
416.431.5000
www.wopg.org / www.tprf.org

# Education

## Review Tutorials 13-19

### ➢ CHEMISTRY 12 & IB

(A) A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.

(B) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

**IB organic Chemistry**

(i)




(i)Name the above structure.
(ii) Predict whether β- elimination reaction proceeds by an $E_1$ or $E_2$ mechanism.

(ii) Show reagents and experimental conditions to synthesize the following compounds from 1-propanol.
(a) Propene (b) Propanal (c) proponoic acid
(d) 2- proponol (e) 2- bromopropane
(f) Propanone

### ➢ BIOLOGY( Gr 11)

State viruses are not considered in any of the five-kingdom system.

### ➢ BIOLOGY(Gr12):

(i) Describe the cyclic and and non-cyclic photophosporilation and its importance in carbon fixation.

(ii) Explain when and how mRNA is modified in the nucleus and the purpose.

(iii) Explain how does mammalian red blood cells derive energy.

### ➢ PHYSICS (Gr12)

A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ballis 15 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.
The ball is pulled back 20° from the vertical and then released. Calculate the speed of the ball just before impact and the tension in the rope just before impact.

(b) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force *Fmax* exerted by the ball on the wall.

## Answer Key 13-18

### ➢ CHEMISTRY 12 & IB

(I) Boiling point of hydrazine is higher due to greater inter molecular forces compared to ethene. Intermolecular forces between hydrazine is due to London dispersion forces and dipole –dipole attraction, where as in ethene only London dispersion forces.

(ii)(a) $SO_3^{2-} + H_2O - 2e \rightarrow SO_4^{2-} + 2H^+$ .....1
$MnO_4^-$ $2H^+ + 10e \rightarrow Mn^{2+} + SO_4^{2-}$ ....2
$5SO_3^{2-} + 6H^+ + 2MnO_4^- \rightarrow 2Mn^{2+} + 5SO_4^{2-} + 3H_2O$

b)/ $HNO_3 + HCl + NH_4Cl \rightarrow N_2O + Cl_2 + HClO_4 + H_2O$

- ➢ $4H_2O + Cl^- \rightarrow ClO_4^- + 2H^+ + 8e$
- ➢ $2Cl^- \rightarrow Cl_2 + 2e$
- • $NH_4^+ + H_2O - 8e \rightarrow N_2O + 10H^+$
- • $NO_3^- + 10H^+ + 8e \rightarrow N_2O + 5H_2O$

$6HNO_3 + 7HCl + 2NH_4Cl \rightarrow 4N_2O + Cl_2 + HClO_4 + 10H_2O$

**BIOLOGY 11 (Genetics)**

(i) Genes associated with colour vision are found on the X- sex chromosome (XX) while males have only one X. (XY). Therefore males more likely to get colour blindness.

(ii)lethal recessive alles usually do not have a large effect on heterozygous carriers. As a result , alles for recessive disorders may pass undetected from generation to generation.

**PHYSICS (GR12)**

( A) Assume that the bullet is inside the bob
If bob swing height of h m , use conservation energy

$\Delta \frac{1}{2} m_1 v_1^2 = \Delta (m_1 + m_2) gh$ (Ans = 46m)

(B)(i) I= $P_f - P_i = mV_f - mV_i$ (0.16x 52) – (0.16x9 –(40)
= 8.32 + 6.4
= 14.72 kg.m/s (Ans= 15kg.m/s)

(ii) $F_{(ave)} = J/\Delta t$ =15/0.0013 = 11323N Ans=1.1x $10^5$ N)

(i) Therefore this element has 5 electrons in the valence orbital. Therefore Group V or Group 15.
(ii) 364 (iv) $H_2S$

**MATH (Gr 12)**

$f(x) = x(30-2x)(20-2x)$ ; $x(30-2x)(20-2x) = 1008$
$f(x) = 4x^3 - 100x^2 + 600x$ ; $4x^3 - 100x^2 + 600x = 1008$
$x$ = 3cm or 4.92cm

**ADV. FUNCTIONS 12**

$\sin x \leq \frac{\sqrt{2}}{2}$ $(0, \frac{\pi}{4}) \cup (\frac{3\pi}{4}, \pi)$

*Answer key 13-19, - next issue*
Contact: 647 341 3975
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# நடிகை...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

விவகாரத்தை அம்பலப்படுத்தப் போவதாகப் பழைய காதலன் மிரட்டுகின்றான். தன் நேசத்துக்குரியவனதும், தன் தோழியினதும் வாழ்க்கை சீர் குலைந்து போய் விடக்கூடாது என்பதற்காக அந்த அயோக்கியன் இழுத்த இழுப்புக்கெல்லாம் அவனுடைய கைச்சங்கிலி நாய் போல பின்னால் செல்லுகின்றாள் நாயகி. மையப் பாத்திரம் நடிகை பாரதிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் காஞ்சனாவும் தன் பங்கை மிகவும் சிறப்பாக செய்திருந்தார். 1971 இல் ஸ்ரீதரின்



முகாமில் இருந்த என்.சி. சக்கரவர்த்தியின் இயக்கத்தில் வெளிவந்த "உத்தரவின்றி உள்ளே வா" படத்திலும் காஞ்சனாதான் கதாநாயகி. காதலிக்க நேரமில்லை, அதே கண்கள் திரைப்படங்களின் தொடர்ச்சியாக ரவிச்சந்திரனுடன் இதிலும் ஆடிப் பாடியதைத் தவிர விசேஷமாக எதையும் குறிப்பிடத் தோன்றவில்லை.

காஞ்சனாவின் அழகில் அமைதியின் நதி ஒளிந்திருந்தது. ஆடைக் குறைப்புகளால் அந்த மௌனக் குகையின் ரகசியத்தைக் கண்டு பிடித்து விடலாம் என்றே தமிழ்த் திரையுலகம் முயன்றதாகத் தெரிகின்றது. ஆனால் அது தரிசித்தது உண்மையான அவரல்ல. அமைதியான ஆறு ஏதோ ஒரு ரகசியத்தை ஒளித்து வைத்திருக்கின்றது. பல வெற்றிப் படங்களில் அவர் நடித்திருக்கின்றார். ஆனால் அந்த வெற்றி அவரால் வந்து சேர்ந்ததல்ல. எனினும் அந்த வெற்றிகளைக் கேடயமாக்கிக் கொண்டு திரையுலகில் போராடி அவர் முன்னுக்கு வந்திருக்க வேண்டும். சவாலான பாத்திரங்களில் அவர் நடித்துத் தன்னை நிரூபித்திருக்க வேண்டும். தமிழ்த் திரையுலகின் மூவேந்தர்கள், குட்டி ராஜாக்கள் எல்லோருடனும் ஜோடி சேர்ந்துங் கூட காஞ்சனாவால் "பட்டத்து ராணி"யாக கடைசி வரை முடியவில்லை. பந்தயத்தில் காலம் அவரை ஜெயித்து விட்டது. இழப்பு காஞ்சனாவுக்கா, தமிழ் ரசிகர்களுக்கா என்பதைத்தான் தீர்க்கமாக சொல்ல முடியவில்லை.




PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE
FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








**100% Guaranteed Result**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனா பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

பிளெக் மஜிக் 3 நாட்களுக்குள்
அகற்றி பாதுகாப்பு கொடுக்கப்படும்.

**Tel.:647.856.0559**

**GTA Square Mall (2nd Floor)**
**5215 Finch Ave. E., Unit #257**
**Scarborough ON M1S 0C2**
**(FINCH & MIDDLEFIELD)**

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப் பொருட்களை வழங்குவது




Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# சார்பியல் - 32

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

விண்வெளி ஆய்வு கூடத்திற்குக் கிடையான வேகம் இல்லை எனில், வீரர்களும் ஆய்வு கூடமும் கீழே வந்து புவியில் விழுந்துவிடும் என்பதனைச் சென்ற தடவையில் கூறியிருந்தேன். மேலும் என்ன நிகழ்கின்றன எனப் பார்ப்போம்.

தரையை வந்து ஆய்வுகூடம் மோதியதும், அவர்களிடம் இயல்பு விழுகை இல்லாது போகும். அந்நிலையில் அவர்கள் கொண்ட வேகமும் அதன் காரணமாக அவர்கள் பெற்றிருந்த உந்தமும் (உந்தம் என்பது திணிவினதும் வேகத்தினதும் பெருக்குத் தொகை ஆகும்.) புவி தாங்கியதால் ஏற்படும் மறுதாக்க விசையும் சேர்ந்து பெரிய அனர்த்தத்தினை உண்டு பண்ணிவிடும். அதுபோலவே புவியின் ஈர்ப்புப்புலத்துள் ஆய்வுகூடம் இல்லை எனில், அதாவது நாற்பரிமாண வெளியில் புவி ஏற்படுத்திய வளைவுக்குள் இல்லாது இருப்பின், புவியைச் சுற்றாது அண்டவெளியில் எங்கேயோ பறந்து சென்றுவிடும். இதுபோலவேதான் சந்திரனும் எப்பொழுதும் புவியினை நோக்கி விழுந்து கொண்டு இருக்கின்றது.

விழுகின்ற அப்பிளை நாம் பிடித்துக் கொண்டோமேயாயின் அப்பிளின் பாரத்தினை நாம் உணர்ந்து கொள்வோம். ஏனெனில் அதன் இயல்பு விழுகையை நாம் தடுத்து அது புவியில் விழுவதைத் தடுப்பதற்கு அப்பிளில் ஒருவிசையை நாம் கொடுக்கிறோம். அதனால் அப்பிள் ஒரு நிறையைக் காட்டுகிறது.

ஆக, ஈர்ப்பு என்பது நியூட்டன் கூறியது போன்று ஒருவிசையல்ல, நாற்பரிமாண வெளியின் வளைவின் இயல்பு என்று அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்தவம் கூறுகின்றது. இதனைத் தெளிவுபடுத்துவதற்கு விஞ்ஞானிகள் காட்டும் சிறந்த எடுத்துக் காட்டினையும் பார்ப்போம்.

### இரப்பர் சீற் விளக்கம்

நியூட்டனின் ஈர்ப்புவிசை என்பதுடன் ஒப்பிடுகையில் அயன்ஸ்ரைனின் நாற்பரிமாண வெளிநேரப் பிரபஞ்சத்தின் வழியே ஈர்ப்பிற்கான விளக்கத்தினை விளங்கிக் கொள்வதில் கொஞ்சம் சிரமம் இருக்கலாம். ஏனெனில் நாற்பரிமாண சிந்தனை வடிவம் என்பது எம்மிடம் சிறிதளவேனும் இல்லை. இதனை விளங்கிக் கொள்வதற்காக விஞ்ஞானிகள் இரப்பர் சீற் உதாரணத்தினை முன்வைக்கின்றார்கள். வெளிநேர வளைவில் பொருட்கள் இயங்குகின்றன என்பதனையும், நாற்பரிமாண வெளிநேரம் என்பதனை எவ்விதம் பொருட்கள் வளைவுறச் செய்கின்றன என்பதனையும் காட்டுவதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் இருக்க முடியாது என்பது எனது எண்ணம்.

நன்கு ஈர்க்கப்பட்ட (இழுக்கப்பட்ட) பெரிய இரப்பர் சீற் ஒன்றைக் கருதுங்கள். வசதியாக அது கிடையாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் கருதுங்கள். (விரும்பினால் செய்தும் பார்க்கலாம், அதில் தப்பேதுமில்லை) சரி, இப்போது சிறிய மாபிள் ஒன்றினை இந்த இரப்பர் சீற்றில் உருட்டி விடுங்கள். என்ன நிகழும்? அச்சிறிய மாபிள் இரப்பர் சீற்றில் ஒரு நேர்ப்பாதையில் உருண்டு கொண்டே போகும், அல்லவா! ஏனெனில் இரப்பர் சீற்றில் எந்தவொரு வளைவும் இல்லைத்தானே!

அடுத்து என்ன செய்வோம் என்றால், பெரிய பாரமான இரும்புக் குண்டு ஒன்றினை இரப்பர் சீற்றின் நடுவே மெதுவாக வைத்துவிடுங்கள். என்ன நிகழும் என எதிர்பார்க்கின்றீர்கள்? இது என்ன கேள்வி, இரும்புக் குண்டு இருக்கும் இடத்தில் இரப்பர் சீற் கீழாகப் பதியும். அத்துடன் சூழவுள்ள பகுதி இரும்புக் குண்டின் பாரத்திற்கு ஏற்பவான தூரத்திற்கு பதிந்து, அல்லது வளைந்து காணப்படும், என்கின்றீர்கள், அப்படித்தானே! பலே, பலே. இனி மீண்டும் எமது மாபிளுக்கு வருவோம். இரும்புக் குண்டிற்குத் தூரவாக, வளைவேதும் இல்லாத பகுதியில் இந்த மாபிளை உருட்டி விடுங்கள். என்ன நிகழும்? மாபிள் பாதிப்பு ஏதும் இன்றி முன்னரைப் போலவே நேர்கோட்டில் செல்லும். அடுத்து இன்னொரு மாபிளை, அது இரப்பர் சீற்றின் வளைவானது ஆரம்பிக்கும் பகுதியை அண்மிக்குமாறு வேகமாக உருட்டிவிடுங்கள். இப்போது என்ன நிகழும்? முதலில் மாபிள் நேராகச் செல்லும் பின்னர் இரப்பர் சீற்றின் வளைவை அண்மித்ததும், இரப்பர் சீற்றின் வளைவின் காரணமாக சிறிது வளைந்து சென்று, பின்னர் இரப்பர் சீற்றின் வளைவுறாத பகுதியைச் சென்றடைந்து, அதன் பின்னர் மீண்டும் நேராகவே கிடையான இரப்பர் சீற்றில் செல்லும்.

இன்னொரு மாபிளை எடுத்து இரப்பர் சீற்றின் வளைந்த பகுதியில் மெதுவாக வைத்துவிடுங்கள். மாபிள் வளைவில் உருண்டு கொண்டு போய் இரும்புக் குண்டுடன் மோதிக் கொள்ளும், அல்லவா!

**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca



உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



நகைச்சுவைத் தொடர் 275

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நிதன்





சரஸ்வதி பூசை, விஜயதசமி முடிந்துவிட்டது. கல்வியா செல்வமா வீரமா.. கவியரங்கம், பட்டிமன்றம், நாடகங்கள் பெரிதாக ஒரிடமும் இல்லை.



ஆனால் பெருமைப்படக்கூடிய வகையில் இசைக்கல்லூரிகள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



இசையை பயிற்றுவித்தாலோ பயின்றாலோ போதாது. சளைக்காமல் மேடையேற்றவும் மேடை நிகழ்சிகளின்போது சக மாணவர்களையும் பார்வையாளராக பங்கெடுக்கச் செய்யவேண்டும்.



செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் நிகழ்சிகளுக்குச் சென்றால் ஒரு நடன அல்லது இசை நிகழ்ச்சி முடிந்ததும் செக்கண்ட் புளோர் செல்லம்மா சொல்லுவா பார் இப்ப ஒரு பட்டாளம் போகப்போகுது என்று சொல்லி முடிப்பதற்கு முன் மண்டபத்தில் கால்பங்கு வெற்றிடமாகிவிடும்.

தமக்கு கைதட்டி பாராட்டிய மற்றவர்கள் நிகழ்சிகளைப் பாராட்டுவதில்லை. ஒரே நாளில் பல நிகழ்ச்சிகளுக்கு ஓம் சொல்லிவிட்டு தேர்தல் பிரசார கடைசி நேரத்தில் ஓடித்திரியும் அரசியல்வாதிகள் போல மாணவர்களும் ஆசிரியர்களும் ஓடும் ஓட்டம் சொல்லமுடியாது.

ஒரு சில ஆசிரியர்கள் மட்டும் வாரா வாரம் வகுப்புகள் ஆரம்பிக்கும்போது கடந்தவாரம் எந்த நிகழ்ச்சிக்குப் போனீர்கள், நிகழ்ச்சி எப்படி, யார் பாடினார்கள், என்ன பாட்டு, என்ன ராகம், யார் வயலின், யார் மிருதங்கம் என கேள்விகளைக் கேட்டு வகுப்புகளை ஆரம்பிக்கின்றனர். அவர்களை பெற்றோரும் நாமும் பாராட்டுவோம்.

எம்மிடையே படிப்புடன் பகுதிநேரமாக இசை பயிலும் இசைவளர்க்கும் கனேடிய சூப்பர் கலைஞர்கள் உள்ளனர்.
வாழ்க! வளர்க!



இந்தியாவில் மத்தியபிரதேசத்தில் விஜயதசமிக்கு வருடாவருடம் லட்சக்கணக்கான மக்கள் கூடுவது வழக்கம். இவ்வருடம் விஜயதசமி யன்று சன நெரிசலில் 100க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.
ஆக்குவாய் - காப்பாய் - அழிப்பாய் - அருள்தருவாய்.

சுதந்திரமடைந்த நாடுகளில் ஓயாத சண்டைகள் பல முருகேசர் எப்போதோ உலகர் குழாமுக்கு சொன்னது. இன்று உலகருக்கு ஞாபகம் வந்தது உண்மைதான்.

மல்லாகம் கோட்டிலும் யாழ்ப்பாணம் மற்றும் பரவலாக வேலி பிடுங்கப்பட்ட பல இடங்களிலும் பதியப்பட்ட வேலிச்சண்டை வழக்குகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. வழக்குப்போட்டவர்களும் வாதாடத் தொடங்கியவர்களில் இன்று எத்தனைபேர் உயிரோடுள்ளனர்...?






“ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா”

ஐ பொட் இல்லாமலே ஆயிரம் பாடல்கள் உலகரின் மனதில் எழுந்து விழுந்தன.

மண்ணாசை...




பாகிஸ்தான் இந்தியா இந்தியா சீனா இதற்கும் மேலாக பிரிய விரும்பும் காலிஸ்தான் ஆந்திரா ஆங்கிலேயர் விட்டுச் சென்றபின்பும் விடுபடாத தமிழர் பிரச்சினை.
முடிசார்ந்த மன்னரும் பிடி சாம்பல் ஆவது திண்ணம்.

‘அரசன் அன்று கொல்லும். தெய்வம் நின்று கொல்லும்’ கோயிலில் கதாப்பிரசங்கத்தில் யாரோ சொன்னது உலகர் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

தூக்கக் கலக்கத்துடன் வந்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உலகண்ணை இண்டைக்கு நான் நியூஸ் கேட்கேல்லை. நேற்றைக்கு அவல் சுண்டல் சக்கரைச்சாதம் எல்லாம் கண்டநிண்டபடி சாப்பிட்டு நித்திரையாப் போனன்.
யாழ்ப்பாணத்திலை ஆர் ஆர் புது மந்திரி என அறிவிச்சுப் போட்டினமோ? என கேட்டுக்கொண்டே வந்தா.

பதவி ஆசையென்பது தீர்க்கமுடியாத நோய். பரதனுக்கு பதவி வேணுமென ஆரம்பித்த இராமாயணமும் ஆட்சி முலம் சூழ்ச்சியால் பாண்டவரை வனவாசம் அனுப்பி தாமே தமக்கு மரணத்தை வருவித்த பாரதமும் பக்கம் பக்கமாகப் படித்தாலும் பதவியாசை ஒருவருக்கும் விடுபடுவதில்லை.



யாரோ பதவிக்கு வருவதற்காக பக்கவாத்தியம் வாசித்த நகைச்சுவை நடிகர் வடிவேலு ஆப்பிழுத்த குரங்கின் நிலைதான்.



உலகெங்கினுமுள்ள தமிழர் 24 மணி நேரமும் கவலை விட்டு சிரிக்க ரசிக்கும் வடிவேலுவின் நகைச்சுவை பலரைச் சிரிக்க..வைத்தாலும் அவரின் கஸ்டமும் கவலையும் அவருக்குத்தான் தெரியும்

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா.. வஞ்சகன்....கன்னனடா.... என்ற பாடலுக்கு உதாரணம் வடிவேலு.



பதவி வேண்டாம் என காதலுக்காக பதவி துறந்த 8 ஆவது சாள்ஸ் மன்னன்.
ஆசையே துன்பத்திற்கு காரணம் என அரச சுக போகத்தை விடுத்த சித்தார்த்தர் புத்தர்.
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே என்ற பட்டினத்தார் செல்வந்த வாழ்கை துறந்தவர்.
பதவி ஆசை கொண்டவர்கள் சற்று நேரம் ஒதுக்கி இவற்றைப் படிப்பார்களா?

அரசுப் பதவியும் அமைச்சுப்பதவியும் துன்பத்துக்குக்காரணம் – கலகலப்பு

ஞாபகம் இருக்கிறதா? ஒக்ரோபர 1 - 15



15. சீரடி பாபா நினைவுதினம் (1918)

16. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட தினம்

17. கவியரசு கண்ணதாசன் நினைவு தினம்

17. உலக வறுமை ஒழிப்பு நாள்



18. தொமஸ் ஆல்வா எடிசன் (1931) நினைவு தினம்.

18. ஐப்பசி வெள்ளி விரதம் (ஆரம்பம்)

19. மயில்வாகனம் நிமலராஜன் நினைவுதினம் (2000)

24. ஐக்கிய நாடுகள் தினம் UNITED NATION DAY (1945)



31 HALLOween DAY


## தமிழ்ப்பூங்கா நடத்தும் பாச்செண்டு சிறுவர் பாடற் போட்டி - 2013

- முன்பள்ளிச் சிறாருக்கானது (2010 இன் பின் பிறந்தோர்) • இளம்மழலைச் சிறாருக்கானது (2009 இல் பிறந்தோர்)
- முது மழலைச் சிறாருக்கானது (2008 இல் பிறந்தோர்)

மாணவர் எண்ணிக்கையைப் பொறுத்துப் போட்டிகள் ஸ்காபரோ, மிசிசாகா, மொன்றியால் ஆகிய இடங்களில் நடைபெறும்.

- போட்டிக்குரிய பாடல்கள் பாச்செண்டு இறுவட்டிலிருந்து தெரிவுசெய்யப்படும்
- ஒவ்வொரு பிரிவினருக்கும் ஆறு, ஆறு பாடல்கள் கொடுக்கப்படும்.
- விண்ணப்ப முடிவு நாள்: **06-11-2013** • விண்ணப்பக் கட்டணம்: பத்து டொலர்

விண்ணப்பங்களைக் கையளிக்கும் முகவரி:
தமிழ்ப் பூங்கா, **328, Passmore Ave. Unit.# 25. (Passmore & Middlefield)**
சபா. அருள்சுப்பிரமணியம் - 905.479.5375 / 647.378.3006

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்னைய மாணவர் சங்கம்

## வருடாந்த இரவு விருந்து நிகழ்ச்சி

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்னைய மாணவர் சங்கம் கனடாக் கிளையின் 2013ம் ஆண்டு வருடாந்த இரவு விருந்து நிகழ்ச்சி **Velautham Nite** ஆறாவது முறையாக இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை இரவு 5:30 மணிக்கு ஸ்காபறோவில் உள்ள Baba Banqet Hall விருந்து மண்டபத்தில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக மதிப்பிற்குரிய மத்திய பாராளுமன்ற அங்கத்தவர் இராதிகா சிற்சபையீசன் அவர்கள் பங்குபற்றுவார். இந்நிகழ்வில் நீங்களும் பங்குபற்றி மகிழும்படி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் முன்னைய மாணவர்கள், அவர்கள் குடும்பத்தினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் சங்கத்தின் நிருவாகசபை அன்புடன் அழைக்கின்றது.

**Contact: 416.454.6360 / 416.282.0376**




# இறை உதவி ஜாடி

எனக்கு சவாலாக இருப்பவற்றைப் போட்டு வைக்க ஒரு தெய்வீக இடம் எனக்கு இருப்பதனால் நான் இறைநம்பிக்கையை உணர்ந்து அதன் சக்தியை வெளிப்படுத்துகிறேன்.

உன்னிடம் ஒரு கடவுள் ஜாடி இருக்கிறதா? இல்லையா? வெற்று ஜாடியையோ, போத்தலையோ கழுவிச் சுத்திகரித்து உனது இறை ஜாடியைத் தயாரித்துக் கொள். ஆமாம்! இப்போ ஒரு குணப்படுத்தும் கருவியாக அந்த ஜாடி அல்லது போத்தலை மாற்றி உபயோகிக்கலாம். உன்னிடம் ஒரு இறை ஜாடி இருந்தால் உனது கவலைகள், வேதனைகள் யாவும் சீக்கிரம் பறந்தோடி விடும்! எப்படி இந்த ஜாடி உனக்கு உதவும் எனப்பார்ப்போமா?

நீ நிறைவேற்றிட முயற்சிக்கும் உனது சகல கடமைகள், பொறுப்புகள், விருப்பங்கள் யாவற்றையும் முதலில் முக்கியத்துவத்தின்படி முதன்மைப்படுத்தி பட்டியலிடு. பட்டியலில் முதலாவதாகச் செய்யப்போவதைத் தெரிவு செய். பட்டியலில் இருக்கும் மற்ற விடயங்களை இறைஜாடிக்குள் போடு. எப்படிப் போட வேண்டும் தெரியுமா? நீ செய்ய விரும்பிய பட்டியலிட்ட ஒவ்வொரு சமாச்சாரத்தையும் சுருக்கமாக வெவ்வேறு தாள்களில் ஒன்று இரண்டு என எழுதி அதை அந்தப் பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் எனும் உனது விருப்பத்தூண்டுதலை காகிதத்தில் இறைவனுக்கு எழுது. அதற்குப்பின் பிரச்சனையின் ஞாபகம் வரும்போது ‘அதை நான் இறைவனிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டேன், இனி அவர் பார்த்துக் கொள்வார், அவர் விருப்பப்படி நடப்பது நடக்கட்டும் என்ற சரணாகதியுடன் காத்திரு!.



ஏதோ ஒரு காரணத்தால் இறை ஜாடியில் இருக்கும் பிரச்சனை தீராமல் திரும்பித் தலையெடுத்தால் சமாச்சாரத்தை உள்ளபடியே திரும்பவும் எழுதி, இறை ஜாடிக்குள் போடு! ஜாடிக்குள் கடவுளை நம்பி எழுதிப்போட்ட பிரச்சனையை உனது விருப்பப்படி நீயாகவே தீர்க்க முயற்சி செய்யாதே! அடுத்தாக நீ என்ன செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல் நிச்சயம் உனக்கு வரும் என நம்பிக்காத்திரு!

உனது வாழ்வில் பூதாகாரமாக வளர்ந்து கொண்டே போகும் சில பிரச்சனைகளை எவ்வாறு சமாளிப்பது என நீ இன்றுவரை திண்டாடியிருக்கலாம். இன்று ஒரு இறை உதவி ஜாடியை உனக்காக நீயே தயாரித்துக்கொள். உன்னால் இப்போ தீர்க்க முடியாதிருக்கும் சில கஷ்டமான விடயங்களை இறைவன் தீர்ப்பதற்காக அவரிடம் விடுவதற்காக அந்த ஜாடியை உபயோகித்து சரணடைந்து விடு.

**என்னால் சில சமயங்களில் தீர்க்க முடியாத பிரச்சனைகளை இறைவனால் தீர்க்க முடியும் என்பதை நான் முற்றிலும் உணர்ந்து இன்று அவருக்கு நன்றி கூறி அவரை ஸ்தோத்திரிக்கின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 226

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214
416.907.6897



லலிதா புரூடி

**பரதநாட்டிய வகுப்பு ஆரம்பம்**

எதிர்வரும் புரட்டாதிமாதம் 13ஆம் திகதி (தமிழுக்கு 27ஆம் திகதி)
விஜயதசமி அன்று புதிய பரதநாட்டிய வகுப்புக்கள்
ஸ்ரீமதி எமி ரவிசங்கர்
அவர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலைத்தேய கலாசாரம் நமக்கு ஒரு முகமூடி மட்டுமே.
தமிழா உன் பண்பாடு பாரம்பரியமானது.
உன் கலாசாரமே மேன்மையானது.
தமிழா உன் கலாசாரத்தை உன் வாரிசுகளும் பின்பற்றட்டுமே
தமிழர் கலை, கலாசாரம் வாழ்க! வளர்க!

CONTACT: 416.832.0010

33 SUMMERLEA DRIVE
MARKHAM ON

14 FLINTRIDGE RD.
Scarborough ON

bharatham2009@yahoo.com
www.futurecreations.info



# 16வயது...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

இருக்கும். ஆனால் இதை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். Jack பின்னர் எப்படி இதை சுகமாக கண்டுபிடிக்க முடியும் என்று யோசித்து, ஆராய்ச்சி செய்ய தொடங்கினார். அவருடைய யோசனை, பாடசாலையில் Antibodies பற்றி படிக்கும் போது அவருக்கு வந்தது.

Carbon tubes இன் மேல் இந்த Antibodies ஐ வைத்து விட்டால், அந்த Antibodies இரத்தத்தில் இருக்கும் Mesothelin புரதத்தை
மட்டும் கவரும். இதனால் அந்த Nano tube இல் மின்சாரம் ஓடும். இதை மின்சாரத்தை அளக்கும் Ohm Meter ஐ பாவித்து அளந்து இரத்தத்தில் எவ்வளவு Mesothelin இருக்கிறது என அறியலாம்.

இதை Jack உம் முதல் கூறிய விஞ்ஞானியும் சேர்ந்து செய்து பார்த்த



போது வேலை செய்யும் என்று கண்டுபிடித்தனர். இம்முறை சில வருடங்களில் பொதுவாக பாவிக்கப்படும்.

**முயற்சி திருவினையாக்கும்.**

Pre-Approvals | Purchases | Renewals | Refinances | New to Canada



**Subo Thevarajah, AMP**

MORTGAGES

SUBOSHAN.COM

416.627.2222

**வீடு வாங்க விற்க**

Assist you with defficult Mortgages approval, Home inspection & Lawyer Services Comptitive Ratest / Free

உங்கள் வீட்டை விற்க முன் என்னை அழையுங்கள் இலவச மதிப்பீட்டுக்கு!!!!

printhahomes@gmail.com

printhahomes.com

HomeLife / Future Realty Inc., Brokerage*

205-7 Eastvale Drive

Markham Ont, L3S 4N8

Bus: 905.201.9977

Fax: 905.201.9229



Printhini Nagaratnam

Sales Representative

*Independently owned & operated

Cell: 416.836.3091

$$$ Cash Back $$$

Rewards For Referrals

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

**SASI CHELVARATNAM**

*Sales Representative*

Direct: 416.725.1125 / 416.858.4828

Bus : 416.321.6969

HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*

5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2

*Independently Owned & Operated



"Let me help you make the right choice"

**SchurenSriskandarajah** B.A

Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*

7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8



SCHUREN.CA • 416.333.9393



Low Mortgage Rates

**TD Canada Trust**

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-800-809-9154

supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER

Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit

Consolitation Existing Debts Refinancing

Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

**RealEstate / Mortgage / Commercial Investments**



MCCOWAN & HWY 401

2 bedroom condo for sale.

2 Washroom.

Price $235,000



BIRCHMOUNT & ELLESMERE

2 Bedroom condo for sale.

2 Washroom.

Price$279,900



BATHURST & MAJOR MAC

House for sale. Fin bsmt.

4 Washrooms.

Price$799,900



MARKHAM & 16TH AVE

3 Bedroom house for sale.

3 washrooms.

Price$508,000



MARKHAM & MAJOR MAC

5 Bedroom house for sale.

4 Washrooms.

Price$869,000



KEELE & WILSON

4 Bedroom house for sale.

3 Washrooms.

Price $689,900

*Having difficulty of getting your Mortgage Please Contact me*



RE/MAX

**A. Anton Jeeva B.Eng**

Hall of fame award winner

Cell: 416.575.5055

Office: 416.321.2228

E.mail: anton.jeeva@gmail.com

Web:newcondoproject.ca & antonjeeva.com

2210 Markham Rd.,#1, Toronto, ON M1B 5V6

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

REAL ESTATE List Buy Sell

TOP 5%

SALES REPRESENTATIVES IN CANADA

CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012



HomeLife GTA Realty Inc., Brokerage

Raj Paramasamy Sales Representative

416-587-1619

raj.paramasamy@hotmail.com

Guaranteed Result

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com www.tamilvanakkam.com

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED



**HomeLife/GTA Realty Inc.** Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto, ON

Tel.: 416.321.6969

Every Story has a different Rate

What's Your's

Solution for every Mortgages

BonaFide

· New Mortagages · Refinance · First & Second Mortgages

New to Canada, Mortgage Switch, Self Employed

Pre-approvals, Residential & Commercial



Thayalan Gobalakrishnan

Cell: 416.575.3211 / Fax:1.888.545.0462

E-Mail: thaya.gobal@gmail.com

தயாளன் கோபாலகிருஷ்ணன்

Call me for any Mortgage Financing Questions?